# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 28 வியாழக்கிழமை (12.05.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 167




03 சாதனை படைக்கும் மலிங்க



14 தேர்தலை ஒரே நேரத்தில் நடத்துக




16 எவரையும் தாக்கலாம் எய்ட்ஸ்..!



30 எப்படி நல்லிணக்கம் மலரும்?

# ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இலங்கை மீது குற்றச்சாட்டு

## வெளிநடப்புச் செய்தார் பாலித ஹோகன்ன

நியூயோர்க்,மே12

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் நேற்று இலங்கை மீது மனித உரிமை மீறல் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப் பட்டன. 'பொதுமக்களின் பாதுகாப்பு' என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற கருத்தமர்வில், ஐ.நாவின் அதிகாரிகள் பலரும் இந்தக் குற்றச்சாட்டுகளைச் சுமத்தினர். மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புச் சொல்ல வேண்டிய நிலையில் கொழும்பு அரசு இருக்கின்றது என்று ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தலைவர் நவி பிள்ளை தெரிவித்தார்.

அதிகாரிகள் குற்றச்சாட்டுக்களை அடுக்கியதை அடுத்துக் கோபமடைந்த ஐ.நாவுக்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி பாலித ஹோகன்ன, பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் இருந்து வெளிநடப்புச் செய்தார்.

இலங்கை, லிபியா, சிரியா, யேமன், பஹ்ரெய்ன், ஐவரிகோஸ்ட் போன்ற நாடுகளில், பொதுமக்கள் தாக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும் இதற்கு இந்த நாடுகளின் அரசுகளே பொறுப்பு என்றும் ஐ.நா. அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்புச் சபையின் இந்த அமர்வில் கருத்து வெளியிட்ட ஐ.நாவின் (31ஆம் பக்கம் பார்க்க)

## மேல் நடவடிக்கை குறித்து பான் கீ - மூன் ஆலோசனை

நியூயோர்க்,மே12

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பில் மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கை என்ன என்பது குறித்து ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ - மூன் தீவிரமாக ஆலோசித்து வருகிறார் என்று அவரது பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்தார்.

ஐ.நா. செய்திகளை வழங்கும் 'இன்னர் சிற்றி பிரஸ்' நிறுவனத்தின் செய்தியாளர் எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்கையிலேயே பர்ஹான் ஹக் இவ்வாறு தெரிவித்தார்.

நிபுணர் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் பொதுச் செயலர் சிபார்சு செய்தால் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அல்லது பொதுச் சபையில், இலங்கை மீதான சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமா என்பது தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தப்படுமா என்று பேச்சாளரிடம் 'இன்னர் சிற்றி பிரஸ்' கேட்டதற்கு, ''நாங்கள் செய்வதைப் பொறுத்திருந்து பாருங்கள்'' என்றார் ஹக்.

நிபுணர் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் ஐ.நாவில் என்ன செய்ய முடியும் என்று, (31ஆம் பக்கம் பார்க்க)

## "ஒன்றுபட்டுக் குரல் கொடுப்போம்" தமிழகத்தில் ஆதரவு வலுக்கிறது

சென்னை,மே12

இலங்கை போர்க்குற்றம் தொடர்பான ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கைக்கு தமிழக அறிஞர்கள், திரைத்துறையினர் மற்றும் தமிழ்ச் சமூகத்தினர் இணைந்து முழு ஆதரவு தெரிவித்துள்ளனர். இது தொடர்பாகக் கூட்டறிக்கை ஒன்றையும் அவர்கள் வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:-

இந்திய அரசியல் குறித்தும் தமிழக அரசியல் குறித்தும் தமிழக அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புக்கள் தமக்குள் எத்தனை கருத்து வேறுபாடுகளைக் கொண்டிருந்தாலும் கையறு நிலையில் இருக்கும் எமது இரத்த சொந்தங்களான ஈழத்தமிழ்மக்களின் நலன் கருதி அவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டி நாம் ஒன்றிணைந்து போராடவேண்டிய நேரம் இது.

எமது ஒன்றுபட்ட குரல் மட்டுமே (29ஆம் பக்கம் பார்க்க)

## பங்குச் சந்தை மோசடியில் ராஜ் ராஜரட்ணம் குற்றவாளி

### அமெரிக்கா நேற்று அறிவிப்பு



நியூயோர்க்,மே12

இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட செல்வந்தர் ராஜ் ராஜரட்ணம், பங்குச் சந்தை மோசடி தொடர்பில் நேற்றுப் புதன்கிழமை அமெரிக்காவில் குற்றவாளியாக அறிவிக்கப் பட்டுள்ளார்.

அவருக்கு எதிராக முன்வைக்கப் பட்ட 14 குற்றச்சாட்டுகளும் நிரூபிக்கப்பட்டுள்ளதாக ரொய்ட்டர்ஸ் இணையத் தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தநிலையில் அவருக்கான இறுதித் தீர்ப்பு (29ஆம் பக்கம் பார்க்க)

## புலிச்சந்தேக நபர்கள் பற்றிய விவரம் கூட்டமைப்பு அரசிடம் கையளிக்கும்

### இன்று 6ஆவது தடவையாக சந்திப்பு

கொழும்பு,மே12

நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள புலிச் சந்தேக நபர்கள் தொடர்பான தகவல் அடங்கிய அறிக்கை ஒன்றை அரசுடனான பேச்சுகளின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கையளிக்கும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

அரசியல் தீர்வு தொடர்பில் அரசு - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றுக்கு இடையிலான ஆறாம் கட்டப் பேச்சுகள் இன்று நடைபெறும். இதன் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசிடம் பிரஸ்தாப அறிக்கையைக் (29ஆம் பக்கம் பார்க்க)

## ரணில் உட்பட 75 பேருக்கு நீதிமன்றில் ஆஜராக உத்தரவு

கொழும்பு,மே12

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட 75 பேரை எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றில் ஆஜராகுமாறு கங்கொடவில நீதிவான் நீதிமன்றம் நேற்று அழைப்பாணை விடுத்தது.

ஐ.தே.கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவி நியமனம் கட்சி யாப்புக்கு முரணானது என்றும், குறித்த நியமனத்தை இரத்துச் செய்யவேண்டும் என்றும் மேல்மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி மைத்திரி (29ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கும் பொறுப்பு இந்தியாவுக்கு உண்டு

### முன்னாள் நீதிபதி சச்சர் வலியுறுத்து

புதுடில்லி,மே12

இலங்கையில் போரின் இறுதியில் இடம் பெற்ற சம்பவங்கள் குறித்து ஆராய்ந்த ஐ.நா நிபுணர் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் செயற்படுமாறு, இலங்கை அரசுக்கு வலியுறுத்த வேண்டிய பொறுப்பு இந்தியாவுக்கு இருப்பதாக புதுடில்லி உயர்நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி ரஜிந்தர் சச்சர் வலியுறுத்தியுள்ளார்.

புதுடில்லியில் தமிழ் மாணவர் அமைப்புக்கள் சார்பில், ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பாக நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட கருத்தரங்கில் பேசும் போதே அவர் இந்தக் கருத்தை வலியுறுத்தி னார்.

இந்தக் கருத்தரங்கில் உரையாற்றிய பின்னர் அவர், பி.பி.சி (29ஆம் பக்கம் பார்க்க)

## கருணாவின் இணைப்பதிகாரி மட்டக்களப்பில் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு,மே12

மட்டக்களப்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினரும், அமைச்சர் கருணாவின் இணைப்பதிகாரியுமான மதி என்று அழைக்கப்படும் இராசமாணிக்கம் மதியழகன் (வயது 38) நேற்றுப் பிற்பகல் 2.50 மணியளவில் அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். நேற்று புதன் கிழமை பிற்பகல் மட்டக்களப்பு (31ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
12 மே 2011 வியாழக்கிழமை

# போட்டுத் தாக்குகிறார் கெயில் வாங்கிக் கட்டுகின்றன எதிரணிகள்



-அருண்மொழி-

ஐ.பி.எல்லின் 55 ஆவது ஆட்டம் ஜெய்ப்பூரில் நேற்று இடம்பெற்றது. நேற்றைய ஆட்டத்தில் ஹோக்லி தலைமையில் பெங்களூர் றோயல்ஸ் சலஞ்சர்ஸ் அணியும், வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் மோதிக் கொண்டன. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பெங்களூர் அணி முதலில் ராஜஸ்தான் அணியை துடுப்பெடுத்தாடுமாறு பணித்துக் கொண்டது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக வொட்ஸன் - ராவிட் ஆகியோர் கள மிறங்கினர். சகீர்கான் சிறப்பாக தனது முதலாவது ஓவரை வீசி முடித்தார். இரண்டாவது ஓவரில் இரண்டு பவுண்டரிகள் அடிக்கப் பட்டதுடன் ராஜஸ்தான் றோயல்ஸ் ஸின் அதிரடி ஆட்டம் தொடங்கியது. அரவின்ட் ஓவரிலேயே வொட்ஸன் அந்த இரண்டு பவுண்டரிகளையும் அடித்து அசத்தினார். அடுத்த ஓவர் சகீர்கான் வீசினார். அவரது பந்து வீச்சுக்கு ராவிட் லடி கொடுத்தார்.

நான்காவது ஓவரை வீசுவதற்காக
கப்பட்டார். முதலா வது பந்தையே
வீசினார். அதற்கு கிடைத்த 'இல
தான் சரிவரப் பயன்படுத்த
கிடைத்த அரிய 'ரன் அவுட்'
களூர் றோயல்ஸ் சலஞ்
பாட்டம் மூலம் 42
றுக்கொண்டனர். எட்
வொட்ஸன் எதிர்
சிக்ஸர் என்று
பத்தாவது
முதலாவது

தக்க பதி

லங்கா வெல்த் அழைக்
முறை தவறிய பந்தாக
வச உதையையும் ராஜஸ்
வில்லை. ஆறாவது ஓவரில்
சந்தர்பத்தை வீணடித்தது பெங்
சர்ஸ். சிறப்பான ஆரம்ப இணைப்
பந்துகளில் 50 ஓட்டங்களைப் பெற்
டாவது ஓவரை அர வின்ட் வீசினார்.
கொண்டார். அந்த ஓவரில் பவுண்டரி,
அடுத்தடுத்து அடித்து அசத்தினார்.
ஓவரை மீண்டும் அரவின்ட் வீசினார்.
பந்திலேயே பவுண்டரியை அடித்தார்
வொட்ஸன். அடுத்த பந்தை ஓங்கி அடித்தார்.
பரிதாபம், அது டீ வில்லியர்ஸின் கைக்கு சென்று
விட்டது. 29 பந்துகளில் 3 பவுண்டரிகள், 2 சிக்ஸர்
அடங்கலாக 34 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.
அடுத்தடுத்த பந்திலேயே ராவிட்டும் ஆட்டமிழந்து
வெளியேறினார். ராவிட்டின் பிடியை தட்டித் தட்டி எடுத்தார்
அரவின்ட். 31 பந்துகளில் 6 பவுண்டரிகள் அடங்கலாக 37
ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

ரஹானே - போத்தா இருவரும் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைப்பாட்டத்தை தொடர்ந்தனர். வந்த வேகத்தில் அதிரடி காட்டினார் ரஹானே. இருந்தும் இருவருக்குமிடையில் நீண்ட நேரம் நிலைத்திருக்கவில்லை இணைப்பாட்டம். பகிரப்பட்டது 29 ஓட்டங்கள். வீழ்த்தப்பட்டது ரஹானேயின் விக்கெட். 10 பந்துகளில் 17 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ரன் அவுட்டில் வெளியேறினார்.

அடுத்து களமிறங்கினார் ரோஸ் ரெயிலர். மறுமுனையில் போத்தாவின் ஆட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்தார் அரவின்ட். 20 பந்துகளில் 19 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்து வெளியேறினார். ஓவர்கள் முடிவை நெருங்க அதிரடி ஆட்டத்துக்கு முயன்றார் ரெயிலர். இருப்பினும் அவரது அடி பிடியாகிப் போனது. 13 பந்துகளில் 13 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் லங்காவெல்த்தின் பந்து வீச்சிலேயே ஆட்டமிழந்தார். பின்வரிசை வீரர்கள் ஒற்றை ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டனர். இறுதியில் 20 ஓவர்கள் நிறைவில் 146 ஓட்டங்களை ஆறு விக்கெட்டுக்களை இழந்து பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் அரவிந் 34 ஓட்டங்கள் கொடுத்து 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இலகுவான இலக்கு பெங்களூருக்கு. டில்ஷான் - கெயில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கினர். முதலாவது ஓவரை வொட்ஸன் வீசினார். கெயில் அமைதியாய் இருக்க அதிரடிகளில் சரவெடி காட்டினார் டில்ஷான். முதலாவது ஓவரிலேயே இரண்டு பவுண்டரிகள் அடித்து அசத்தினார். போத்தா வீசிய இரண்டாவது ஓவருக்கும் அதே கதிதான். நான்காவது ஓவரை போத்தா வீச ஓங்கியடித்தார் கெயில். அருமையாய் கிடைத்த பிடியெடுக்கும் சந்தர்ப்பத்தை தவறவிட்டார் வோர்ன். திரிவேடியின் ஓவரில் பவுண்டரிகள் அடித்து கலக்கினார் டில்ஷான். 28 பந்துகளில் ஆரம்ப விக்கெட் இணைப்பாட்டம் 50 ஓட்டங்களைப் பூர்த்தி செய்தது. இறுதியில் 64 ஓட்டங்கள் இணைப்பாட்டமாக பகிரப்பட்ட பின்னர் டில்ஷானின் விக்கெட்டை வோர்ன் சரித்தார். 24 பந்துகளில் 8 பவுண்டரிகள் அடங்கலாக 38 ஓட்டங்களைப் பெற்ற நிலையிலேயே ஆட்டமிழந்தார்.

ஹோக்லி அடுத்து நுழைந்தார். டில்ஷான் ஆட்டமிழப்பு வரை அமைதி காத்த கெயில் வெளுக்கத் தொடங்கினார். போத்தாவின் ஓவரில் சிக்ஸர் அடித்து தனது இமாலய கணக்கை கெயில் தொடக்கினார். பின்னர் சகலரது ஓவர்களும் கெயில் அதிரடியில் சிக்கியது. கெயில் ஒரு முனையில் விளாச மறுமுனையில் தொடங் கினார் ஹோக்லி. இருவரது அதிரடியிலும் சிக்கி சின்னாபின்னமானது ராஜஸ்தானின் கோட்டை.

18 பந்துகள் மீதமிருக்கையில் 9 விக்கெட்டுக்களால் ராஜஸ்தானை வீழ்த்தியது பெங்களூர். கெயில் 44 பந்துகளில் 6 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் அடங்கலாக [illegible] ஓட்டங்களை குவித்தார். ஹோக்லி 34 பந்துகளில் 3 பவுண்டரிகள், சிக்ஸர் அடங்கலாக [illegible] ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். ஆட்ட நாயகனாக அரவிந் தெரிவு செய்யப்பட்டார்.

# தீவிரவாதிகளின் குறி ஐ.பி.எல். பக்கம்

இந்தியாவின் பல்வேறு நகரங்களில் ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டி விறுவிறுப்பாக நடந்து வருகிறது. 10 அணிகள் பங்கேற்றுள்ள இந்த போட்டியின் முதல் சுற்று ஆட்டங்கள் விரைவில் முடிவடைய உள்ளன.

பள்ளி, கல்லூரிகளுக்கு கோடை விடுமுறை விடப்பட்டுள்ளதால் ஐ.பி.எல். போட்டிகள் நடக்கும் கிரிக்கெட் மைதானங்களில் ரசிகர்கள் கூட்டம் கட்டுக்கடங்காதபடி நிரம்பி வழிகிறது.

இந்த நிலையில் ஐ.பி.எல். போட்டியை சீர்குலைக்க தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளதை உளவுத்துறை கண்டுபிடித்துள்ளது. மத்திய பிரதேச மாநிலம் இந்தூரில் வரும் 13 ஆம் திகதி கொச்சி-பஞ்சாப் அணிகள் மோதும் ஆட்டம், 15 ஆம் திகதி ராஜஸ்தான்-கொச்சி அணிகள் மோதும் ஆட்டம் என்று 2 ஆட்டங்கள் நடைபெற உள்ளன.

இந்த போட்டிகளின் போது தீவிரவாதிகள் தற்கொலை தாக்குதல் நடத்தக்கூடும் என்று உளவுத்துறை எச்சரித்துள்ளது. இந்தூர் கிரிக்கெட் மைதானத்தில் பாதுகாப்பை அதிகரிக்கும்படி உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

இதையடுத்து இந்தூரில் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மைதான்த்துக்கு உள்ளேயும், வெளியிலும் சுமார் 2 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்புக்காக நிறுத்தப்படுவார்கள். அதிரடிப்படை வீரர்களும் தயார் நிலையில் இருப்பார்கள்.

வெடிகுண்டுகளை செயல் இழக்க செய்யும் நிபுணர்கள், மோப்ப நாய் படை பிரிவினரும் இந்தூர் மைதானத்தில் ரோந்து சுற்றி வருகிறார்கள். இந்தூரில் கைவரிசை காட்ட துடிக்கும் தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் தீவிரவாதிகள் உதவி செய்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

மத்திய பிரதேச மாநிலத்தில் உள்ள சிமி இயக்கத்தினர் மூலம் இந்த தாக்குதல்களை நடத்த தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளதாக உளவுத்துறை தகவல் கொடுத்துள்ளது. இதனால் மத்திய பிரதேசத்தில் உள்ள சிமி இயக்க பிரமுகர்களை பொலிஸார் கண்காணிப்பு வலயத்துக்கள் கொண்டு வந்துளனர். (15)

# நடால் தொடர்ந்து முதலிடம்



ஆண்கள்ஒற்றையர் பிரிவில் ஸ்பெயின் வீரர் ரபெல்நடால்தொடர்ந்து முதலிடம் வகிக்கிறார். சேர்பிய வீரர் நோவாக் ஜோகோவிச் 2 ஆவது இடமும், சுவிட்சர்லாந்து வீரர் ரோஜர் பெடரர் 3 ஆவது இடமும் வகிக்கின்றனர்.அமெரிக்க வீரர்கள் மார்ட் பிஷ் 11 ஆவது இடமும், அன்டிரோட்டிக் 12 ஆவது இடமும் பிடித்துள்ளனர். பெண்கள் ஒற்றையர் பிரிவில் கரோலின் வோஸ்னியாக்கி (டென்மார்க்) தொடர்ந்து முதலிடம் வகிக்கிறார். பெல்ஜியம் வீராங்கனை கிம்கிலிஸ்ஸடர் 2 ஆவது இடமும் ரஷ்ய வீராங்கனை சோனரோவா 3 ஆவது இடமும் பெற்றுள்ளனர்.

அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் 10 ஆவது இடத்தில் இருந்து 17 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார். 38 ஆண்டு கால உலக ரென்னிஸ் தர வரிசையில் முதல் 10 இடங்களுக்குள் அமெரிக்க வீரர் வீராங்கனைகள் இடம் பிடிக்காமல் இருப்பது இதுவே முதல் முறையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (15)

## இன்றைய ஆட்டம்

- சென்னை சூப்ப கிங்ஸ் எதிர் டெல்லி டெயாடெவில்ஸ் (இரவு 8 மணி)

## அதிகூடிய ஓட்டம்

- சேவாக் – டெல்லி (11 ஆட்டங்கள் 424 ஓட்டங்கள்)
- கெயில் – பெங்களூர் (6 ஆட்டங்கள் 398 ஓட்டங்கள்)
- மைக் ஹஸி – சென்னை (9 ஆட்டங்கள் 388 ஓட்டங்கள்)

## அதிகூடிய விக்கெட்டுக்கள்

- மலிங்க – மும்பை (11 ஆட்டங்கள் 26 விக்கெட்டுக்கள்)
- முனாப் பட்டேல் – மும்பை (11 ஆட்டங்கள் 17 விக்கெட்டுக்கள்)
- ராகுல் சர்மா – புனே (11 ஆட்டங்கள் 14 விக்கெட்டுக்கள்)

## அணிகளின் நிலைகள்...

| அணி | M | W | L | T | N/R | Net/R/R | P |
|---|---|---|---|---|---|---|---|
| மும்பை இந்தியன்ஸ் | 11 | 08 | 03 | 0 | 0 | + 0.314 | 16 |
| றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் | 11 | 07 | 03 | 0 | 1 | + 0.863 | 15 |
| சென்னை சூப்ப கிங்ஸ் | 11 | 07 | 04 | 0 | 0 | + 0.509 | 14 |
| கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 11 | 07 | 04 | 0 | 0 | + 0.464 | 14 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 12 | 05 | 06 | 0 | 1 | - 0.587 | 11 |
| கொச்சி ருஸ்கேர்ஸ் | 11 | 05 | 06 | 0 | 0 | - 0.624 | 10 |
| புனே வாரியர்ஸ் | 11 | 04 | 07 | 0 | 0 | - 0.003 | 08 |
| டெல்லி டெயாடெவில்ஸ் | 11 | 04 | 07 | 0 | 0 | - 0.312 | 08 |
| கிங்ஸ் லெவன் பஞ்சாப் | 10 | 04 | 06 | 0 | 0 | - 0.432 | 08 |
| டெக்கான் சார்ஜஸ் | 11 | 03 | 08 | 0 | 0 | - 0.177 | 06 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் வாய்ப்பு பறிபோகவில்லை



ஐ.பி.எல். போட்டியில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 76 ஓட்டங்களில் மும்பை இந்தியன்ஸ் அணியை தோற்கடித்து அதிர்ச்சி அளித்தது. முதலில் விளையாடிய கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 20 ஓவரில் 8 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 163 ஓட்டங்கள் குவித்தது. ஷோன் மார்ஷ் 34 பந்துகளில் 43 ஓட்டங்களும் தினேஷ் கார்த்திக் 24 பந்துகளில் 31 ஓட்டங்களும் எடுத்தனர். முனாப் பட்டேல் 21 ஓட்டங்கள் கொடுத்து 5 விக்கெட்டுக்கள் கைப்பற்றினார்.

பின்னர் விளையாடிய மும்பை இந்தியன்ஸ் 12.5 ஓவரில் 87 ஓட்டங்களில் சுருண்டது. பொலார்ட் அதிகபட்சமாக 17 ஓட்டங்கள் எடுத்தார். பார் கட் 4 விக்கெட்டுக்களும், பிரவீன் குமார் 2 விக்கெட்டுக்களும் கைப்பற்றினார்கள். மும்பை அணி சந்தித்த 3 ஆவது தோல்வி இதுவாகும். இதற்கு முன்பு கொச்சி, ராஜஸ்தான் அணிகளிடம் மட்டுமே தோற்று இருந்தது. 11 ஆட்டத்தில் 8 வெற்றி, 3 தோல்வியுடன் 16 புள்ளிகளுடன் மும்பை தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது.

கிங்ஸ் லெவன் பஞ்சாப் 4 ஆவது வெற்றியை பெற்றது. 10 ஆட்டத்தில் 4 வெற்றி, 6 தோல்வியுடன் 8 புள்ளிகள் பெற்று அந்த அணி 9 ஆவது இடத்தில் உள்ளது. இந்த வெற்றி குறித்து கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணித்தலைவர் கில்கிறிஸ்ட் கூறியதாவது:-

இந்த வெற்றியால் நாங்கள் இன்னும் போட்டியில் தொடர்ந்து இருக்கிறோம். எங்களுக்கு இன்னும் வாய்ப்பு இருப்பதாக கருதுகிறேன். இந்த வெற்றி எங்களுக்கு உத்வேகத்தை அளித்து உள்ளது. இனிவரும் ஆட்டங்களிலும் சிறப்பாக ஆடுவோம். 163 ஓட்டங்கள் என்பது நல்ல 'ஸ்கோர்' தான் நாங்கள் இன்னும் கூடுதலாக 15 முதல் 20 ஓட்டங்கள் வரை எடுத்து இருக்க வேண்டும். 39 ஓட்டங்களில் கடைசி 6 விக்கெட்டுக்கள் விழுந்தது. பின்னால் வந்த வீரர்களில் தினேஷ் கார்த்திக் தவிர யாரும் சிறப்பாக ஆட வில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

பஞ்சாப் அணி 11 ஆவது லீக் ஆட்டத்தில் கொச்சி ருஸ்கேர்ஸ் கேரளாவை 13 ஆம் திகதி எதிர் கொள்கின்றது. (15)

## அரையிறுதியில் தோற்ற வேதனை ஆறவில்லை

-அக்தர்

உலகக் கிண்ண அரையிறுதியில் இந்தியா விடம் தோற்றது தனது வாழ்நாளில் மிகுந்த வேதனைக்குரியது என்று பாகிஸ்தான் வேகப் பந்து வீச்சாளர் சொயிப் அக்தர் தெரிவித்துள் ளார்.

நான் இந்தியாவுக்கு எதிரான அரையிறுதி ஆட் டத்தில் விளையாடாதபோதும், பாகிஸ்தான் தோற்றபோது நான் அடைந்த வேதனை, அதற்கு முன் எப்போதும் எனக்கு ஏற்பட்டதில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

வார இதழ் ஒன்றுக்கு பேட்டியளித்த அவர் இதுகுறித்து மேலும் கூறியதாவது:

எனது வாழ்க்கையில் பலமுறை பிரச்சினைகளை சந்தித் துள்ளேன். அப்போதெல்லாம் மிகுந்த வருத்தமடைந்தது இல்லை. ஆனால் உலகக் கிண்ணத்தில் எனது உடற்தகுதி குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத் தலைவர் இஜாஸ் பட், அணித் தலைவர் அப்ரிடி ஆகியோர் கூறிய சில மோசமான கருத்துகள் என்னை நெருக்கடிக்குள் தள்ளியது என்றார்.

அவர் பாகிஸ்தானுக்கு விளையாடிய போது நிகழ்த்திய பல்வேறு சாதனைகளையும் நினைவுகூர்ந்தார். (15)

## ஆடுகளத் தேர்வு அணியின் கையில் இல்லை

எந்த ஆடுகளத்தில் விளையாடுவது என்பதை அதன் பராமரிப்பாளர் தான் முடிவு செய்வார். இதில் அணிகளுக்கு எந்த உரிமையும் இல்லை என்று இந்திய கிரிக்கெட் வாரியம் அதிரடியாக தெரிவித்துள்ளது.

ராஜஸ்தான் அணியின் சொந்த மண்ணான ஜெய்ப்பூரில் சமீபத்தில் நடந்த போட்டிகளில் கொச்சி 109, மும்பை 94, புனே 143 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது. மும்பை அணித் தலைவர் சச்சின் ஆடுகளம் குறித்து தனது அதிருப்தியை தெரிவித்தார். இதனால் நேற்று முன்தினம் ஆடுகளம் மாற்றப்பட சென்னை அணி வெற்றி பெற்றது.

இது குறித்து ராஜஸ்தான் அணியின் தலைவர் வோர்ன் கூறுகையில், கடந்த நான்கு ஆண்டுகளாக விளையாடிய ஆடுகளத்தை விட்டுவிட்டு, திடீரென வேறு ஆடுகளத்தில் விளையாடுமாறு உத்தரவிட்டனர். இது தான் தோல்விக்கு கார ணம் என்று கோபமாக தெரிவித்தார்.

இதுகுறித்து ஐ.பி.எல் முன்னாள் தலைவர் லலித் மோடி தனது 'டுவிட் டரில்' கூறுகையில், ஆடுகளம் மாற்றத்துக்கு பி.சி.சி.ஐ செயலரும், சென்னை அணி உரிமையாளருமான சீனிவாசன் காரணமாக இருக்கலாம் என்று புதிய புயலை கிளப்பினார். இந்த பிரச்சினைக்கு தற்போது பி.சி.சி.ஐ. முற்றுப்புள்ளி வைத்துள்ளது.

இது பற்றி வெளியிட்ட அறிக் கையில், ஐ.பி.எல் தொடர் ஆரம் பமாகும் முன்பும், நடக்கும் போது அனைத்து மைதானங்களுக்கும் சென்ற பி.சி. சி.ஐ ஆடுகள குழு வேக மற்றும் சுழற்பந்து வீச்சு என்று இரண்டிற்கும் சமமாக ஒத் துழைக்கும் வகையில் தான் ஆடு களம் இருக்க வேண்டும் என்று தெரிவித்தது. தவிர இதைத் தேர்வு செய்வது அணிகளின் கையில் இல்லை. ஆடுகள தயாரிப் பாளர் மற்றும் குழுவினர்தான் எந்த ஆடுகளம் என்று முடிவு செய் வார்கள் என்றும் தெரிவித்துள் ளது. (15)

## துடுப்பாட்ட வீரர்கள் மீது டெண்டுல்கர் பாய்ச்சல்



பஞ்சாப் அணியு டன் ஏற்பட்ட தோல்வி குறித்து மும்பை இந் தியன்ஸ் அணித் தலை வர் டெண்டுல்கர் நிரு பர்களிடம் கூறியதா வது:-

மோசமான துடுப் பாட்டத்தால் தோல்வி அடைந்தோம். ஆடு களம் துடுப்பாட்ட வீரர் களுக்கு ஏற்ற வகை யில் இருந்தது. ஆனால் துடுப்பாட்ட வீரர்கள் இதை சரியாக பயன் படுத்திக் கொள்ள வில்லை. ஒட்டு மொத் தமாக யாருமே சரியாக ஆடவில்லை. விக் கெட்டுக்கள் மளமள என்று சரிந்துவிட்டது.

இவ்வாறு அவர் கூறினார்.

மும்பை இந்தி யன்ஸ் 12 ஆவது லீக் ஆட்டத்தில் டெக்கான் சார்ஜர்ஸ் அணியை 14 ஆம் திகதி சந்திக் கின்றது. (15)





## ஐ.பி.எல். ஆட்டங்களில் சாதனைகள் படைக்கும் லசித் மலிங்க

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகளில் அதிக விக்கெட்டுக் களை வீழ்த்திய வீரர் எனும் சாதனைக்குரியவராகியுள்ளார் இலங்கையரான லசித் மலிங்க. இவர் இதுவரை 37 போட்டி களில் பங்குபற்றி 59 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

இந்த வருட தொடரில் 11 போட்டிகளில் பங்குபற்றி 26 விக்கெட்டுக்களை வீழ்த்தியமையும் மலிங்கவின் மற் றொரு சாதனையாகும். 2008 இல் பாகிஸ்தானை சேர்ந்த சொஹைல் தன்வீர் -ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்காக விளையாடி 22 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். அந்த வருடம் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி சம்பியனாகி யமை குறிப்பிடத்தக்கது.

2009 இல் டெக்கன் சார்ஜஸ் சார்பில் விளையாடிய ஆர்.பி.சிங் 23 விக்கெட்டுக்களை வீழ்த்தி சாதனை படைத்தார். அவரது அணி சுற்றுப்போட்டியை வென் றது. கடந்த வருடம் வித்தியாசமான ஒரு நிலைமை தோன்றியது. பிரக்யன் ஓஜா அதிகூடிய விக்கெட் டுக்களை எடுத்தபோதும் அவரது அணியால் சம்பி யனாக முடியவில்லை. சென்னை சுப்ப கிங்ஸ் சிறந்த துடுப்பாட்டத்தின் மூலம் சம்பியனாகியது.

இப்போது நடைபெறும் ஐ.பி.எல். இருபதுக்கு 20 போட்டியில் மலிங்க மிக வும் ஆபத்தான பந்துவீச்சாளர் என்று கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் தலைவர் அடம் கில்கிறிஸ்ட் கூறியுள்ளார்.

அவருக்கு அனுபவம் வந்துவிட்டது. அவர் மிகவும் பயங்கரமான இருபதுக்கு 20 பந்து வீச்சாளர். அவரது 'யோக்கர்' மிக ஆபத்தானது. 'பௌன்ஸர்கள்' தடுமாற வைப் புவை. அவரது பந்துவீச்சில் பல்வேறு வகைகளை காணலாம் என்றும் கில்கிறிஸ்ட் கூறினார். (15)

## கங்குலியின் வருகையால் ரசிகர்கள் உற்சாகம்

டெக்கான் அணிக்கெதிராக செவ்வாய்க்கிழமை நடைபெற்ற லீக் ஆட்டத்தில் புனே அணிக்காக கங் குலி சிறப்பாக விளையாடினார். கங்குலி வருகை யால் ரசிகர்கள் உற்சாகமடைந்தனர்.

4 ஆவது ஐ.பி.எல் தொடரில் எந்த அணியாலும் கங்குலி ஏலத்தில் எடுக்கப்படவில்லை. இந்த நிலையில் புனே அணிக்காக கங்குலி தேர்வானார். ஆனால் தேர்வு செய்யப்பட்ட பின்னர் கடந்த 2 ஆட்டங்களில் அவருக்கு வாய்ப்பு கொடுக்கப் படவில்லை.

இந்த நிலையில் டெக்கான் அணிக்கெதிராக செவ்வாய்க்கிழமை அவர் களமிறங்கினார். அவர் மைதானத்துக்குள் நுழையும்போதே ஹைதராபாத் ரசிகர்கள் உற்சாகக் குரலிட்டு அவரை வரவேற்றனர். கங்குலி பவுண்டரி, சிக்ஸர் விளாசியபோது ரசிகர்கள் எழுப்பிய கோஷம் விண்ணைத் தொட்டது.

இந்த நிலையில் அவர் விளையாடிக் கொண்டிருந்தபோது மைதானத்துக்குள் ஒரு ரசிகர் நுழைந்து கங்குலியின் காலில் விழுந்து வணங்கினார். இதைத் தொடர்ந்து பாதுகாப்பு அதிகாரிகள் அந்த ரசிகரை மைதானத்திலிருந்து வெளி யேற்றினர். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
12 மே 2011 வியாழக்கிழமை

# தாலிக்கொடி அபகரித்த இருவருக்கும் 25ஆம் திகதிவ்ரை விளக்கமறியல்

## அடையாள அணிவகுப்புக்கும் உத்தரவு

தென்மராட்சி, மே 12

பெண்ணொருவரிடம் தாலிக்கொடியை அபகரித்தனர் என்ற குற்றச்சாட்டில் சந்தேகத்தின் பெயரில் கைதுசெய்யப்பட்ட இருவரையும் எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறும் சாவகச்சேரி நீதிவான் மா.கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரிய வருவதாவது:

பிறந்த தினத்தன்று ஆலய தரிசனத்தை முடித்துக் கொண்டு பெற்றோரிடம் ஆசிபெற வந்த பெண்ணொருவர் 4 லட்சத்தி 60 ஆயிரம் ரூபா பெறுமதியான தாலிக்கொடியைப் பறிகொடுத்தார்.

இந்தச் சம்பவம் கடந்த 7ஆம் திகதி சனிக்கிழமை சரசாலையில் இடம்பெற்றுள்ளது.

சைக்கிளில் வந்த இந்தப் பெண் வீதியில் பேருந்து நின்ற தால் சைக்கிளை நிறுத்தியபோது தொப்பி கீழே வீழ்ந்தது அதனை எடுக்கக் குனிந்தபோது அவ்வழியே தலைக்கவசம் அணிந்த நிலையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் தாலிக் கொடியை இழுத்து அறுத்துக்கொண்டு தப்பியோடினர்.

மோட்டார் சைக்கிள் இலக்கத்தை அவதானித்த பெண் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

பொலிஸார் படையினரின் உதவியுடன் மேற்கொண்ட முயற்சியின் பயனாக மோட்டார் சைக்கிளில் வந்த மீசாலை மேற்கு மற்றும் மந்துவிலைச் சேர்ந்த இருவரைக் கைது செய்தனர். தாலிக்கொடியையும் மீட்டுள்ளனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் இடம்பெற்ற திருட்டுக்களுக்கும் இவர்களும் தொடர்பு உள்ளதா என்று விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இந்த நிலையில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது எதிர்வரும் 25ஆம் திகதி வரை இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(ம-207)

# பிற்போடப்பட்ட உள்ளூராட்சித் தேர்தல்; அடுத்த மாதத்தில் நடத்த ஏற்பாடு

நீதிமன்றச் செயற்பாடுகள் காரணமாக வாக்களிப்புகள் பின் தள்ளி வைக்கப்பட்டிருந்த உள்ளூராட்சித் தேர்தலை முதலில் நடத்தவும், பதவிக்காலம் நீடிக்கப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான தேர்தலை பின்னர் நடத்தவும் அரசு எதிர்பார்ப்பதாக சுதந்திரக் கட்சியின் செயலாளரான மைத்திரிபால சிறிசேன ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

வாக்களிப்புப் பின்தள்ளி வைக்கப்பட்ட உள்ளூராட்சிச் சபைகளுக்கு மற்றும் பதவிக்காலம் நீடிக்கப்பட்ட உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலை ஒரே தினத்தில் நடத்துவதே அரசின் திட்டமாக இருந்தது.

ஆனால், நீதிமன்றத் தீர்ப்பு தாமதமாவதன் காரணமாக இரு கட்டங்களாகத் தேர்தலை நடத்த அரசு எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, நீதிமன்றச் செயற்பாடுகள் காரணமாக பின் போடப்பட்டுள்ள 67 உள்ளூராட்சிச் சபைகளுக்குமான தேர்தல் அடுத்த மாத இறுதியில் இடம்பெறுவதற்குப் பெரும்பாலும் இடமிருப்பதாக அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (ம-22)

**வீட்டுப் பணிப்பெண் தேவை**

30- 45 வயதுக்கு இடைப்பட்ட பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்க்கப்படும்.
தொடர்பு: 0775838817, 0212223851
(4102)

**கடை வாடகைக்குத் தேவை**

ஸ்ரான்லி வீதியில் 20 அடி நீளமும் 12 அடி அகலமும் உள்ள கடை உடன் வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 077 3053170

**மணமகள் தேவை**

யாழ்.கௌரவமான R.C.பெற்றோர் தமது 38 வயதுடைய கொழும்பில் கல்வி கற்று கௌரவமான தொழில் புரியும் மகனுக்குத் தகுந்த மணமகளைத் தேடுகின்றனர்.
தொடர்பு: 0786173610.

# கரைதுறைப்பற்று பிரிவில் மீளக்குடியமர்த்த ஏற்பாடு

முல்லைத்தீவு, மே 12

முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் இதுவரை காலமும் மீளக்குடியமராது உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ள குடும்பங்களை எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கரைதுறைப் பற்று பிரதேச செயலர் அலுவலகத்துக்குச் சமுகமளிக்குமாறு முல்லைத்தீவு அரச அதிபர் அ.பத்திநாதன் அறிவித்துள்ளார்.

மீளக்குடியமர்வதற்கான ஆயத்தங்களுடன் வருகை தர வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் தங்கியிருந்த கிராம சேவகர் பிரிவு கிராம சேவையாளரிடம் இருந்து பெறப்பட்ட விடுப்புக் கடிதத்தைப் பிரதேச செயலாளரிடம் உறுதிப்படுத்திக் கொண்டுவருமாறும் அதன் மூலம் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அரச அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# 'உங்களுக்குத் தெரியுமா' எழுத்துப் பரீட்சை

யாழ்ப்பாணம், மே 12

பாடசாலை மட்ட 'உங்களுக்குத் தெரியுமா' எழுத்துப் பரீட்சையை எதிர்வரும் 25 ஆம் திகதி தரம்-10 மாணவர்களுக்கு நடத்துமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சைக்கான வினாப்பத்திரங்களை எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 8 மணிக்கு யாழ். கல்வி வலய அபிவிருத்திப் பிரிவில் பெற்றுக்கொள்ள முடியும்.

அத்துடன் பரீட்சையில் உயர்ந்த புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் மாணவர்களின் பெயர் விவரங்களை யாழ். கல்வி வலய அபிவிருத்திப் பிரிவுக்கு அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.




**கண்ணீர் அஞ்சலி**



யாழ். அத்தியடிப் பிள்ளையார் கோயில் திருப்பணிச் சபையின் பொருளாளர் க.ஞானசேகரம் அவர்களின் மாமியார்

**திருமதி நடராஜா நாகரத்தினம்**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அத்தியடிப் பிள்ளையாரை வேண்டுகின்றோம்.

அன்னாரின் மறைவினால் துயரடைந்திருக்கும் அவரின் குடும்பத்தினருடன் எமது துயரினையும் பகிர்ந்து கொள்டுகின்றோம்.

*நிர்வாக சபை, திருப்பணிச் சபை,
யாழ். அத்தியடிப் பிள்ளையார் கோயில்.*

(சி/575963)

**இதயம் நெகிழ்ந்த அஞ்சலி**



கடந்த 08.05.2011 இல் அத்தியடிப் பிள்ளையார் கழலடி சேர்ந்த எமது கோயில் பிரதம குரு

**பிரம்மஸ்ரீ மோ. பிரபாகரேஸ்வரக்குருக்கள்**

அவர்களின் ஆத்மா எல்லாம் வல்ல அத்தியடி பிள்ளையாரின் திருவடியில் சாந்தி பெற வேண்டுகின்றோம். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத் தினருக்கும் பிள்ளையார் அடியார்களுக்கும் மன ஆறுதலைக் கொடுக்கும் படி அத்தியடிப் பிள்ளையாரை வேண்டுகின்றோம்.

*நிர்வாக சபை, திருப்பணிச்சபை,
யாழ்.அத்தியடிப் பிள்ளையார் கோயில்*

(சி/575964)

මහජන සම්පත
மஹஜன சம்பத
Mahajana Sampatha

10.05.2011

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2392

வெற்றி எழுத்து: P
வெற்றி எண்கள்: 7 1 4 9 4 1

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | P | 7 | 1 | 4 | 9 | 4 | 1 | ரூபா.13,813,378/= | பரிசு 01 |
| 1 பரிசுகள் | | 7 | 1 | 4 | 9 | 4 | 1 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | | | 1 | 4 | 9 | 4 | 1 | ரூபா. 100,000/= | பரிசுகள் 14 |
| 3 பரிசுகள் | | | | 4 | 9 | 4 | 1 | ரூபா. 10,000/= | பரிசுகள் 139 |
| 4 பரிசுகள் | | | | | 9 | 4 | 1 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1311 |
| 5 பரிசுகள் | | | | | | 4 | 1 | ரூபா. 100/= | பரிசுகள் 13047 |
| 6 பரிசுகள் | | | | | | | 1 | ரூபா. 20/= | பரிசுகள் 129237 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 7 | 1 | 4 | 9 | 4 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 13 |
| 8 பரிசுகள் | | 7 | 1 | 4 | 9 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 134 |
| 9 பரிசுகள் | | 7 | 1 | 4 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1303 |
| 10 பரிசுகள் | | 7 | 1 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 12906 |
| 11 பரிசுகள் | P | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 51912 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை Rs. 25,881,658.00

அடுத்த சீட்டிழுப்பிகான சுப்பர் பரிசு
Rs. 10,000,000.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
2342 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தருஸ்மன் அறிக்கை: தடம்மாறு படலம்

--தருஸ்மன் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது போன்று நாம் போர்க் குற்றங்கள் எதனையும் இழைக்கவில்லை. அவை ஆதாரமற்றவை. அவற்றில் எவ்வித உண்மையுமில்லை என்பதனை முழு உலகுக்கும் எடுத்துக்காட்ட வேண்டும்.

பயங்கரவாதப் போரின் போது இலங்கை இராணுவத்தினர் வெளிநாட்டவர்களுடன் போரிடவில்லை. அதனால் போரின் போது இராணுவத்தினர் மனித உரிமைகளை மீறி நடந்துவிடக்கூடாது என்பதற்காக விசேட அறிவித்தல்கள், வகுப்புகளை அவர்களுக்கு நடத்தினோம். அதனாலேயே எமது படையினர் பொதுமக்களை மரணத்திலிருந்து காப்பாற்றினர்.

தருஸ்மன் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களில் உண்மைகள் இல்லை என்பதனை சர்வதேசங்களுக்கு நாம் எடுத்துரைத்தால் அது வலு இழந்துவிடும். இதனை மனதிற் கொண்டு, போர் நடைபெற்ற பிரதேசங்களில் வாழும் இடம்பெயர்ந்த மக்களுக்கு அரசாங்கம் செய்து வரும் மனிதாபிமானப் பணிகள் குறித்தும் நல்லிணக்க ஆணைக்குழு மேற்கொள்ளும் நற்பணிகள் குறித்தும் ஆதாரபூர்வமான அறிக்கைகளை ஐக்கிய நாடுகள் சபைக்கும் அதன் செயலாளர் நாயகத்துக்கும் அனுப்பிவைப்போம்.

போரின் இறுதி வாரங்களில் நாம் மேற்கொண்ட மனிதாபிமான நடவடிக்கைகள் குறித்து வெளிநாடுகளில் உள்ள எமது தூதுவர்கள் எடுத்துக் கூறுவார்கள்.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி கலாநிதி நீல் புனே எமது மனிதாபிமான நடவடிக்கைகளை பாராட்டி உள்ளார். அரசாங்கம் ஏற்கனவே மேற்கொண்ட மனிதாபிமான நல்லிணக்க செயற்பாடுகள் குறித்து விளக்கம் அளிப்பதற்காக சட்டமா அதிபர் தலைமையில் ஒரு சிரேஷ்ட குழுவை ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பிவைத்துள்ளோம் --

தேசியப் பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்கள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் பிரதானிகளை சந்தித்துக் கலந்துரையாடிய வேளை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்கூறியவற்றைத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ - மூன் நியமித்த மூவர் நிபுணர் குழுவின் - தருஸ்மன் நிபுணர் குழுவின் - அறிக்கைக்கு அரசாங்கம் பதில் அளிக்கமாட்டாது என்பதனை அறிவிப்பது இந்தச் சந்திப்பின் பிரதான நோக்கமாக அமைந்தது எனலாம்.

ஐ.நா. நிபுணர் குழுவால் இலங்கை அரசாங்கத்தின் மீது சுமத்தப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களை மறுத்து, செயலாளர் நாயகத்துக்கு அறிக்கை சமர்ப்பிப்பது என்ற அரசின் முடிவு இச்சந்திப்பின் போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு, நிபுணர் குழு சுமத்தியுள்ள போர்க் குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக இலங்கைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று சர்வதேச மட்டத்தில் மேற்கொள்ளப்படும் எத்தனங்களை முறியடிக்கும் முழு முயற்சியின் முதற்கட்டம் இது.

ஐக்கிய நாடுகள் சபையைப் பகைத்துக்கொள்ளக்கூடாது என்பதில் அரசாங்கம் அக்கறையாக உள்ளமை இப்போது இலகுவில் புலப்படுகிறது. ஐ.நா. சபை எமது சபை; அதன் செயலாளர் நாயகம், எமது செயலாளர் நாயகம் என்று அரசின் மூத்த அமைச்சர்கள் நிதானமாகக் கருத்துவெளியிடுவதும் அதன் பிரதிபலிப்பே.

சில நாடுகள் எங்களை சர்வதேச யுத்த நீதிமன்றத்தின் முன்னர் நிறுத்தித் தண்டிக்க முயற்சி செய்கின்றன. அதற்கு முன்னதாக நாம் போர்க் குற்றம் எதனையும் இழைக்கவில்லை. அவை ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள்; அவற்றில் எவ்வித உண்மையும் இல்லை என்பதனை முழு உலகத்துக்கும் எடுத்துக் காட்டவேண்டும். அப்போது நிபுணர் குழுவின் குற்றச்சாட்டுக்கள் வலுவிழந்து தாமாகவே செயலிழந்துவிடும் என்பது அரசாங்கத்தின் பிந்திய நிலைப்பாடாகி உள்ளது.

ஜனாதிபதி நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர்களுடன் நடத்திய மாநாட்டில் வெளியிடப்பட்ட கருத்துக்களில் இருந்து, அரசு மீது நிபுணர் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்பதனை நிலைநிறுத்த, தலையைக் கீழே வைத்துக் காலை மேலே வைத்து நடக்கவும் தயாராக இருப்பது புலனாகிறது.

அதனால் தனக்குச் சினேகமான, அபிமானமான நாடுகளின் ஆதரவைப் பெற்று விசாரணை, விளக்கமளித்தல் ஆகியவற்றில் இருந்து தப்பி, இனிமேல் உஷாருடன் செயற்பட வழிகோலத் திட்டமிட்டிருப்பதும் தெரிகிறது. அதன் பொருட்டு போர் வெற்றிக்குத் திரைமறைவில் நின்று பக்கபலமாகச் செயற்பட்ட இந்தியாவின் ஆதரவைப் பெறுவதற்குத் திட்டமிட்டிருக்கிறது இலங்கை அரசு. அதனை ஜனாதிபதி மிக வெளிப்படையாகத் தெரிவித்திருக்கிறார்.

ஐ.நா. நிபுணர் குழுவால் சுமத்தப்பட்டுள்ள போர்க் குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்டு முறியடிக்க இந்தியாவின் உதவி மிகமிக அவசியம் - என்று ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

இந்தியா எப்போதுமே இலங்கையுடன் (அதாவது இந்நாட்டு அரசுடன்) புரிந்துணர்வுடன் செயற்பட்டுள்ளது. எல்லா வேளைகளிலுமே இருதரப்புகளுக்கும் இடையேயான உறவுகள் சிறப்பாகவே இருந்து வருகின்றன - என்று கூறி நம்பிக்கையும் வெளியிட்டுள்ளார் மஹிந்த.

வன்னிப் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு வழங்கிய பேருதவி போன்றே, நிபுணர் குழுவின் குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுபடுவதற்கும் இந்தியா உதவும் என்ற ஜனாதிபதியின் எதிர்பார்ப்பு இயல்பானதே.

இதற்கிடையில், நிபுணர் குழு அறிக்கை குறித்து இலங்கை அரசுடன் இந்தியத் தரப்பு இப்போதைக்குத் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளாது என்று கூறப்பட்டாலும், ஜனாதிபதிக்கும் அரசுக்கும் இந்தியாவின் உதவியைப் பெற்றுவிட இயலும் என்ற நம்பிக்கை உண்டு என்பதும் புலப்படுகிறது.

இலங்கை - இந்தியா - சீனா - அமெரிக்கா என்ற நாற்சதுர ராஜந்திர வலைப்பின்னலில் தனக்கு ஏனைய மூன்று நாடுகளும் உதவி செய்துதான் ஆகவேண்டும் என்ற ஒரு பிடியை இலங்கை தன்னகத்தே கொண்டுள்ளது. இது விவகாரத்தில், இலங்கையுடன் தான் கைகோர்த்து செயற்படாவிடில், புவிசார் அரசியல்(Geo politics) பலவீனப்பட்டுவிடும் என்று இந்திய நிபுணர்கள் அரசுக்கு ஆலோசனை வழங்குவர் என்றும் -

இந்திய மத்திய அரசு, இலங்கை அரசின் பக்கம் சாயும் என்றும் நிச்சயம் எதிர்பார்க்கலாம்.

# அஞ்சல் அட்டையுடன் பரீட்சை எழுதிய 2 ஆயிரம் மாணவரின் விவரம் பரிசீலனை

## முடிவுகள் விரைவில் வெளியாகும்

யாழ்ப்பாணம், மே 12

யாழ். மாவட்டத்தில் அஞ்சல் அடையாள அட்டையுடன் சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றிய 2 ஆயிரம் பரீட்சார்த்திகளின் விவரங்கள் மீள் பரிசீலனை செய்யப்பட்டுள்ளதாகப் பரீட்சைத் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கடந்த 2010 ஆம் ஆண்டு சாதாரண தரப் பரீட்சைக்கு அஞ்சல் அடையாள அட்டையுடன் தோற்றியவர்களுக்கு பெறுபேறுகள் பரீட்சைத்திணைக்களத்தால் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பெறுபேறுகளை உரியவர்களிடம் கையளிக்கும் பொருட்டு பரீட்சைத்திணைக்கள அதிகாரிகள் மாவட்ட ரீதியாக நேரடி விஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.

கடந்த 29 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த இந்தக் குழுவினர். 2 ஆயிரம் பரீட்சாரத்திகளின் விவரங்களை மீள்பரி சீலனை செய்துள்ளனர்.

இவ்வாறு மீள் பரிசீலனை செய்யப்பட்ட பரீட்சார்தி களின் பெறுபெறுகள் விரைவில் அனுப்பிவைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

(ம-9)

# காலநிலை மாற்ற மடைந்ததால் குறைவடைந்தது மீன் வளம்

வடமராட்சி, மே 12

வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்கு ஆகிய கடற்பிரதேசங்களான தொண்டமானாறு தொடக்கம் சுண்டிக்குளம் வரையிலான பகுதி கடலில் மீன் வளம் குறைந்துள்ளது. இதனால் வருமானம் இன்றி பாதிக்கப்பட்ட மக்கள் மீனவர்களுக்கு தாமதமின்றி நிவாரணம் வழங்கவேண்டுமென குறிப்பிட்ட பிரதேச மீனவர்கள் கேட்டுள்ளனர்.

தென்மேல் பருவப் பெயர்சிக் காற்று ஆரம்பமாகியுள்ள இந்த வேளையில் முந்திய காலங்களைப் போல் காற்று வீச வில்லை.

இந்தக் காற்று உச்சக்கட்டத்தில் இருக்க வேண்டிய இந்த காலப்பகுதியில் தொண்டமானாறு தொடக்கம் முனை வரையான வடமாராட்சி வடக்கு கடற்பகுதியில் சாளை மீன் அளவுக்கு அதிகமாகப்பிடிப்பது வழக்கமாகும்.

அதேபோல் கற்கோவளம் தொடக்கம் சுண்டிக்குளம் வரையாக வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் நெத்தலி அவரிமிதமாகவும் ஏனைய மீன்வகைகளும் பிடிக்கப்படுவதுண்டு.

ஆனால் இம்முறை சாளை மீன் சீசன் காலத்தில் சாளை மீன்களை நெத்தலி சிசன் காலத்தில் நெத்தலியைப் பெறுக்கொள்ள முடியாத நிலை இருந்துவருகின்றது.

சிலவேளைகளில் நெத்தலி மிக அரிதாகக்கிடைத்தாலும் சாளை மீன்களையே காணவே முடியாதுள்ளது.

மீன்வளம் குறைந்துள்ளதால் மீனவர்கள் பலரும் தொழில் வாய்ப்புக்களை இழந்துள்ளனர். இதனால் அன்றாட வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்ல பெரிதும் சிரமப்படுகின்றனர்.

இதேவேளை கடந்த காலங்களில் ஒரு கிலோ மீன் 300 ரூபா தொடக்கம் 400 ரூபாவரை விற்பனையானது. இப்போது கிலோ 600 ரூபாவைத்தாண்டியுள்ளது. மீன்களை வாங்கி மோட்டார் சைக்கிள்களில் கொண்டு சென்று குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் வியாபாரம் செய்வோரும் வடமராட்சி கடற் பிரதேசத்தில் மீன்களை வாங்க அதிகாலை வேளை வந்து ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றதைக் காணக்கூடியதாக உள்ளது.

(ம-236)

# கொழும்புத்துறை உதயபுரம் வரை யாழ்.மாநகர சபையின் பஸ்சேவை

கொழும்புத்துறை, மே 12

யாழ்.கொழும்புத்துறை போக்குவரத்து மார்க்கத்தில் ஈடுபடும் யாழ்மாநகர சபையின் பஸ்சேவை கொழும்புத் துறை உதயபுரம் வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதுவரை மணியந்தோட்டம் வரை இடம்பெற்று வந்த பஸ்சேவை அந்தப் பகுதி மக்கள் யாழ்.மாநகர சபையிடம் விடுத்த வேண்டுகோளை அடுத்து இந்த சேவை நீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சேவை நடைபெறும் வீதியான மணியந்தோட்டம் சந்தியில் இருந்து உதயபுரம் வரையிலான கடற்கரை ஓரமாகச் செல்லும் வீதியில் உள்ள குழிகள் நிரப்பப்பட்டு தற்காலிக சீரமைப்புப் பணிகளில் இந்தப் பகுதி மக்கள் ஈடுபட்டுவருகின்றனர்.

இதற்கான ஏற்பாடுகளை அந்தப் பகுதி கிராம உத்தியோகத்தரும் மாநகர உதவி மேயர் து.இளங்கோவும் மேற் கொண்டுள்ளனர்.

(ம-135)

# ஆசைகளைக் குறைத்தால் உயர் நிலைக்குச் செல்லலாம்

நீ உன்னத நிலைக்கு உயர வேண்டுமானால் ஆசைகளைக் குறைக்க வேண்டும். சுமைகள் குறையக் குறைய எடை குறைந்து லேசாக மாறுகிறீர்கள். ஆகையால் நம்முடைய ஆசைகளைக் கொஞ்சம் கொஞ்சமாக் குறைத்து வருவது அவசியம். ஆசைகளைக் குறைப்பது மட்டுமல்ல வெறுப்பு, பொறுமை, எனது, உனது என்ற எண்ணங்கள் போன்ற தீய குணங்களை எல்லாம் ஒதுக்கவேண்டும். ஏனென்றால் ஆசைகள், கோபம், பேராசை என்ற மூன்று எதிரிகள் மனிதனுக்கு மனிதனுள்ளேயே இருக்கிறார்கள். ஆசைகள் பக்தியைக் குறைக்கின்றன. போகம் ஞானத்தை அழிக்கிறது.



பேராசை நம் செயல்களைத்துடைத்து முழுதுமாக அழிக்கிறது. தீய குணங்களால் அழிந்துபோகின்றன. கோபம் வரும் போது பகுத்தறியும் அறிவே இல்லாமல் போய் விடுகிறது. இதன் மூலம் அனேக விதமான எதிரிகளை மனிதன் உருவாக்கிக் கொள்கிறான். எப்படிப் பேசுவது, எங்கு பேசுவது என்கிற எண்ணமே மறந்து போகிறது.

*(நன்றி: சாயி அருளமுதம்)*

சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக நலனை உயர்த்தும் தாதியம்

தாதியம் உத்தியோகமாக முன்னேறி உன்னத தொழிலாகப் போற்றப்படுவதற்குக் காரணமாக இருந்தவர் செல்வி புளோரன்ஸ் நைற்றிங்கேல் அம்மையார். அவரை நினைவு கூர்ந்து நன்றி செலுத்துவதற்காகவும் தாதியரைப் பாராட்டிக் கௌரவிக்கும் முகமாகவும் அவரது பிறந்த தினமாகிய மே மாதம் 12 ஆம் திகதி சர்வதேச தாதியர் தினமாகப் பிரகடனப்படுத்தி உலகெங்கும் உள்ள தாதியரால் அத்தினம் பல்வேறு விதமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. இந் நன்னாளில் தாதியம், தாதியக் கல்வி, உத்தியோகம் பற்றியும் தாதியர் பற்றியும் சற்று உற்றுநோக்கினால் மிகவும் பொருத்தமானது.

''தாதியம்'' என்பது ஓர் உதவி செய்யும் தொழில். அதனால் வழங்கப்படும் சேவைகள் மக்களின் சுகாதாரத்துக்கும் நன்னிலைக்கும் பங்களிப்பாகின்றன. சேவைகளைப் பெறும் ஒரு தனிநபருக்கு தாதியம் உயிர் போன்ற முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இருக்கிறது. ஒரு மனிதனால் அல்லது ஒரு குடும்பத்தால் அல்லது மற்றைய மனிதர்களால் பெற்றுக் கொள்ள முடியாத தேவைகளைத் தாதியம் இட்டு நிரப்புகிறது.

''சுகதேகி ஒருவர் சுய அறிவு, பலம், மனஉறுதி ஆகியன இருக்கும்போது ஆரோக்கியமாக இருக்கவும் அதை மீளப் பெறவும் மற்றவர்களின் உதவியின்றி செய்யப்படும் செயல்களை ஒருவர் ஆரோக்கியமாக அல்லது ஆரோக்கிய மற்று இருக்கும் போதும் செய்வதற்கு உதவுதல் அல்லது அவரின் அமைதியான மரணத்திற்கு உதவுதல் ஆகும்'' தாதியத்தின் தேவை சர்வதேச மயமானது. ஒருவரின் வாழ்க்கைக் காலம் முழுவதும் எதுவித வித்தியாசங்களுமின்றி ஆதரவளிக்கின்றது என்று தாதியத்துக்கு வரைவிலக்கணம் வழங்கப்படுகின்றது.

இலங்கையில் முறையான தாதியக் கல்வி 1939 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையில் முதற் தாதிய பாடசாலை கொழும்பு தாதிய பாடசாலை. அடுத்து முறையே கண்டி, காலி, இரத்தினபுரி, குருநாகல், யாழ்ப்பாணம், அனுராதபுரம், மட்டக்களப்பு, பதுளை, கந்தானை, ஸ்ரீஜயவர்த்தனபுரம், அம்பாறை, அம்பாந்தோட்டை, மாத்தறை, களுத்துறை, வவுனியா ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப்பட்டது.

உளதாதியப் பாடசாலையாக முல்லேரியாவில் ஒரு பாடசாலை 1966 இல் ஆரம்பிக்கப்பட்டது. அங்கு ஐந்து வாரங்கள் உள தாதியப் பயிற்சிநெறி இலங்கை முழுவதிலுமுள்ள அடிப்படைத் தாதிய மாணவருக்கு இரண்டாம் வருடம் அல்லது மூன்றாம் வருடம் நடத்தப்படுகிறது. மேலும் அந்தப் பாடசாலை பயிற்றப்பட்ட தாதியருக்குக் குறுகிய காலப் பயிற்சி நெறிகளும் உள தாதியத்தில் அடிப்படை பட்டப்பின் டிப்ளோமா கற்கையையும் நடத்துகின்றது.

அடிப்படைப்பின் பட்டப்படிப்புப் பாடசாலையானது 1960 இல் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையில் உயர் தாதியக் கல்விக்கான ஒரேயொரு நிறுவனம் இதுவாகும். மேலும் இங்கு போதனாசிரியர்களுக்குக் கற்பித்தலும் மேற்பார்வையும் டிப்ளோமா பயிற்சி நெறியும், விடுதிச் சகோதரிகளுக்கு விடுதி முகாமைத்துவமும் மேற்பார்வையும் டிப்ளோமாப் பயிற்சி நெறியும் நடத் தப்படுகின்றன. வேறு விசேடமான சில குறுகிய காலப் பயிற்சி நெறிகளாக சத்திர சிகிச்சைக்கூட தாதியம், அதி தீவிர கவனிப்புப் பகுதித் தாதியம், குழந்தை மருத்துவத் தாதியம், முறிவு தறிவு தாதியம் ஆகியனவும் அடிப்படைப்பின் தாதியக் கல்லூரியில் வழங்கப்பட்டு வருகின்றன.

தேசிய சுகாதார விஞ்ஞான நிறுவனம் களுத்துறையில் பொது சுகாதார தாதிய டிப்ளோமாப் பயிற்சி வழங்குகிறது. இராணுத் தாதியப் பாடசாலை 2001 இல் அனுராதபுரத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அந்தப் பாடசாலை ஆரம்பிக்கப்பட முன்னர் மற்றைய தாதிய பாடசாலைகளில் இராணுவப் பொலிஸ் விமானப் படை வீரர்களுக்கும் பயிற்சி வழங்கப்பட்டது. பொலிஸ் மாணவர் தாதியர்களுக்குத் தற்போது அரச தாதிய பாடசாலைகளில் பயிற்சி வழங்கப்படுகிறது.

## சர்வதேச தாதியர் தினம் இன்று

''உத்தியோகம்'' என்பது தனிமனிதனதும் சமூகத்தினதும் நலனை உயர்த்தும் நோக்கமாக நீதிநெறிக் கூறுகளைக் கொண்ட ஒரு விசுவாசமுள்ள தொழிலாகும். உத்தியோகத்தில் பெறப்படுகின்ற சேவையானது கற்றல் மூலமும், விஞ்ஞானரீதியாகவும் விருத்தி செய்யப்பட்ட விசேடமான அறிவையும் திறன்களையும் அடிப்படையாகக் கொண்டது ஆகும். இவ் விசேட அறிவு ஆற்றல் என்பன விஞ்ஞான முறைக்கூடாக விருத்தியடைந்தவையாக இருக்கும்.

உத்தியோகபூர்வ தாதிய சேவையானது மருத்துவத் துணை மருத்துவக் குழுக்களின் பங்களிப்புடன் வழங்கப்படுகின்றது. மனிதனின் உடல், உள, சமூக ஆன்மீகத்தேவைகளை நிவர்த்தி செய்யக் கூடியவைகளாகவே உத்தியோக பூர்வ தாதிய சேவைகள் அமைந்திருக்கும். உத்தியோக பூர்வ தாதியானவர் அங்கீகரிக்கப்பட்ட தாதிய பாடசாலையில் பட்டம் பெற்றவராகவும் நாட்டின் பதிவு செய்யப்பட்ட தாதிக்குரிய தகைமையுடையவராகவும் அந்நாட்டில் தாதிய தொழில் புரிவதற்கு அனுமதிக்கப்பட்டவராகவும் இருப்பார். அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்தோர் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையில் அரசால் நியமிக்கப்பட்ட பாடவிதானத்தின் படி பயிற்சி பெற்று அடிப்படைக் கற்கை நெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து தாதிய டிப்ளோமா என்னும் அந்தஸ்தைப் பெறுவர்.

தாதி (NURSE) என்பதன் விளக்கம் N-நேர்மை, அறிவு U-பயன்படும் தன்மை, புரிந்துணர்வு R-பொறுப்புணர்வு, சரியானதன்மை S-அனுதாபம், எளிமை E-திறமை, சமவுரிமை என்று விரிவுபடுகிறது.

செல்வி. ரஜுலா தேவி வல்லிபுரநாதன்,
அதிபர், தாதிய கல்லூரி,
யாழ்ப்பாணம்.

செல்வி புளோரன்ஸ் நைற்றிங்கேல் தனது குறிப்பேட்டில் தாதி குறித்துப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். ''ஒரு தாதியானவர் அரட்டையில் ஈடுபடக் கூடாது, நேர்மையானவராகவும், மென்மையானவராகவும் இருக்க வேண்டும், தியாகப் பெண்மணியாக விளங்க வேண்டும். அழைப்புக்கு மரியாதை உடையவராக இருத்தல் வேண்டும். ஆழ்ந்த ஆற்றல் உள்ளவராக இருக்க வேண்டும், விரைவான அவதானிப்பாளர், இதை விட மரியாதையான எண்ணங்களையுடைய அர்ப்பணிப்புடன் கூடிய பெண்ணாக விளங்க வேண்டும்'' மொத்தத்தில் தாதியம் பரந்து விரிந்த தாதிய பாடவிதானத்தை உள்ளடக்கிய அதி உன்னத உத்தியோகமாகத் திகழ்கின்றது. இத்தகைய உன்னத தொழிலைப் புரியும் தாதியர் தாம் எவ்வாறு போற்றி பாராட்டுதற்குரியவர்கள்!

எனவே, சர்வதேசம் எங்கும் தாதியர் மகிழ்ந்து கொண்டாடும் இன்றைய நாளில் நாமும் தாதியராகத் தோற்றம் பெற்றமையையிட்டு பெருமைப்படுவதுடன், எதிர்பார்ப்புப் படி சிறந்த அர்ப்பணிப்புடன் கூடிய தாதிய சேவையை வழங்கி எம்மை உத்தியோக பூர்வதாதியாக உயர்த்திக் கொள்வதுடன், இதற்கு அடிகோலிய செல்வி புளோரன்ஸ் நைற்றிங்கேல் அம்மையாரையும் நன்றியுடன் நினைவு கூர்வோம்.

நோத்சீ லிமிட்டெட்

பாரம்பரியக் கைத்தொழில் மற்றும் சிறுதொழில்கள் முயற்சி
அபிவிருத்தி அமைச்சு

**நோத்சீ லிமிட்டெட் நிறுவனத்தின் உற்பத்திப் பகுதிக்கான பயிலுனர்களை இணைத்துக் கொள்வதற்கான நேர்முகத் தேர்வு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**கடற்றொழில் வலை உபகரணங்களை உற்பத்தி செய்யும் இயந்திரம் மற்றும் அதன் தொழில் நுட்பப் பகுதிகளில் வேலைவாய்ப்புகளை பெற்றுக் கொள்வதற்கான ஆண் பயிலுனர்கள் 10 பேர் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.**

விண்ணப்பதாரர்கள் குருநகரில் அமைந்துள்ள எமது வலைத் தொழிற்சாலை சுற்றாடலில் இருந்து 7 கி.மீ தொலைவுக்கு உட்பட்டவராயிருந்தால் விரும்பத்தக்கது.

**கல்வித் தகைமை:**
கல்விப் பொது தராதரம் (G.C.E. O/L) வரை பயின்றவர்களாகவும், தொழில்நுட்பப் பரீட்சைச் சான்றிதழ்கள் பெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும். மேலும் க.பொ.த. சா/ தரத்தில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களில் சித்தியடைந் தவர்களுக்கு முன்னுரிமையும் விசேட படிகளும் வழங்கப்படும்.

**வயதெல்லை:**
விண்ணப்பத் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 25 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பளம் மற்றும் நியமனம்:**
தேர்வுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் முதலில் ஒரு வருட காலப்பகுதிக்குப் பயிலுனர்களாக நியமிக்கப்படுவர். மாதம் ஒன்றுக்கு ரூபா 6,000/= வழங்கப்படுவதுடன் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பன நிறுவனத்தினால் செலுத்தப்படும்.

**விண்ணப்பித்தல் மற்றும் நேர்முகத் தேர்வு விவரம்:**
மேற்படி வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள ஆர்வமுள்ளவர்கள் தங்களது சுயவிவரக்கோவை மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டைப் பிரதி, கிராம சேவையாளர் நற்சான்றிதழ்ப் பத்திரம், பாடசாலை விடுகைப் பத்திரம் என்பனவற்றுடன் குருநகரில் அமைந்துள்ள நோர்த்சீ லிமிட்டெட்டின் தலைமை அலுவலகத்தில் 16.05.2011 அன்று மு.ப. 10 மணி முதல் பி.ப. 12.30 மணிவரை இடம்பெறவுள்ள நேர்முகத் தேர்வில் விண்ணப்பங்களை நேரடியாக வழங்கிக் கலந்துகொள்ள முடியும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றோம். நியமனங்கள் தாமதமின்றி வழங்கப்படும்.

பிரதிப் பொது முகாமையாளர்,
நோர்த்சீ லிமிட்டெட்,
வலைத்தொழிற்சாலை,
குருநகர், யாழ்ப்பாணம். (சி/75965)

தொ.பேசி:- 0212222733,
தொ.நகல்:- 0212220713
மின்னஞ்சல்:-northsealtd@sltnet.com

## நெல்சிப் திட்டத்தில் வீதி புனரமைப்பு

வரணி, மே 12

வரணி, கரம்பைக்குறிச்சி மேற்கு அம்மாகடை வீதி நெல்சிப் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இவ்வருடம் புனரமைக்கப்படவுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபையினரால் நெல்சிப் திட்டத்தின் மூலம் இவ் வாண்டு புனரமைக்கப்படவுள்ள மூன்று அபிவிருத்தித் திட்டங்களுள் இந்த வீதியும் ஒன்றாகும்.

நீண்டகாலம் புனரமைக்கப்படாத இந்த வீதி நெல்சிப் திட்டத்தின் மூலம் இவ் வாண்டு புனரமைக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-122)

## மோ.சைக்கிள் மோதி மாணவன் காயம்

பாடசாலையில் இருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த போது மாணவர் மீது மோட்டார் சைக்கிள் மோதியமையால் அவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன் ர. கிருஷாந்தன் (வயது-12) என்பவரே இவ் [illegible]

(ம-323)

45 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
16.05.1919

உதிர்வு
29.03.2011

அமரர் இ.நவரெத்தினம் (திருநாவுக்கரசு)

(புகையிரத நிலைய ஓய்வுபெற்ற அதிபர்)

கடந்த 29.03.2011 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (12.05. 2011) வியாழக்கிழமை மன்னார் திருக்கேதீஸ்வரப் பாலாவிக் கரையிலும் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் நாளை (13.05.2011) வெள்ளிக்கிழமை எமது இல்லத்திலும் நடைபெறும் என்பதை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

S.S.இராமகிருஷ்ணன்,
பிரதான வீதி,
சின்னக்கடை, மன்னார்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(40-25-24)(4096)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு- கிழக்கு இணைந்த மாநிலத்தில் தன்னாட்சி உரிமையுடனான தீர்வு தேவை

## பேச்சில் அரசு முன்வைக்க வேண்டும் என்கிறது தமிழரசுக்கட்சி

யாழ்ப்பாணம், மே 12

தமிழ், முஸ்லிம் மக்களின் அடிப்படை அரசியல் உரிமைகளை அடிப்படையாகக் கொண்டு சுயநிர்ணய உரிமைத் தத்துவத்தின் படியும் இணைந்த வடக்கு-கிழக்கு மாநிலத்தில் தன்னாட்சி உரிமைத் தத்துவப்படியும் தீர்வு ஒன்றைக் காணும் வகையில் அரசு தீர்வை முன்வைக்க வேண்டும்.

இந்த அடிப்படைக் கோட்பாடுகளில் எந்த விட்டுக் கொடுப்பும் இல்லாமல் அரசியல் தீர்வை எட்டுவதற்குத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அனைத்து முயற்சிகளையும் எடுக்க வேண்டும்.

அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி மேற்கண்டவாறு கோரியுள்ளது. யாழ்ப்பாணத்தில் நடத்திய மேதினக் கூட்டத்தில் மேற்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அந்தத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

இலங்கை அரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நடத்தி வரும் பேச்சுக்களை வரவேற்கின்றோம். இந்தப் பேச்சுக்களில் பின்வரும் விடயங்களுக்கு முன்னுரிமை கொடுத்தல் வேண்டும்.

* உயர் பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்பட்டு, அந்தப் பிரதேசத்தில் அந்த நிலங்களுக்குச் சொந்தமான மக்கள் மீளக்குடியமர உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

* மீளக் குடியேற்றப்படுவோருக்குத் தரமான வீடுகளைக் கட்டிக் கொடுப்பதுடன் வாழ்வாதாரங்களுக்கும் உதவிகள் வழங்கப்பட வேண்டும். உயிர் உடைமைகளுக்கான நட்டஈடுகள் சர்வதேச மதிப்பீட்டின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டும்.

* வாழ்க்கையை- உழைப்பாளரை- இழந்த குடும்பப் பெண்கள் மற்றும் அங்கவீனர்களுக்கு வாழ்வளிக்கத் தகுந்த திட்டங்கள் வகுக்கப்பட்டு அவர்களுக்கு வாழ்வாதாரங்களும் வேலை வாய்ப்புக்களும் பயனுற உதவிகள் வழங்கப்பட வேண்டும்.

* நீண்டகாலம் சந்தேகத்தின் பேரில் சிறைகளில் அடைக்கப்பட்டவர்களுக்கும் போர்க் காலத்திலும் அதன் பின்னரும் சரணடைந்தவர்களுக்கும் மன்னிப்பளித்து விடுதலை செய்ய வேண்டுமென்றும் காணாமற் போனவர்களைக் காண்பிக்கவோ அல்லது பொருத்தமான விவரங்களையோ காணாமற் போனோர் உறவுகளுக்கு விரைவில் வழங்க வேண்டும்.

* தமிழ்த்தேசிய இனப்பிரச்சினைக்குத் தமிழ், முஸ்லிம் மக்களின் அடிப்படை அரசியல் உரிமைகளை அடிப்படையாகக் கொண்டு சுயநிர்ணய உரிமைத் தத்துவத்தின்படியும் இணைந்த வடக்கு - கிழக்கு மாநிலத்தில் தன்னாட்சி உரிமைத் தத்துவத்தின் படியும் தீர்வு ஒன்றைக் காணும் வகையில் அரசு தீர்வை முன்வைக்க வேண்டும் என்றும் அந்த அடிப்படைக் கோட்பாடுகளில் எந்த விட்டுக் கொடுப்புக்களுமில்லாமல் அரசியல் தீர்வொன்றை எட்டுவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அனைத்து முயற்சிகளையும் எடுக்க வேண்டும் என்றும் வற்புறுத்துகின்றறோம். (ஒ-ஐ)

# நல்லிணக்க ஆணைக்குழுவின் காலம் ஆறுமாதங்களுக்கு நீடிப்பு

கொழும்பு, மே 12

நாட்டில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் பதவிக்காலம் மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் தலைவர் ஜனாதிபதியிடம் ஆணைக்குழுவின் பதவிக் காலத்தை நீடிக்குமாறு கேட்ட தற்கிணங்க இந்தக் கால நீடிப்பு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் வழங்கப்பட்டுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பதவிக்காலம் இந்த மாதம் 15 ஆம் திகதியுடன் நிறைவடைய இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோதமாக ஆஸி.செல்வோர் மலேஷியாவுக்கு அனுப்பப்படுவர்

## இருநாடுகளுக்கும் இடையில் ஒப்பந்தம்

சிட்னி, மே 12

ஆஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக வந்திறங்குவோரை மலேஷியாவுக்குத் திருப்பியனுப்புவதற்கு அந்த நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.

அடைக்கலம் தேடுகிறவர்கள் வெகுதூரம் கடல்மார்க்கமாக அபாயகரமான பயணங்களை மேற்கொள்வதைத் தடுக்கவும் இந்த மாதிரி மக்களைக் கடல் மார்க்கமாகக் கடத்துவதன் மூலம் தொழில் நடத்துபவர்களுக்குத் தொழில் இல்லாமல் போகச் செய்யவும் இந்தப் புதிய திட்டம் அமுல்படுத்தப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியா மற்றும் மலேஷியா பிரதமர்கள் கடந்த 7ஆம் திகதி வெளியிட்ட ஒரு கூட்டறிக்கையில் இந்தக்கூட்டு நடவடிக்கை பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின்படி ஆஸ்திரேலியாவில் சட்டவிரோதமாக வந்திறங்கும் எந்தவொரு நபரும் மலேஷியாவுக்கு நாடு கடத்தப்படுவார். இம்மாதிரி ஏற்பாடுகளை ஏனைய அண்டை நாடுகளுடனும் செய்து கொள்ளத் தீர்மானித்திருப்பதாக ஆஸ்திரேலிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ப)

# நவாலி இடிகுண்டுப் பகுதிக்கு மின்சாரம் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 12

மிகவும் ஆபத்தான நவாலி இடிகுண்டுப் பிரதேச சூழலுக்கு மின்சாரம் வழங்குவதற்கான மதிப்பீட்டு வேலைகளை சுன்னாகம் மின்சாரசபையினர் மேற்கொள்ளவுள்ளனர்.

இதன்பொருட்டு அந்தப் பிரதேசத்தின் நீள- அகலங்களை அவர்கள் பார்வையிட்டு எத்தனை மின்கம்பங்கள் இடப்பட வேண்டும் எனவும் மதிப்பிட்டுள்ளனர் என்று தெரியவருகிறது.

மிகவும் இருளான நேரத்தில் அந்தப் பிரதேசம் வழியே செல்லும் பொதுமக்கள், வாகனங்கள், மோட்டார் சைக்கிள்களில் செல்வோர் பெரிதும் ஆபத்தை எதிர்நோக்குகின்றனர் என்று சண்டிலிப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்தே இந்தச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ம-302)

# யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இருவருக்கும் தொடர்ந்து விளக்கமறியல்

யாழ்ப்பாணம், மே 12

யாழ்.பல்கலைக்கழகத்தில் கடந்த சனிக்கிழமை வணிக முகாமைத்துவப் பீட மாணவர்களுக்கு இடையில் கைகலப்பு ஏற்பட்டது.

இதன்போது இருமாணவர்கள் கோப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். இவர்கள் இருவரையும் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு யாழ்.மேலதிக நீதிவான் அ.பிரேம்சங்கர் உத்தரவிட்டார்.

சாட்சிகள் சமுகமளிக்காமையால் நேற்று நடைபெறவிருந்த அடையாள அணிவகுப்பும் ஒத்தி வைக்கப்பட்டது.

வணிக முகாமைத்துவ பீட புதுமுக மாணவர்களுக்கு வரவேற்புபசார நிகழ்வுக்கு முன்னிரவு அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது 3 ஆம், 4 ஆம் வருட மாணவர்களுக்கிடையே இடம்பெற்ற கைகலப்பின்போது அங்கு விரைந்த கோப்பாய் பொலிஸார் நிலைமையக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இதன்பின்னர் கைகலப்பில் ஈடுபட்டனர் என்று கூறப்படும் இரண்டு மாணவர்களைக் கைது செய்து யாழ். நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியிருந்தனர்.

நேற்று வழக்கை விசாரணை செய்த யாழ். மேலதிக நீதிவான் அ.பிரேம்சங்கர் சந்தேக நபர்கள் இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ம-9)

## கையளிப்பு...



உலக வங்கியின் நிதியுதவியுடன் கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய் ஆகிய மூன்று கல்வி வலயங்களின் வலயக் கல்விப் பணிப்பாளர்களின் பாவனைக்கென 'பிக்-அப் 'ரக வாகனங்கள் கையளிக்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது. அதன் போது வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். குருகுலராஜாவிடம் வாகனத்துக்கான உறுதிப்பத்திரத்தைக் கையளிக்கிறார். (14)

# கனேடிய அரசு இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளாது

## கனடாவுக்கான இலங்கைத் தூதரக அதிகாரி கருணாரத்ன நம்பிக்கை

கொழும்பு, மே 12

கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனிப்பட்ட ரீதியில் எத்தகைய கருத்துக்களைக் கொண்டிருந்தாலும், அந்த நாட்டு அரசு இலங்கைக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளாது எனத் தாம் நம்புவதாக கனடாவுக்கான இலங்கைத் தூதரக அதிகாரி கருணாரத்ன பரணவித்தாரண தெரிவித்துள்ளார்.

கனேடிய நாடாளுமன்றிக்கு அந்த நாட்டின் புதிய ஜனநாயக கட்சி சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முதலாவது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரான ராதிகா சிற்சபேசன் வெளியிட்டுள்ள கருத்துக்கள் தொடர்பில் தகவல் வெளியிடுகையிலேயே கனடாவுக்கான இலங்கைத் தூதரக அதிகாரி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொட[illegible] மேலும் கூறியவை வருமாறு:-

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ராதிகா சிற்சபேசன் இத்தகைய கருத்துக்களை வெளியிட்டுள்ள போதிலும் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றிய கன்சர்வேடிவ் கட்சி தலைமையிலான அரசு இலங்கையு[illegible] கின்றது.

கன்சர்வேட்டிவ அரசு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை கனடாவில் தடை செய்வதற்கும் அந்த அமைப்புக்காக நிதி சேகரிக்கப்படுவதைத் தடுப்பதற்கும் நடவடிக்கை மேற்கொண்டது.

ஐ.நா. செயலாளர் நாயகம் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பில் கனடாவின் அரசியல் தலைவர்களுக்கு இலங்கைத் தூதரக அதிகாரிகள் விளக்கமளித்து வருகின்றனர்.

இதன் முத[illegible]கட்டமாக கனேடிய நாடாளுமன்ற உறுப்பின[illegible] ராதிகா சிற்சபேசனுக்கு இ[illegible] தொடர்பாகத் தெளிவுபடுத்த[illegible] எண்ணியுள்ளோம்.

நாடாளுமன்ற உறுப்பின[illegible]களுக்கு இலங்கையில் இடம்பெற்ற மனிதாபிமான நடவடிக்[illegible] தொடர்பிலான ஒரு [illegible] தகவல்கள் மாத்[illegible]டைத்துள்ளன.- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போன எமது பிள்ளைகள் என்றாவது ஒரு நாள் வருவார்கள்

## உறவினர் கண்ணீர் மல்கத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 12

காணாமற்போனஎமது பிள்ளைகள் மீண்டும் எம்மைத்தேடி வருவார்கள் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கின்றோம். அவர்களது இறப்புச் சான்றிதழைப் பெற்றுக் கொள்வது குறித்து மனதளவில் கூட நினைக்கவில்லை.

வடக்கில் காணாமற் போனோரின் உறவினர்கள் கண்ணீர் மல்க இவ்வாறு தெரிவித்தனர்.

வடக்கில் கடந்த காலங்களில் கடத்தப்பட்டும், காணாமலும் போனவர்களுக்கு இறப்புச் சான்றிதழைப் பெற்றுக் கொடுக்கும் சட்ட மூலத்தைப் பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு மேற்கொண்டது.

இந்தச் சட்டம் கடந்த வருடம் (2010ஆம் ஆண்டு) டிசெம்பர் மாதம் கொண்டுவரப்பட்டது. இருப்பினும், அந்த இறப்புச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ள எவரும் இதுவரை விண்ணப்பிக்கவில்லை. இது குறித்து அவர்களிடம் கேட்டபோது மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இது தொடர்பாக அவர்கள் தெரிவித்தவை வருமாறு:

எமது கண் முன்னாலே கடத்திச் செல்லப்பட்ட எமது உறவுகளையும் தொழில் நிமித்தம் வெளியில் சென்றவர்கள் காணாமற் போனமை குறித்தும் பல்வேறு தரப்பினரிடமும் முறைப்பாடுகளை விடுத்திருந்தோம்.

ஆனால், எமது கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. ஆனாலும், நாங்கள் மனம் தளரவில்லை. எமது பிள்ளைகள் உயிருடன்தான் இருக்கின்றார்கள் என்று எங்கள் உள்மனது சொல்கிறது. இறைவன் துணையுடன் அவர்கள் மீண்டும் வருவார்கள்.

என்றோ ஒரு நாள் எங்களிடம் வருவார்கள் என்ற நம்பிக்கையில் தான் இன்றும் காத்திருக்கின்றோம். எங்கள் நம்பிக்கை வீண் போகாத வகையில் அரசு செயற்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர். (ம-9)

# அடிப்படை வசதிகள் ஏற்படுத்த உதயபுரம் மக்களுக்கு உறுதியளிப்பு

கொழும்புத்துறை, மே 12

கொழும்புத்துறை உதயபுரம் மக்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

கொழும்புத்துறை உதயபுரம் கிராமத்தில் மீளக்குடியமர்ந்த மக்களின் அடிப்படைத் தேவைகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

அடிப்படைச் சுகாதார வசதியை ஏற்படுத்தும் பொருட்டு தற்காலிக மலகூடம் அமைக்க உடனடியாக ஏற்பாடு செய்வதாகவும் பொதுக்கிணறு, வீதி வசதிகள், தும்புக்கைத் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தருவதாகவும் இந்தச் சந்திப்பில் அமைச்சர் உறுதி வழங்கினார்.

இந்திய வீட்டுத்திட்டத்தின் பணிகள் ஆரம்பிக்கப்படும் போது இந்தப் பகுதிக்கும் தேவையான வீடுகளை ஒதுக்க ஆவன செய்வதாகவும் இதில் கூறப்பட்டது.

உதயபுரத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின், உதவி மேயர் து.இளங்கோ, நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் மற்றும் அதிகாரிகள், தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தாம் குடியமர்ந்து பல மாதங்களாகியும் இதுவரை எந்தவித உலர் உணவு விநியோகங்களோ மற்றும் உதவிகளோ கிடைக்கவில்லை என்று மக்கள் இதில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-135)

## வளர்ச்சி நிலை...



இணுவில் இந்துக்கல்லூரியின் விசேடகல்வி வளநிலையத் திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் மங்கள விளக்கேற்றினார். (ம-313)

# யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவில் சொந்த இடமின்றி 517 குடும்பங்கள்

## பிரதேச செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 12

யாழ்.பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கோயில்கள், மடங்களுக்குரிய காணிகளிலும், திணைக்களங்களுக்குரிய காணிகளிலும் 517 குடும்பங்கள் குடியிருக்கின்றன.

யாழ்.பிரதேச செயலகத்தில் இடம் பெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தின் போது பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாகப் பிரதேச செயலர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கோயில்கள் மடங்களுக்குரிய காணிகளில் 320 குடும்பங்கள் குடியிருக்கின்றன.

இதில் வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயக் காணிகளில் 120 குடும்பங்களும் வதிரிபீடமன்றாடும் விநாயகர் ஆலயக் காணிகளில் 8 குடும்பங்களும் இலந்தைக் குளம் பிள்ளையார் ஆலயக் காணிகளில் 02 குடும்பங்களும் பழனி ஆண்டவர் ஆலயக் காணிகளில் 18 குடும்பங்களும் தண்டாயுதபாணி ஆலயக் காணியில் ஒரு குடும்பமும் மருதடிப் பிள்ளையார் ஆலயக் காணிகளில் ஐந்து குடும்பங்களும் பெருமாள் கோயில் ஆலயக் காணிகளில் 5 குடும்பங்களும் குருபார அன்னை சத்திரத்தில் 2 குடும்பங்களும் குடியிருக்கின்றன.

கடையிற்சுவாமி ஆலயத்தில் 7 குடும்பங்களும் விடத்தல்தீவு பிள்ளையார் ஆலயத்தில் 8 குடும்பங்களும் சிதம்பரக் கோயில் ஆலயத்தில் 11 குடும்பங்களும் வெள்ளிக்கிழமை மடத்தில் 76 குடும்பங்களும் கதிரேசன் ஆலயத்தில் 8 குடும்பங்களும் வில்லூன்றிப் பிள்ளையார் ஆலயத்தில் 49 குடும்பங்களுமாக 320 குடும்பங்கள் குடியிருக்கின்றன.

இதேபோல, திணைக்களக் காணிகளில் 197 குடும்பங்கள் தங்கியிருக்கின்றன. அதில் சுங்கத்திணைக்கள சுங்க விடுதியில் 31 குடும்பங்களும் புகையிரதத் திணைக்கள அலுவலகத்தில் 56 குடும்பங்களும் அலுப்பாந்தி புகையிரத பாதையில் 52 குடும்பங்களும் நீதிமன்ற விடுதியில் 6 குடும்பங்களும் உயர் தொழில் நுட்பக் கல்லூரி வளாகத்தில் 35 குடும்பங்களும் மதுவரித்திணைக்கள வளாகத்தில் 17 குடும்பங்களுமாக 197 குடும்பங்கள் குடியிருக்கின்றன.

கரையோரமாகவுள்ள அரச காணிகளில் குடியிருக்கும் மக்கள், அரச திணைக்களக் காணிகளில் குடியிருக்கும் மக்கள் கோயில் மற்றும் மடங்களுக்குரிய காணிகளில்குடியிருக்கும் மக்கள், தனியார் காணிகளில் அத்துமீறிக் குடியிருக்கும் மக்கள் எனப் பிரதேச செயலகப் பிரிவில் காணி தொடர்பான பிரச்சினைகள் உள்ளன- என்றார். (ம- 14-9)

# பன்றி இறைச்சி விற்றவருக்கு அபராதம்

தென்மராட்சி, மே 12

சாவகச்சேரி சந்தையில் அனுமதிப் பத்திரமின்றி பன்றி இறைச்சி விற்பனை செய்த கிளிநொச்சி வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிவான் இந்த நபருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். அபராதத் தொகை செலுத்தத் தவறின் 3 மாத சாதாரணசிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (ம-207)

## அரச கருமமொழிக் கொள்கை அமுலாக்கல் செயலமர்வு

# செயலக நிகழ்வில் பொலிஸ் அதிகாரிகள் பங்குபற்றாததால் வாசுதேவ சீற்றம்

## விளக்கம் கோருமாறு பணித்தார் அமைச்சின் செயலாளரை

யாழ்ப்பாணம், மே 12

யாழ். செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அரச கரும மொழிக் கொள்கை அமுலாக்கல் செயலமர்வில் பொலிஸ் தரப்பில் அதிகாரிகள் எவரும் கலந்து கொள்ளவில்லை. இந்த விடயம் அறியவரவே சீறிப்பாய்ந்தார் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார.

இது குறித்து யாழ். பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் விளக்கம் கோரித் தமக்கு உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு அமைச்சர் வாசுதேவ தமது அமைச்சின் செயலாளரான திருமதி எம். எஸ். விக்கிரம சிங்கவைப் பணித்தார்.

யாழ் செயலக கேட்போர் கூடத்தில் - மேடையில் அமர்ந்திருந்தவாறே - வாசுதேவ [illegible] தொனியில் இந்தப் பணிப்பை விடுத்தார்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:-

அரச கரும மொழிக் கொள்கை அமுலாக்கம் குறித்து நிகழ்வில் பங்கேற்றிருந்த அரச திணைக்களங்களின் உயர் மட்ட அதிகாரிகளின் கருத்துகளை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கேட்டறிந்து கொண்டார்.

தமிழ் மொழி அமுலாக்கம் குறித்துப் பல்வேறு குற்றச் சாட்டுகள் அங்கு அடுக்கடுக்காக முன்வைக்கப்பட்டன.

பொலிஸ் நிலையங்களில் தமிழில் முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்வதில்லை என்ற குற்றச் சாட்டு பலராலும் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. சிங்களமும் தமிழும் அரச கரும மொழிகள். தமிழ்ப் பகுதியில் தமிழில் தான் முறைப்பாடுகள் ஏற்கப்பட வேண்டும். தமிழ் மொழி மூல பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பற்றாக்குறையாக உள்ளது. தற்போது தமிழ் மொழி மூல பொலிஸ் உத்தியோகத்தர்களை பொலிஸ் சேவைக்கு உள்வாங்கியிருக்கிறோம். வரும் காலத்தில் அந்தப் பிரச்சினை இருக்காது என்று அமைச்சர் வாசுதேவ அங்கு விளக்கினார்.

அந்தச் சமயம் நிகழ்வில் [illegible] அமர்ந்திருந்த அதிகாரியைப் பார்த்து பொலிஸ் நிலைய முறைப்பாடுகள் தொடர்பாக உமது கருத்து என்ன? அதனை இங்கு தெளிவுபடுத்தும் என்று கூறினார் அமைச்சர். அதற்கு அந்த அதிகாரி அசடு வழிய நான் பொலிஸ் பொறுப்பதி காரி யல்லர். யாழ்ப்பாண சிறைச்சாலையின் சிரேஷ்ட அத்தியட்சகர். எனது பெயர் சந்தன எக்கநாயக்கா என்று புன்னகைத்தவாறு பதில ளித்தார் அத்தியட்சகர். ஒருவாறு சமாளித்துக் கொண்டு பொலிஸ் அதிகாரிகள் எழுந்து பதிலளிக்குமாறு கேட்டுக்கொண்டார். அங்கு சிறிது நேரம் மௌனம் நிலவியது. எவருமே பதிலளிக்கவில்லை.

பொலிஸ் அதிகாரிகள் எவரும் நிகழ்வில் கலந்து கொள்ளாதமை அமைச்சருக்குத் தெரியவந்தது.

கடும் சீற்றம் கொண்ட அமைச்சர், ஒலி வாங்கியைக் கையில் பிடித்தவாறு தனது அமைச்சின் செயலாளருக்கு மிகக் காட்டமாக முற்கொண்டு கூறிய பணிப்புரையை விடுத்தார். அவரும் பதறிப்போய் அமைச்சருக்கு 'ஆம்' எனப் பதிலளித்தார்.

இது தொடர்பாக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, இந்தச் செயலமர்வுக்கு அரச திணைக்களங்களின் உயர் அதிகாரிகளுக்கு அழைப்பு விடுத்திருந்தோம். அதேபோலவே பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கும் அழைப்பு அனுப்பினோம் என்றார். (ஒ-14-09)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.பிரதேச செயலர் பிரிவில் உயர் பாதுகாப்பு வலயமாக இருந்து

# விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் 3 ஆயிரத்து 392 பேர் மீளக்குடியமர்வு

யாழ்ப்பாணம், மே 12

யாழ்.பிரதேச செயலர் பிரிவில் உயர் பாதுகாப்பு வலயமாக இருந்து விடுவிக்கப்பட்ட 9 கிராம அலுவலர் பிரிவுகளில் 981 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 392 அங்கத்தவர்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

கடந்த 9 ஆம்திகதி இடம் பெற்ற யாழ்ப்பாணப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போது பிரதேச செயலர் திருமதி தெய்வேந்திரம் சுகுணரதி இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

மீளக்குடியமர்வு தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நெடுங்குளம் ஜே/61 கிராம அலுவலர் பிரிவிலுள்ள கொழும் புத்துறைப் பகுதியில் 55 குடும்பங்களைச் சேர்ந்த 160 அங்கத்தவர்களும், எழிலூர் கிராமத்தில் 180 குடும்பங்களைச் சேர்ந்த 411 அங்கத்தவர்களும், மகேந்திரபுரம் கிராமத்தில் 92 குடும்பங்களைச் சேர்ந்த 310 அங்கத்தவர்களும், வசந்தபுரம் கிராமத்தில் 112 குடும்பங்களைச் சேர்ந்த 402 அங்கத்தவர்களும் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

கொழும்புத்துறை கிழக்கு ஜே/62 கிராம அலுவலர் பிரிவில் உள்ளடங்கும் கொழும்புத் துறைப் பகுதியில் 36குடும்பங்களைச் சேர்ந்த 123 அங்கத்தவர்களும் புனிதபுரம் கிராமத்தில் 46 குடும்பங்களைச் சேர்ந்த 162 அங்கத்தவர்களும் உதயபுரம் கிராமத்தில் 44 குடும்பங்களைச் சேர்ந்த 165 அங்கத்தவர்களும் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

பாஷையூர் கிழக்கு ஜே/64 கிராம அலுவலர் பிரிவில் 26 குடும்பங்களைச் சேர்ந்த 85 அங்கத்தவர்களும், பாஷையூர் மேற்கு ஜே/65 கிராம அலுவலர் பிரிவில் 29 குடும்பங்களைச் சேர்ந்த 362 அங்கத்தவர்களும், றெக்களமேசன் கிழக்கு ஜே/68 கிராம அலுவலர் பிரிவில் 180 குடும்பங்களைச் சேர்ந்த 671 அங்கத்தவர்களும் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

அதேபோல், றெக்களமேசன் மேற்கு ஜே/69 கிராம அலுவலர் பிரிவில் 122 குடும்பங்களைச் சேர்ந்த 494 அங்கத்தவர்களும், சின்னக்கடை ஜே/72 கிராம அலுவலர் பிரிவில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 12 அங்கத்தவர்களும், யாழ்.நகர் மேற்கு ஜே/73 கிராம அலுவலர் பிரிவில் 35 குடும்பங்களைச் சேர்ந்த 133 அங்கத்தவர்களும் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு 981 குடும்பங்கள் இது வரையும் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-14-9)

## பெண் சாரணிய வழிகாட்டுநர்கள் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், மே 12

யாழ்மாவட்டக் கல்வி வலயங்கள் அனைத்தையும் சேர்ந்த பெண் சாரணிய வழிகாட்டுநர்களுக்கு வெளிநாடுகளில் சாரணிய கற்கைகளைத் தொடர்வதற்கு சந்தர்ப்பங்கள் கிடைத்துள்ளமையால் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் சம்பந்தப்பட்டவர்களை வடமாகாண பெண் சாரணிய ஆணையாளரைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அயர்லாந்து,கொரியா, இந்தியா ஆகிய நாடுகளுக்குச் செல்லும் சந்தர்ப்பங்கள் உள்ளதால் பாடசாலை மட்டத்தில் உள்ள வழிகாட்டுநர்கள் நேரடியாகத் தொடர்பு கொள்ளுமாறு பெண் சாரணிய மன்றச் செயலாளர் அறிவித்துள்ளார். (ஒ-10)

போக்குவரத்துக்கு இடையூறாக

## நகரில் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்ட இருவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், மே 12

யாழ்.நகரில் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இரண்டு நடைபாதை வியாபாரிகளுக்குத் தலா ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

ஆஸ்பத்திரி வீதியில் இரு வேறு இடங்களில் உடைகள், செருப்புகள் மற்றும் சீப்பு, சவர்க்காரம் போன்றவற்றைப் பரப்பி வியாபாரம் செய்த இருவர் யாழ்.பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டில் யாழ்.பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு முன்னிலையில் இவர்கள் ஆஜர் செய்யப்பட்டனர்.

விசாரணைகளின் போது இருவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தலா ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.


இதேவேளை -

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் சுற்றுச் சூழலைப் பாதிக்கும் வகையில் வீட்டுக்கு முன்பாக வீதியில் குப்பை கொட்டிய குற்றச் சாட்டியல் மூவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

தலா 500 ரூபா வீதம் அபராதத்தை பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு விதித்துத் தீர்ப்பளித்ததுடன் எச்சரிக்கையும் விடுத்தார்.

(ஒ-ஐ-9)

## அற்புதக் காட்சி...



தாவடி ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகர் ஆலய தேர்த்திருவிழாவில் சுவாமி தேரடி நோக்கிச் சென்று தேரில் எழுந்தருளி இருக்கும் கண்கொள்ளாக் காட்சி. (ம-86)

## கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 299 குடும்பங்களே மீளக்குடியமர வேண்டும்

யாழ். அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம், மே 12

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இன்னும் 299 குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும் என்று யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் அநேகமான பிரதேசங்களில் மக்கள் மீளக்குடியமர்தப்பட்டுள்ளனர். இருப்பினும் 2 கிராம உத்தியோகத்தர் பிரிவில் மக்கள் மீளக்குடியமர்த்தப்படவில்லை.

ஜே/ 284 கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த வளலாய் பிரதேசத்தில் 246 குடும்பங்களைச் சேர்ந்த 807 பேரும் ஜே/ 283 கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த இடைக்காடு பிரதேசத்தில் 53 குடும்பங்களைச் சேர்ந்த 136 பேரும் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும்.

இவர்களை மீளக்குடியமர்த்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர்மேலும்தெரிவித்தார். (ம-9)

## சட்டவிரோத மின்சாரத்தை பெற்றவர் மாட்டிக்கொண்டார்

தென்மராட்சி, மே 12

சரசாலைப் பகுதியில் சட்ட விரோதமாக மின்சாரம் பெற்ற நபர் மின்சார சபை உத்தியோகத்தர்களிடம் வசமாக மாட்டிக் கொண்டார்.

இந்த நபருக்கு எதிராக மின்சார சபை அத்தியட்சகரால் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு விசாரணைக்குஎடுக்கப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிவான் இந்த நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

அத்துடன், மின்சார சபைக்கு ஏற்பட்ட இழப்புக்காக 8 ஆயிரம் ரூபா நட்ட ஈடாகச் செலுத்துமாறும் உத்தரவிட்டார்.

அபராதத் தொகையைச் செலுத்தத்தவறின்3 மாத சாதாரண சிறைச் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார்.

(ம-207)

## கெழுத்து மீன் குஞ்சுகள் பெருமளவில் பிடிபடுகின்றன

தென்மராட்சி, மே 12

சாவகச்சேரி கடலேரி இறால் கூடுகளுக்குள் பெருமளவு கெழுத்து மீன்குஞ்சுகள் கடந்த சில நாள்களாக பிடிபடுகின்றன என்று கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர்.

கடலேரியில் அமைக்கப்பட்டுள்ள களங்கண்டிகளில் உள்ள இறால் கூடுகளிலே அதிக எண்ணிக்கையான கெழுத்து மீன் குஞ்சுகள் பிடிபடுகின்றன.

பிடிபடும் மீன்குஞ்சுகள் கூட்டைத் துப்புரவு செய்யும் வேளையில் இறந்து விடுவதால் கடலுக்குள் எறிந்து விடுகின்றார்கள்.

சோளகக் காற்று ஆரம்பித்த பின்னர் கடந்த ஒரு வாரமாக கோயிற்குடியிருப்பு கடலேரியில் உள்ள இறால் கூடுகளுக்குள்ளேயே இந்த மீன் குஞ்சுகள் பிடிபடுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. (எ-207)

## பொலிஸாருக்கு சாராயம் விற்ற நபருக்கு அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம், மே 12

பொலிஸாருக்கு சாராயம் விற்பனை செய்த நபரை சிவில் உடையில் சென்ற பொலிஸார் மடக்கிப்பிடித்து யாழ்.நீதிமன்றில் நேற்றுமுன்தினம் ஒப்படைத்தனர்.

வழக்கை விசாரணை செய்த யாழ். நீதிமன்ற பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு குறித்த நபருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

யாழ்.நகரில் உள்ள வீடொன்றில் அனுமதிப் பத்திரமின்றி சாராயம் விற்பனை செய்வதாகக் கிடைத்த தகவலையடுத்து சிவில் உடையில் சென்ற பொலிஸார் சாராயம் இருக்கிறதா? என்று கேட்டபோது வந்தவர் பொலிஸார் என்பதை அறியா பணத்தை வாங்கிக் கொண்டு சாராயத்தைக் கொடுத்தார்.

அந்தநேரம் குறித்த நபர் கையும் மெய்யுமாக மடக்கிப் பிடிக்கப்பட்டு யாழ். நீதிமன்றில் ஆஜர்ப் படுத்தப்பட்டார். வழக்கை விசாரணை செய்த நீதிவான் குற்றவாளிக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

(எ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
12 மே 2011 வியாழக்கிழமை

# அற்புதங்கள் நிறைந்த ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய பெருந்திருவிழா அடுத்த மாதம் 7 ஆம் திகதி ஆரம்பம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற ஆலயங்கள் பல உள்ளன. வற்றாப்பளை அம்மன் கோயில், கன்னிமார் கோயில், காட்டு விநாயகர் ஆலயம், தான்தோன்றீஸ்வரர் ஆலயம், தான்தோன்றி ஐயனார் ஆலயம், கழுத்து வெட்டிப்பிள்ளையார் ஆலயம் என வரலாறு படைத்த பல ஆலயங்கள் பழைய வரலாறுகளைத் தாங்கி மக்களுக்கு அருட் கடாட்சங்களை அள்ளி வழங்கி வருகின்றன.

இந்த வரிசையில் முல்லை மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மிகவும் சக்தி வாய்ந்த தான்தோன்றீசுவரர் ஆலயம் அமைந்துள்ளது. இதற்கும் ஒரு வரலாறும் உண்டு. இற்றைக்கு சுமார் 100 ஆண்டுகளுக்கு முன் அங்கு வாழ்ந்த மக்களின் முக்கிய தொழிலாகக் காடுகளை அழித்து குரக்கன் செய்கையில் ஈடுபடுவது அமைந்திருந்தது.

மக்கள் தற்போது சிவன் எழுந்தருளியுள்ள ஆலயத்தின் காணியை வெட்டித் துப்புரவு செய்து குரக்கன் செய்கையில் ஈடுபட்டனர். குரக்கன் விளைந்ததும் அதனை அறுத்தெடுத்து விட்டு அறுக்கப்பட்ட அடிக் கட்டைகளுக்குத் தீயிட்டுக் கொளுத்தினர். எல்லா இடமும் எரிந்தது. ஆனால் ஓர் இடம் மட்டும் எரியாமல் வட்டமாகக் காணப்பட்டது. இதனைக் கவனித்த மக்கள் அந்த இடத்தை மண்வெட்டியால் வெட்டித் துப்புரவு செய்தபோது மண்வெட்டி அதிலுள்ள சிவலிங்கத்தில் பட்டதும் பால் வடியத் தொடங்கியது. இதனைக் கண்ணுற்ற மக்கள் இந்த விடயத்தை ஏனையோருக்கும் தெரிவித்தனர். அவர்கள் வந்து பார்த்தபோது சிவலிங்கம் இருப் பது தெரியவந்தது. உடனே அந்த மக்கள் அதற்கு மேலாகப் பனை ஓலையால் வேய்ந்த சிறிய கொட்டில் ஒன்றைப் போட்டு அதற்குப் பூசை முதலியவற்றைச் செய்துவிட்டு பிட்டு மூடியால் மூடிவிட்டுச் செல்வர். எனவே, கொளுத்தப்பட்ட குரக்கன் ஒட்டு எரியாததால் வேகாவனம் என்ற பெயரிலே சிவனுடைய பெயரும் வழங்கப்பட்டு

> **முல்லைத்தீவு மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற ஆலயங்கள் பல உள்ளன. இதில் வற்றாப்பளை அம்மன் கோயில், கன்னிமார் கோயில், காட்டு விநாயகர் ஆலயம், தான்தோன்றீவரர் ஆலயம், தான்தோன்றி ஐயனார் ஆலயம், கழுத்து வெட்டிப்பிள்ளையார் ஆலயம் என வரலாறு படைத்த பல ஆலயங்கள் பழைய வரலாறுகளைத் தாங்கி மக்களுக்கு அருட்கடாட்சங்களை அள்ளி வழங்கி வருகின்றன.**

ஒட்டு எரியா தபடியால் அந்த இடத்துக்கு ஒட்டுசுட்டான் என்ற பெயரும் வழங்கலாயிற்று.

அந்தச் சிவலிங்கமானது நாளொருவண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளரத் தொடங்கிச் சுமார் ஓர் அடி உயரம் வரை வளர்ந்துவிட்டது.

வேகாவனப் பெருமான் தனக்கென ஆலயம் ஒன்றை அமைப்பதற்கான பல அற்புதங்களைச் செய்தார். அப்போதைய மணியகாரரான காலஞ்சென்ற எஸ்.யு. சிவராசா என்பவரோடு உரையாடல் மூலம் பல அற்புதங்களை நிகழ்த்தினார். கோயில் வேலைக்களுக்காக கணக்கர் என்று சொல்லப்படுபவர் யாழ்ப்பாணத்திலிருந்து சிமெந்து பீப்பாக்களைக் கொண்டுவந்தார். அங்கு வந்ததும் இருட்டி விட்டதால் வெளியில் அரச மரத்தின் கீழ் அவற்றைப் பறித்து அடுக்கிவிட்டு பொழுதுவிடிய எடுப்போம் என எண்ணி வீடு சென்றுவிட்டார்.

அன்றிரவு திடீரென மேகம் இருள் சூழ்ந்து கனமழை பெய்யத் தொடங்கியது. அப்போது கடவுளே சிமெந்து பீப்பா யாவும் நனையப்போகின்றன. நான் என்ன செய்வேன் என நினைத்தவாறு லாம்பைக் கொளுத்தி எடுத்துக் கொண்டு அங்கே ஓடினார். சிமெந்து பீப்பாக்கள் யாவும் நனையாது கட்டப்பட்ட கோயிலின் ஒரு மூலையில் அடுக்கப்பட்டு இருந்ததைக் கவனித்தார். யாரோ புண்ணியவான்கள் இந்தக் கைங்கரியத்தைச் செய்துள்ளனர் என நினைத்து அந்தக் கோயிலியே படுத்துவிட்டார். கனவிலே சிவபெருமானால் அசரீரி ஒன்று விடுக்கப்பட்டது. ''நான் சிமெந்து பீப்பா தூக்கி அடுக்கியதால் எனக்கு வருத்தம் ஏற்பட்டுவிட்டது எனக்குக் காலையில் சுடுதண்ணீர் வைத்துக் குளிப்பாட்ட வேண்டும்'' என சிறிய முனகலுடன் அவருக்குக் கூறப்பட்டது. அவர் கண் விழித்தார் கனவு. அவர் கூனிக் குறுகி செய்வதறியாது உடனே மணியகாரரிடம் சென்று நடந்ததைக் கூறினார். அவர் அடுத்த நாள் காலையில் தெரிவித்தபடி அப்படியே செய்யப்பட்டது. இப்படியான பல அற்புதங்களைச் செய்துள்ளார்.

ஒருவர் சிவன் கோயிலுக்கென வாழைக்குலை ஒன்றில் காசுகட்டி அது பழுத்தவுடன் சிவனுக்குத் தருவதாக நேர்ந்து கொண்டார். வாழைக்குலையும் பழுத்துவிட்டது. அவர் அதனைப் பக்குவமாகக் கோயிலுக்கு எடுத்து வரும் வழியில் கோயில் மணியகாரரான சிவராசா அவரை மறித்து ''எங்கே கொண்டு போகிறாய்? நல்ல கப்பல் வாழைப் பழமாக உள்ளது'' எனக் கூறி ஒன்றைப் பிடுங்கிச் சாப்பிட்டுவிட்டார். இதனால் வாழைக்குலை கொண்டு வந்தவர் மனமுடைந்து நான் சிவனுக்குக் கொண்டு செல்வதை இவர் பிடுங்கிவிட்டாரே என மனம் வருந்தி கோயிலிலே கொடுத்துவிட்டு சென்றவர் மனம் வருந்திய நிலையிலே நித்திரையாகிவிட்டார். அவரது கனவிலே சிவராசா தோன்றி நான் வாழைப் பழம் பிடுங்கிச் சாப்பிட்டதற்கு மனம் வருந்தாதே. அந்தப் பழம் ஒன்றைத்தான் நான் சாப்பிட்டேன். சிவராசா வடிவிலே நான்தான் வந்தேன் எனக் கூறினார். அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். இப்படியாக இன்னும் எத்தனையோ அற்புதங்களை நிகழ்த்திய ஒட்டுசுட்டான் தான்தோன்றீசுவரரின் திருவிழா அடுத்த மாதம் 7 ஆம் திகதி கொடியேறி 16 நாள்கள் நடைபெறும்.

ஆலயத்துக்கு இந்த முறை பெருந்திரளான மக்கள் வருவார்கள். யுத்த சூழ்நிலைக்குப் பின்னர் தென் பகுதியிலிருந்தும் மக்கள் வருவார்களென எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போது கோயிலை அண்டிய பகுதிகள் காடாக உள்ளன. இதனால் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படலாம். ஆகவே, திருவிழாவுக்கு முன்பாகவே ஆலயத்தைச் சுற்றியுள்ள காடுகள், பற்றைகள் ஆகியவை துப்புரவு செய்யப்படுவதுடன், கழிப்பறைகளும் உருவாக்கப்படவேண்டும்.

ஆலயச் சூழலின் துப்புரவிலேதான் சுகாதாரம் தங்கியுள்ளது. எனவே, இதனோடு சம்பந்தப்பட்டவர்கள் இந்த விடயத்தில் கவனம் எடுத்து ஆவன செய்து சுகாதாரத்துக்கு இடையூறு ஏற்படாது செயற்பட வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும். ✱

**-இராஜ்தனபால்-**


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1292 நீலம்

துலாம் 05 27 38 49 10-05-2011

ஜக்பொட் பரிசு ரூபா. 3,067,450/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 243,909 | 20/- | 4,878,180/- |
| 2 இலக்கங்கள் | 22,500 | 40/- | 900,000/- |
| 1 இல. + லக்கினம் | 22,318 | 60/- | 1,339,080/- |
| 2 இல. + லக்கினம் | 1,941 | 200/- | 388,200/- |
| 3 இலக்கங்கள் | 594 | 1000/- | 594,000/- |
| 3 இல. + லக்கினம் | 70 | 10,000/- | 700,000/- |
| 4 இலக்கங்கள் | 03 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 3,067,450/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 9,399,460/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 664 | | 730,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 291,999 | | 10,129,460/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 4,157,750/-

## இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

கடகம் 01 04 20 36

ஜக்பொட் பரிசு ரூபா. 500,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 660 | 500/- | 330,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 500,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 664 | | 730,000/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 600,000/-


## ஐநூறு ரூபா அபராதம்

மோட்டார் சைக்கிளில் பயணிக்கும் போது தொலைபேசியில் உரையாடிக் கொண்டு பயணித்த ஒருவருக்கு ஐநூறு ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் ஏ-9 வீதியில் பயணிக்கும் போது தொலை பேசியில் உரையாடியவாறே சென்றார் எனக் குற்றம் சாட்டப்பட்டு ஒருவர் நீதிமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை முன்னிலைப்படுத்தப்பட்டார். குறித்த நபருக்கு ஐநூறு ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டார். (க-6)


### German Language Exam - I

இலகுவான முறையில் குறைந்த கட்டணத்துடன் Fail விட்டவர்களுக்கு விஷேசமாக கற்பிக்கப்படும்.
Contact: M.P. Mahendirarajah
Expert German Teacher T.P: 0775926983

### விற்பனைக்குண்டு

கடைக்குரிய புதிய மர ராக்கைகள், கண்ணாடி அலுமாரி விற்பனைக்குண்டு.
தொடர்புக்கு: 0779267712

### தவறிவிட்டது

முருகையா இராசரெத்தினம் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை 703341659v - Co.OP அடையாள அட்டை, வாகன அனுமதிப் பத்திரம் என்பன பேர்சுடன் திருநெல்வேலி - கல்வியங்காட்டுக்கும் இடையில் 06.05.2011 அன்று தவறிவிட்டன. இதை கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் [illegible] தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.
T.P: 0770784992
238, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வதிரி இரத்தினதாரகையைச் சேர்ந்த திரு.திருமதி தர்மலிங்கம் ரூபாவதி தம்பதியரின் செல்வப் புதல்வன் **ராகவன்** அவர்கள் இன்று (12.05.2011) வியாழக்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் (M.B.B.S) பட்டம் பெறுவதையொட்டி அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பெரியப்பா நா.பரஞ்சோதி குடும்பம்

*'சேதுபதி', துன்னாலை மத்தி, துன்னாலை.* (48,20,24)

## விசேட தேவையுடையவர்களுக்கான சக்கர நாற்காலி

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சிப் பிரதேசங்களைச் சேர்ந்த விசேட தேவையுடையவர்களுக்கு சக்கர நாற்காலி இலவசமாக வழங்கப்படும். வைத்தியம் சார் பொருத்தமான ஆதாரங்களுடன் விண்ணப்பிக்கவும். தகுதி உடையோராகக் கண்டறியப்படுவோருக்கு மட்டும் வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 21.05.2011**

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
யாழ்.றோட்டறிக் கழகம்,
292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

ஏற்பாடு:
றோட்டறியன்
ஈ.சரவணபவன்,
நாடாளுமன்ற உறுப்பினர்,
யாழ்.மாவட்டம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண் டிப்பர்கள், இராணுவ வாகனங்களில் பயணிக்கும் பாடசாலை ஆசிரியைகள்

கிளிநொச்சி, மே 12

கிளிநொச்சிக் கல்வி வலயத்துக்குட்பட்ட பூநகரி கோட்டக் கல்வி அலுவலர் பிரிவில் அமைந்துள்ள வினாசியோடை அ.த.க.பாடசாலை ஆசிரியர்கள் போக்குவரத்து வசதி எதுவுமின்றிப் பெரும் இன்னல்களைச் சந்தித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பூநகரி பிரதான வீதியில் பரமன்கிராயில் இருந்து 15 கிலோ மீற்றர் உள்ளே செல்ல வேண்டிய இந்தப் பாடசாலைக்குச் செல்வதற்கு எவ்வித போக்குவரத்தும் இல்லாத நிலையில் பெண் ஆசிரியர்கள் பலர் மண் டிப்பர்களிலும் இராணுவத்தினரின் வாகனங்களிலும் சென்று பல இன்னல்களைச் சந்தித்து வருகின்றனர். அவ்வாறு மண் டிப்பரோ, இராணுவ வாகனமோ அந்த வீதியால் செல்லாத சந்தர்ப்பத்தில் இவர்கள் திரும்பி வீடு செல்ல வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

பாடசாலை வேளையில் வினாசியோடையில் இருந்து பூநகரி ஊடாக கிளிநொச்சிக்கு வரும் இலங்கைப் போக்குவரத்துச் சபைப் பேருந்து பி.பகல் 3.30 மணிக்கே அங்கு திரும்பிச் செல்கின்றது. இதைவிட வேறு பஸ்கள் எதுவும் இந்த வீதி ஊடாகச் செல்வதில்லை.

இது தொடர்பாக கிளிநொச்சிச் சாலையுடன் தொடர்பு கொண்ட போது அவர்கள் தாம் எதுவுமே செய்ய முடியாது என கைவிரித்து விட்டதாக இந்த ஆசிரியர்கள் கூறுகின்றனர். தாம் யாழ்ப்பாணத்தில் உள்ள தமது வீடுகளுக்குத் திரும்பிச் செல்ல சில நாள்களில் இரவு 10 மணிக்கு மேல் ஆகிவிடுகிறது என்று இவர்கள் கூறி வேதனைப்படுகின்றனர்.

யுத்தத்தால் இடம்பெயர்ந்து மீள ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலையில் கடமையாற்றும் தங்களது இடர் தீர்க்க யாராவது முன்வரமாட்டார்களா என இந்தப் பெண் ஆசிரியர்கள் வேதனையுடன் கூறுகின்றனர். (க-405)

# எரிபொருள்களில் கலப்படம்

பூநகரி, மே 12

பூநகரியிலுள்ள எரிபொருள் நிலையத்தில் விற்பனை செய்யப்பட்டு வரும் பெற்றோல், டீசல் என்பவற்றில் கலப்படம் உள்ளதால் வாகன ஓட்டுநர்கள் சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இந்த எரிபொருள் நிலையத்தை பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடத்தி வருகின்றது. 1990 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியில் இந்த எரிபொருள் நிலையம் வாடியடிப் பகுதியில் நிரந்தரமாக அமைக்கப்பட்டு இயங்கி வந்தது. பின்னர் போர்ச் சூழ்நிலை காரணமாக இதன் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டன.

மீண்டும் 2010 ஆம் ஆண்டு பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் எரிபொருள் நிலையத்தை ஆரம்பித்துச் செயற்பட வைத்தது.

ஆனால் நிலத்தடி எரிபொருள் தாங்கி அமைக்கப்படாத நிலையில் பரல்களிலும், கொள்கலன்களிலும் எரிபொருள்கள் நிரப்பப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

ஆனால் இங்கு விற்பனை செய்யப்படும் பெற்றோல், டீசல் போன்றவற்றில் கலப்படம் காணப்படுவதால் வாகன ஓட்டுநர்கள் பெரும் சிரமங்களுக்கு ஆளாகி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டுமெனப் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர். (க-420)

# சேதமடைந்தது குளத்தின் வான்பகுதி; அடிக்கடி விபத்தில் சிக்கும் பயணிகள்

கிளிநொச்சி, மே 12

கிளிநொச்சியில் இருந்து வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதிகளுக்குச் செல்லும் பிரதான வீதியிலுள்ள வான்பகுதி மோசமான நிலையிலுள்ளதால் இதில் பிரயாணத்தை மேற்கொள்வோர் சிரமங்களுக்கு ஆளாகி வருவதாகத் தெரிய வருகின்றது.

இந்த வீதியிலுள்ள கிளிநொச்சிக் குளத்தின் ஐந்து அடி அகலமான வான் பகுதி நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாது மோசமான நிலையில் காட்சியளிக்கின்றது.

கிளிநொச்சிக் குளத்திலிருந்து வெளியேறும் மேலதிக நீர் இந்த வான் பகுதியூடாகவே வெளியேறும். மேலும் சிறு மழை பெய்தால் கூட இந்தப் பகுதியில் நீர் பாய்ந்து செல்வது வழக்கமாகும்.

இவ்வாறு நீர் பாய்ந்து செல்லும் போதே அதனூடாகப் போக்குவரத்து நிகழ்வதும் வழமையே ஆனால் தற்போது இந்த வான் பகுதி முழுமையாகச் சேதமடைந்து காணப்படுவதால் இங்கே அடிக்கடி விபத்துக்கள் நிகழ்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆகவே இனியும் தாமதம் செய்யாது இதனை உரிய தரப்பினர் சீர் செய்ய வேண்டுமென்பதே அனைவரதும் வேண்டுகோளாகும். (க-405)

புதை குழி...



மோசமான வான் பகுதி: கிளிநொச்சியிலிருந்து வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதிகளுக்குச் செல்லும் பிரதான வீதியிலுள்ள கிளிநொச்சிக் குளத்தின் வான்பகுதி மோசமாகச் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது. (405)

# குருதிக் கொடை நிகழ்வு

மன்னார், மே 12

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற குருதிக்கொடை நிகழ்வில் சுமார் 200 பேர் இரத்த தானம் செய்துள்ளதாக வைத்தியசாலையின் அத்தியட்சகர் எம்.எச்.எம்.அஸாத் தெரிவித்தார்.

இந்தக் குருதிக் கொடை நிகழ்வை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையும் மன்னார்ப் பொலிஸாரும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி யூட் ரதனியும், கௌரவ விருந்தினராக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கொடித்துவக்கும் கலந்து கொண்டனர். (க-601)

# அவசரமாகத் தேவைப்படும் மலசலகூடம்

பூநகரி, மே 12

பூநகரி, வாடியடிப் பகுதியில் அமைந்துள்ள பஸ் தரிப்பு நிலையத்தில் மலசல கூடம் அமைக்கப்படாததால் பிரயாணிகள் பெரும் அவலத்தை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வாடியடி, பூநகரியின் மத்தியில் அமைந்திருக்கின்றது. வாடியடிச் சந்தியினூடாகத் தினமும் 15 இற்கும் மேற்பட்ட பேருந்துகள் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, வவுனியா ஆகிய பிரதேசங்களுக்குப் பயணத்தை மேற்கொள்கின்றன.

இதனால் தினமும் ஏராளமான பிரயாணிகள் தமது பயணங்களை மேற்கொள்வதற்காக வாடியடிக்குச் செல்கின்றனர். ஆனால் இவர்கள் தமது இயற்கை உபாதைகளுக்கான தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு மலசலகூட வசதி எதுவும் இங்கில்லை. இதனால் பெண் பிரயாணிகள் பெரும் அவலங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் உடனடியாகத் தலையிட்டு இந்தப் பகுதியில் மலசலகூடமொன்றை அமைத்துத் தரவேண்டுமென்பதே பாதிக்கப்பட்ட மக்களின் வேண்டுகோளாகும். (க-420)

# ஆசிரியர்களுக்கு கணினிப் பயிற்சி

கிளிநொச்சி, மே 12

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் அதிபர்களாகவும் பிரதி அதிபர்களாகவும் உப அதிபர்களாகவும் கடமையாற்றுபவர்களுக்கான கணினிப் பயிற்சி நெறி நடைபெற்று வருகின்றது.

ஐந்து நாள்கள் நடைபெறும் இந்தப் பயிற்சி நெறியானது பல தொகுதிகளாக நடைபெறுகின்றது. இதன் முதலாவது தொகுதிப் பயிற்சி கடந்த இரண்டாம் திகதி ஆரம்பமானது. இரண்டாவது தொகுதிப் பயிற்சி கடந்த 9 ஆம் திகதி ஆரம்பமானது.

இந்தவிரு தொகுதிகளிலும் பயிற்சி பெறாத அதிபர், பிரதி அதிபர்கள் , உதவி அதிபர்கள் ஆகியோரை அடுத்த தொகுதிகளில் பயிற்சி பெறுவதற்காக கிளிநொச்சி வலயகக் கல்வி அலுவலக கல்வி அபிவிருத்திப் பிரிவில் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (க-405)

# ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கிளைக் குழுத் தேர்தல்

முல்லைத்தீவு, மே 12

முத்துஐயன்கட்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எட்டுக் கிளைகளுக்கான கிளை உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் தேர்தல் நடவடிக்கைகள் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் நடைபெற்று வருகின்றன.

89 ஆவது கூட்டுறவாளர்கள் தினவிழாவினை முன்னிட்டு இந்தத் தேர்தல் நடவடிக்கைகள் நடைபெறுகின்றன.

எனவே தமது பிரிவிலுள்ள கிளை முகாமையாளரிடம் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று அவற்றைப் பூரணப்படுத்தி ஒப்படைக்குமாறு மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். அத்துடன் ஆவணங்களைத் தொலைத்தவர்களுக்குச் சில தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆகவே உறுப்புரிமைப் பட்டியலில் பெயர் உள்ளவர்கள் மட்டுமே கிளைக்குழுத் தேர்தலில் வாக்களிக்கும் உரிமையைப் பெறமுடியுமென்பதால் இதனைத் தவறாது கடைப்பிடிக்கு[illegible] கேட்டுக் கொள்[illegible]ளது. (க-500)

# திருத்தப்பணி கொடுப்பனவில் பாகுபாடு; ஒட்டுசுட்டானில் மக்கள் குழப்பத்தில்

முல்லைத்தீவு, மே 12

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் வீடுகளுக்கான திருத்தவேலைக்கு இரண்டு வெவ்வேறு விதமான கொடுப்பனவுகள் வழங்கப்படுவதால் மக்கள் குழப்பத்தில் *ஆழ்ந்துள்ளதாகத் தெரிவிக்*கப்படுகின்றது.

இந்தப் பிரதேசத்திலுள்ள கற்சிலைமடு 3 ஆம் கண்டம் பகுதியில் உள்ள வீடுகளுக்கான திருத்தப் பணிகளுக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு கட்டம் கட்டமாக கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆனால் முழுமையான திருத்த வேலைகளுக்கு இந்த நிதி போதாததால் இன்னமும் அந்த வீடுகள் பூர்த்தியடையாது இழுபறி நிலையில் உள்ளன.

ஆனால் ஒட்டுசுட்டானை அண்டிய பண்டாரவன்னி 2 ஆம் கண்டம் பகுதி மக்களின் வீடுகளுக்கான திருத்தப் பணிகளுக்*கென 2 லட்சத்து 50 ஆயிரம்* ரூபா வழங்குவதற்கான அறிவுறுத்தல்கள் கிடைத்துள்ளதாகத் தெரிகின்றது. இதேவேளை ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெற்றவர்கள் வீடுகளைப் பூர்த்தி செய்ய முடியாது தவிக்கின்றனர்.

ஆகவே திருத்தப் பணிகளுக்கான கொடுப்பனவை எல்லோருக்கும் சமமாக வழங்க வேண்டுமென மக்கள் கேட்டுள்ளனர். (க-500)

# மன்னாரில் கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகள் நகரசபையினரால் பிடிக்கப்படும்

மன்னார் நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகள் பிடிக்கப்பட்டு இந்தக் கால்நடைகளின் உரிமையாளர்களுக்கு தண்டம் அறவிடப்படுமென மன்னார் நகரசபையினர் அறிவித்துள்ளனர்.

மன்னார் நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலிகளாகத் திரியும் வளர்ப்பு ஆடுகள் மற்றும் மாடுகளைக் கட்டி வளர்க்குமாறும் அவற்றை மீறித் தெருக்களில் திரியும் குறித்த கால்நடைகள் பிடிக்கப்பட்டு அவற்றின் உரிமையாளர்களுக்குத் தண்டம் விதிக்கப்படுமென்றும் நகரசபையின் தலைவர் சந்தானபிள்ளை ஞானப்பிரகாசம் தெரிவித்தார்.

கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகள் பிடிக்கப்பட்டு மூன்று நாள்களுக்குள் உரிமையாளர்கள் தண்டப்பணத்தினைச் செலுத்தி அவற்றை மீட்டுச் செல்லாவிட்டால் குறித்த கால்நடைகள் ஏலத்தில் விற்கப்ப*டும் என்றும் அவர் மேலும்* தெரிவித்தார்.

இதேவேளை வளர்ப்பு நாய்களும் வீட்டில் கட்டி வைத்து வளர்க்கப்பட வேண்டுமெனவும் குறித்த வளர்ப்பு நாய்களால் பொது மக்களுக்கு ஏதாவது தீங்கு ஏற்படும் பட்சத்தில் அவற்றின் உரிமையாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-601)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறை மாவட்ட மேலதிக ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட வேண்டும்

## கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

அம்பாறை,மே12

அம்பாறை மாவட்டத்தில் மேலதிகமாக உள்ள ஆசிரியர்கள், ஆசிரியர் பற்றாக்குறையாக இருக்கும் மட்டக்களப்பு தமிழ்ப் பிரதேச பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டால் மட்டுமே மீண்டும் அம்பாறையில் உள்ள பாடசாலைகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்க முடியும் - என்று கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி.ஏ.நிஸாம் தெரிவித்துள்ளார்.

-இது தொடர்பாக அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தவை வருமாறு,

அம்பாறை மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர்கள் பலருக்கு நியமனம் வழங்கப் பட வில்லை. அவர்களுக்கு நியமனம் வழங்கப்பட வேண்டுமானால் மேலதிகமாக இருக்கும் ஆசிரியர்களைப் பற்றாக்குறையாக இருக்கும் தமிழ்ப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றம் செய்யப்பட்டு சமநிலைப்படுத்தப்பட்டால் மட்டுமே, மீண்டும் அம்பாறை மாவட்டத்தில் உள்ள தொண்டர் ஆசியர்களுக்கு நியமனம் கொடுக்கப்பட வாய்ப்பேற்படலாம்.

இலங்கை முழுவதும் வழங்கப்பட்டு முடிந்துள்ள ஆசிரியர் உதவியாளர் நியமனத்தில் அம்பாறை மாவட்டத்தில் 109 ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்படவில்லை. இதற்கு காரணம் இங்கு மேலதிகமாக ஆசிரியர்கள் இருப்பதே ஆகும்.

மேலதிகமாக இருப்பவர்களைப் பற்றாக்குறையாக இருக்கும் மட்டக்களப்பு தமிழ்ப் பாடசாலைகளுக்கு இடமாற்றி விட்டால் இங்கு மீண்டும் நியமனங்களை வழங்குவதற்கு சாதகமான சூழல் ஏற்படும்.

அம்பாறை மாவட்டத்தில் ஆசிரியர்கள் மேலதிகமாக உள்ளனர். இவ்வாறு இருக்கின்றபோது தொண்டர் ஆசிரியர்களை எவ்வாறு பாடசாலைகளில் நியமிப்பது? இது விடயமாக அரசியல்வாதிகள் பலரும் ஆளுநரின் கவனத்திற்குக் கொண்டு வந்தாலும், ஆளுநரும், ஆசிரியர்கள் மேலதிகமாக இருப்பதையே ஒரு காரணமாகக் குறிப்பிடுகிறார்.

அம்பாறை மாவட்டத் தொண்டர் ஆசிரியர் சங்கம் இந்த நியமனத்திற்காக பல்வேறுபட்ட முயற்சிகளைச் செய்து வந்தாலும், மத்திய அரசால் பணிப்புரை வராதவிடத்து நியமனம் சாத்தியமாகாமல் போகலாம். எனவேதான் அம்பாறை மாவட்டத்தில் உள்ளவர்களை மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தமிழ் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்துவிட்டால் மீண்டும் நியமனங்களை வழங்குவதற்கு சாதகமான சூழல் ஏற்படும்- என்றார். (ச-30)

## வழங்கல்....



ஆரையம்பதி பிரதேச செயலாளர் பிரிவில் தும்புத் தொழிலில் ஈடுபட்டு வருபவர்களுக்கு விசேட கூடாரங்களை வழங்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை மாலை ஆரயம்பதி வள நிலையத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா கலந்துகொண்டு தகரத்திலான கூடாரங்களை வழங்கினார். (ச)

# கல்குடா முஸ்லிம் பிரதேசங்களில் இடம்பெற்ற ஹர்த்தால் தமிழ் மக்களுக்கு எதிரானது அல்ல

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் தெரிவிப்பு

மட்டக்களப்பு,மே12

கல்குடா முஸ்லிம் பிரதேசங்களில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஹர்த்தால் தமிழ் மக்களுக்கெதிரானது அல்ல என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜவாஹிர் சாலி தெரிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு, தமிழ் மக்களுக்கெதிரான ஹர்தால் என்றால் காத்தான் குடியிலும் ஏறாவூரிலும் கடைகளை பூட்டி ஹர்த்தால் செய்திருப்பார்கள். இது அவ்வாறல்ல. தமிழ் மக்களுக்கெதிரான ஹர்த்தாலாக இதைப் பார்க்க வேண்டாம். சிலர் இந்தக் ஹர்த்தாலை தமிழ் மக்களுக்கெதிரான ஹர்தாலாக மாற்றுவதற்கு முயற்சி செய்கின்றார்கள்.

இந்த ஹர்த்தால் கடையடைப்பில் வாழைச்சேனையிலுள்ள 35 வீதமான தமிழ் வர்த்தகர்களும் கடைகளை மூடி ஒத்துழைப்பு வழங்கினார்கள். கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள முஸ்லிம் விவசாயிகளுக்குச் சொந்தமான விவசாயக் காணிகளில் விவசாயம் செய்வதற்குள்ள தடைகளை நீக்கக் கோரியே இந்தக் ஹர்த்தால் கடையடைப்பில் ஈடுபட்டனர் -என்றார். (ச-21)

பிரவேசம் இலவசம் !
edCiL
INDIAN
Education Fair
முதல்முறையாக யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் இந்தியக் கல்விக் கண்காட்சி
17th, 18th May 2011
யாழ்ப்பாணம் பொது நூலகத்தில்
17th - 9.00 am to 5.00 pm
18th - 9.00 am to 1.00 pm
இந்திய கல்விக் கண்காட்சி 2011 உங்களுக்கு வழங்குவது என்ன?
- பட்டதாரி மற்றும் முதுநிலைப் பட்டதாரி கல்வியை வழங்கும் இந்தியக் கல்வி நிலையங்கள்
- இலவச தொழில்சார் வழிகாட்டுதலும் ஆலோசனையும்
- தொழில் பயிற்சி நிலையங்கள்
- தொழில்சார் திட்டமிடல் பற்றிய கருத்தரங்குகள்
- விமானப் போக்குவரத்துத் துறை கல்வி நிலையங்கள்
- வியாபாரப் பாடசாலைகள்
- தகவல் தொழில்நுட்ப மற்றும் பொறியியல் கல்லூரிகள்
- தகவல் தொழில்நுட்ப பயிற்சி நிலையங்கள்
- சந்தைப்படுத்தல் மற்றும் முகாமைத்துவ கல்வி நிலையங்கள்
- ஹொட்டேல் முகாமை மற்றும் சுற்றுலா கல்வி நிலையங்கள்
- நிதி மற்றும் வங்கித் தொழில் கல்வி நிலையங்கள்
- கடற் போக்குவரத்துக் கல்வி நிலையங்கள்
- கல்வி ஆலோசகர்கள்
- உள்ளக வடிவமைப்பு மற்றும் கட்டடக்கலை நிலையங்கள்
- செயலக அலுவல் பயிற்சி நிலையங்கள்
- மருத்துவ மற்றும் தாதிமார் கல்வி நிலையங்கள்
- மூன்றாம்நிலை கல்வி நிலையங்கள்
- நுண்கலை மற்றும் நவநாகரிகக் கலை பாடசாலைகள்
ORGANISED BY
EdCIL (India) Limited
A GOVERNMENT OF INDIA ENTERPRISE
SUPPORTED BY
CONSULATE GENERAL OF INDIA JAFFNA
PROFESSIONAL EXHIBITION ORGANISER
LANKA EXHIBITION
4th Floor, Automobile Association Building,
No. 40, Sir Mohamed Macan Marker Mw, Colombo 03
Tel: 011 2390560-2 Fax: 011 2390563
E-mail: sudesh@saexhibitions.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதியமைச்சர் ஹக்கீம் முயற்சியால் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம்

கண்டி,மே12

நீதியமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீமின் முயற்சியால் கண்டி மாவட்ட தொண்டர் ஆசிரியர்கள் ஆசிரிய உதவியாளர்களாக நியமிக்கப்படவுள்ளனர் என அமைச்சரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

2006ஆம் ஆண்டு ஒக்ரோபர் 25ஆம் திகதி அமைச்சரவைத் தீர்மானத்தின்படி இலங்கையின் பல்வேறு மாவட்டங்களிலுமுள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கு மாகாண அமைச்சின் கீழ் உதவி ஆசிரியர் பதவி வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது.

கண்டி மாவட்டத்தில் 2007 ஆம் ஆண்டு மார்ச் 28ஆம் திகதி பிரஸ்தாப நியமனங்களை வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சை நடைபெற்ற போதிலும், அதில் தெரிவான - தகுதியானவர்களுக்கு இதுவரை நியமனம் வழங்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி அமைச்சர் ஹக் கீம், கண்டி மாவட்ட தொடர்புக் குழுக்கு முறைப்பாடு செய் திருந்தார்.

மேலும் அவர் 2010 ஆம் ஆண்டு டிசெம்பர் 7ஆம் திகதி கண்டி மாவட்டச் செயலாளருக்கு கடிதமொன்றையும் எழுதியிருந்தார். இதில் கண்டி மாவட்டத் தொண்டர் ஆசிரியர்கள் 61பேருக்கு அநீதி இழைக்கப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியிருந்தார்.

அதன்படி கண்டி தெல்தெனிய கல்வி வலயத்தில் 23 பேரும், கட்டுகஸ்தோட்டை கல்வி வலயத்தில் 12 பேரும், கம்பளைக் கல்வி வலயத்தில் 11 பேரும், வத்தேகம கல்வி வலயத்தில் 3 பேரும், தெவிநுவர கல்வி வலயத்தில் 5 பேரும், மஹநுவர கல்வி வலயத்தில் 7 பேரும் ஆசிரிய உதவியாளர்களாக நியமனம் பெறவுள்ளனர்.

அமைச்சர் ரவூப் ஹக்கீமின் வேண்டுகோளையடுத்து இந்த ஆசிரிய உதவியாளர் நியமனங்களை உடனடியாக வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என கண்டி மாவட்டச் யெலாளர் சார்பில் திட்டமிடல் பணிப்பாளர் பீ.முதலிகே கடிதம் முலம் அறிவித்துள்ளார்.

அதன் பயனாக மத்திய மாகாணத்தின் நுவரெலியா, மாத்தளை மாவட்டங்களின் தொண்டர் ஆசிரியர்களிலும் உதவியாளர் தகைமையுடையவர்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்படவுள்ளணர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ச)

# ஹற்றன்- நுவரெலிய நெடுஞ்சாலையை செப்பனிட்டுத் தருமாறு வேண்டுகோள்

கண்டி,மே12

ஹற்றன் நகரிலிருந்து நுவரெலியா நகர்வரை செல்லும் பிரதான நெடுஞ்சாலை குண்டும் குழியுமாக உள்ளது எனப் பயணிகள் விசனிக்கின்றனர்.

இந்த வீதி சேதமடைந்து கிடப்பதால் சுமார் ஒரு மணிநேரத்தில் கடக்கும் தூரத்திற்கு இரண்டு மணி நேரத்தைச் செலவிட வேண்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் அரச ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள் உரிய நேரத்துக்குச் செல்ல முடியாத நிலை தோன்றியுள்ளது. எனவே, வீதி அபிவிருத்தி அதிகார சபையினரும் மாவட்ட அரசியல்வாதிகளும் இணைந்து இந்த வீதியை விஸ்தரித்து - செப்பனிட்டுத் தர வேண்டும் எனப் பொது மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# வாகனங்களை நிறுத்துவதற்கு கட்டுப்பாடுகள் விதிப்பு

மட்டக்களப்பு,மே12

அக்கரைப்பற்று மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதான வீதியில் வாகனங்களை நிறுத்துவதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாதத்திலும் வரும் ஒற்றை நாள்கள், இரட்டை நாள்கள் எனப் பிரிக்கப்பட்டு குறித்த நாளில் உரிய பக்கத்தில் மாத்திரம் தேவையின் நிமித்தம் வாகனங்களை நிறுத்தி வைக்க முடியும்.

இந்த விதிமுறை அமுலாக்கம் தொடர்பாக பொதுமக்களுக்கும், வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கும் பொலிஸார் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளனர்.

இந்தக் கட்டுப்பாட்டு விதிகள் மூலமாக போக்குவரத்துச் சேவைகள் சீரமைக்கப்பட்டுள்ளன. (ச)

# கிழக்குப் பிரதேச மாணவர்களுக்கு புலமைப்பரிசில் பயிற்சித் திட்டம்

திருகோணமலை,மே12

தாய்வானைச் சேர்ந்த தர்மட்ரம் மவுண்ரெய்ன் பவுண்டேஷன் என்ற தன்னார்வ அமைப்பு மூதூர் கிழக்குப் பிரதேசமாணவர்களுக்குப் புலமைப் பரிசில் பயிற்சித் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது.

கடந்த புதன்கிழமை சேனையூர் மத்தியக் கல்லூரியில் இந்தத் திட்டம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. 20 பல்கலைக்கழக மாணவர்களும், ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களும் இந்தப் புலமைப்பரிசில் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த மாணவர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவு, காதிதாதிகள், உலர் உணவு, புத்தகப் பை ஆகியவை வழங்கப்படும்.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக மூதூர் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் என்.விஜேந்திரனும், கௌரவ விருந்தினராகத் திருகோணமலை பொதுவைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஈ.ஜி.ஞானகுணாளனும் கலந்துகொண்டனர்.

தாய்வான்தன்னார்வ அமைப்பு, கடந்த வருடம் பாட்டாளிபுரம், சேனையூர் ஆகிய பகுதிகளில் ஐந்து நாள்கள் இலவச் மருத்துவ முகாமை நடத்தியமை குறிப்பிடத்தக்கதாகும். (ச)

## எவ்வாறு பயணிப்பது.....



பாதிப்பு:-அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக மட்டக்களப்பு ,ஜெயந்திபுரம் பாடசாலை வீதி போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் பாதிப்படைந்து காணப்படுகின்றது. (ச)

# மட்டக்களப்பில் ரூ.400 மில். செலவில் கடற்றொழில் அமைச்சுக் கட்டடங்கள்

கடற்றொழில் அமைச்சினால் 400 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இரு கட்டடங்கள் கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் டாக்டர் றாஜித சேனாரட்னவினால் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை திறந்து வைக்கப்பட்டன. 70 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட மாவட்ட கடற் றொழில் திணைக்கள தலைமையகக் கட்டடமும் 230 மில்லியன் ரூபா செலவில் மட்டு நகரில் அமைக்கப்பட்ட காத்தான்குடி மீன்பிடி இறங்கு துறை கட்டடங்களுமே அமைச்சரினால் திறந்து வைக்கப்பட்டன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 'நெக்டெப்' திட்டத்தின்கீழ் நிர்மாணிக்கப்பட்ட இக்கட்டடங்களின் திறப்பு விழா வைபவத்தில் பிரதியமைச்சர்களான வி.முரளிதரன், எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல் லாஹ், பஷீர் சேகு தாவூத் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ச)

# சிகிச்சைக்குக் கொண்டு சென்ற பணம் கொள்ளை

வைத்திய சிகிச்சைக்கெனக் கொண்டு சென்ற பணம் பட்டப் பகலில் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் பண்டாரவளை அயிஸ்லேவி தோட்டப் பகுதியில் இடம் பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டாரவளை அயிஸ்லேவி தோட்ட வாசியான ஒருவர் தனக்கு ஏற்பட்ட நோயைப் பரிசோதிப்பதற்காக தியத்தலாவை வைத்தியசாலை சென்று திரும்பியுள்ளார்.

வழியில் குறுக்கிட்ட வேறொருவர் இவரது சட்டைப் பையிலிருந்த சிகிச்சை அட்டை, 22,000 ரூபா பணம் ஆகியவற்றைப் பட்டப் பகலில் கொள்ளையிட்டு சென்றுள்ளார் பணத்தைப் பறிகொடுத்தவர் சம்பவம் தொடர்பாக பண்டாரவளைப் பொலிஸில் முறையிட்டுள்ளார். பண்டாரவளைப் பொலிஸ் அதிகாரி ஆர்.பீ.பீ. ரணசிங்கவின் பணிப்பின் பேரில் பொலிஸ் குழுவினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# படித்த மலையக இளைஞர்- யுவதிகள் உத்தியோகத்தை எதிர்பார்க்கக் கூடாது

## கூறுகிறார் பிரதியமைச்சர் முத்துசிவலிங்கம்

நுவரெலியா,மே12

கல்விகற்ற அனைவரும் அரச துறையிலோ அல்லது தனியார்துறையிலோ வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதென்பது நடைமுறைக்குச் சாத்தியமான ஒரு விடயமல்ல.

மலையக இளைஞர், யுவதிகள் சுயதொழில் முயற்சியில் ஈடுபட்டு முன்னேறவேண்டும். அதற்கு வேண்டிய சகல உதவிகளையும் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானும், தொண்டமான் தொழில் பயிற்சி நிலையமும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சும் வழங்கும்.

இவ்வாறு தெரிவித்தார் இ.தொ.கா தலைவரும், பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான முத்து சிவலிங்கம் .

அண்மையில் மைற்வோனர், புரஸ்கிரின், சோசீட்டா, தொண்டமான்புரம், யுலிபீன்ஸ் கே.ஜீ.கே. பிரிவு ஆகிய தோட்டங்களுக்கு மின் இணைப்பு வழங்குவதற்கான முதற்கட்ட வேலைகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இருநூறு வருடகாலமாக நாட்டின் தேயிலைத் தொழிலையே நம்பியிருந்த மலையக மக்கள் இன்று அந்தத்தொழிலிலிருந்து விடுபட்டு வேறு தொழில்துறைக்குச் செல்லும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

மலையக மக்களின் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமென்று பல்வேறு திட்டங்களை வகுத்துச் செயற்பட்டவர் அமரர் தொண்டமான். அவரால் உருவாக்கப்பட்டதே ஹற்றன் தொண்டமான் தொழில் பயிற்சி நிலையம்.

மலையக சமூகத்தை உயர்த்துவதற்கான கடமை எங்களுக்கு உள்ளது. கடந்த காலங்களில் தோட்டப் புறங்களிலுள்ள 98 சதவீதமான வீடுகளுக்கு மின்சார வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இன்னும் இரண்டு சதவீதத்திற்கே மின்சாரம் வழங்கவேண்டியுள்ளது.

இலங்கை தேசிய அபிவிருத்தித்திட்டங்களில் தோட்டப் புறங்களும் உள்வாங்கப்பட வேண்டும். தோட்டங்கள் இல்லாமல் கிராமங்கள் உருவாக வேண்டும் என்ற முனைப்பில் நாம் செயற்படுகின்றோம்.

அதற்கு வெளிநாட்டு உதவியுடன் தொழிலாளருக்கு வீடுகளை நிர்மாணித்து கொடுக்கவும் செயற்றிட்டங்களை வகுத்து வருகிறோம். மலையக மக்களின் தேவைகளை முடிந்தளவு நிறைவு செய்வதற்கு இ.தொ.கா பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகின்றது.

எனது அமைச்சின் ஊடாக வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களுக்கு சேவை செய்வதற்காக அமைச்சர் பசில் ராஜபக்ஷவுடன் என்னையும் ஜனாதிபதி நியமித்துள்ளார். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அந்த மக்களுக்குச் சேவை செய்யவுள்ளோம் - என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒத்திவைக்கப்பட்ட சபைகளுக்கான தேர்தலை ஒரே தினத்தில் நடத்துக

## ஐ.தே.க. கோரிக்கை

கொழும்பு, மே 12

நீதி மன்ற உத்தர வின் பேரிலும், ஏனைய காரணங்களினாலும் ஒத்திவைக் கப்பட்டுள்ள நூறு உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை ஒரே தினத்தில் நடத்துமாறு ஐக்கிய தேசியக் கட்சி நேற்று முன்தினம் கோரிக்கை விடுத்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறியவை வருமாறு:-

நீதிமன்ற உத்தரவின்பேரிலும், அரசின் தனிப்பட்ட நோக்கங்களாலும் ஒத்திவைக் கப்பட்டுள்ள நூறு உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் ஒரே தினத்தில் நடத்தப்பட வேண்டும். மக்களின் ஆணை உள்ளது என தம்பட்டம் அடித்து வருகின்ற அரசு தைரியம் இருந்தால் அந்தத் தேர்தல்களை ஒரே தினத்தில் நடத்தட்டும்.

வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்ட தினம் மற்றும் வேட்புமனு நிராகரிக்கப் பட்டமை குறித்து தாக்கல் செய்யப்பட்ட மனு விசாரணைகள் நீண்ட நாள்களாக இடம் பெறுகின்றன. இதனால் வேட்பாளர்களும் பல சிக்கல்களை எதிர்கொண்டுள்ளனர்.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி நடைபெறும் பகுதிகளில் உள்ளூராட்சி சபைத் தேரத்ல்கள் ஒத்திவைக் கப்பட்டன. இன்று தேர்தல்கள் கிரிக்கெட் போட்டிக்குச் சவாலாக உள்ளதோடு, பொருளாதாரத்துக்கும் சவாலை ஏற்படுத்தியுள்ளது.

கொழும்பு மாநகர சபைக்கான தேர்தல் ஒத்திவைக்கப் பட்டமைக்கு எவ்வித காரணமும் இல்லை. இப்போது அந்தச் சபையின் ஆயுட்காலமும் நிறைவுற்றுள்ளது. இந்த நிலையில், கொழும்பு மாநகர சபையை அதிகார சபையாக மாற்றுவதாக அரசு கூறியது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் சட்ட மூலம் கடந்த ஜனவரி மாதம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப் பட்டபோதிலும், இன்னும் அது நிறைவேற்றப் படவில்லை. இந்தச் சட்ட மூலம் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி முன் மொழிந்த யோசனைகளில் சிலவற்றை அரசு உள் வாங்கியுள்ளது. சில வற்றை அரசு ஏற்க வில்லை.



தேர்தலில் பெண்களின் பங்களிப்பு வீதம் அதிக ரிக்கப்பட வேண்டும். அதேபோன்றே இளைஞர் வீதமும் முற்றாக நீக்கப்படாமல் சமனாகப் பேணப்படவேண்டும். இந்தப் புதிய சட்ட மூலத்தில் இவை தொடர்பாக அவசியம் என்ற வலியுறுத்தல் இல்லை.

அரசியல் நோக்கத்துக்காக மாத்திரம் இவைகளை மேற்கொள்ளாமல், மக்களின் விமர்சனங்களையும், கருத்துகளையும் செவிமடுத்து அரசு செயற்பட வேண்டும் - என்றார். (சி)

## இலங்கைப் பணிப்பெண் சவூதியில் மரணம்

சவூதி அரேபியாவில் வீட்டுப் பணிப் பெண்ணாகப் பணியாற்றிய இலங்கைப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு கிராண்ட்பாஸ் பகுதியைச் சேர்ந்த ரணசிங்ஹ ஆராய்ச்சிகே காமனி சாமலி என்பரே உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

தனது மனைவி கடமையாற்றிய உரிமையாளர்களினால் பல்வேறு பிரச்சினைகளுக்கு உள்ளாக்கப்பட்டார் என்றும் மனைவி கடந்த ஜனவரி மாதம் சவூதி அரேபியா சென்றார் எனவும் இதுவரை உரிமையாளர்களினால் சம்பளம் வழங்கப்படவில்லை எனவும் உயிரிழந்த பெண்ணின் கணவர் தெரிவித்துள்ளார்.

இந்த உயிரிழப்பு தொடர்பில் சந்தேகம் நிலவுகிறது எனத் தெரிவித்த அவர், சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு உரிய பதிலை அரசு தனக்கு வழங்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

## இரத்ததானம்...



இரண்டாயிரத்து அறுநூறாவது புத்த ஜெயந்தியை முன்னிட்டு இரத்த தானம் வழங்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பொலிஸார் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கினர். (ச)

## 2010 இற்கான வாக்காளர் பட்டியல் 31 ஆம் திகதி உறுதி செய்யப்படும்

கொழும்பு, மே 12

2010ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் எதிர்வரும் 31ஆம் திகதி உறுதிப்படுத் தப்படும் என்று மேலதிக தேர் தல்கள் ஆணையாளர் டபிள்யூ. பி. சுமனசிறி தெரிவித்துள்ளார்.

வாக்காளர் பெயர்ப்பட்டியலுக்கான அனைத்து திருத்தங்களும் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளன. அத்துடன், 2010ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் உறுதிப்படுத்துவதற்காக அதனை தேர்தல்கள் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கவுள்ளோம். அதன் பின்னர் 2010 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் நாடு முழுவதிலும் உள்ள பிரதேச செயலகங்களில் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

வாக்களார் பெயர்ப்பட்டியலை கணினி மயப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

## சிறைக்கைதிகளுக்கான வீட்டு விடுமுறை; மீண்டும் கவனம் செலுத்தத் தீர்மானம்

கொழும்பு, மே 12

சிறைக் கைதிகளுக்கான வீட்டு விடுமுறை முறைமை தொடர்பில் மீண்டும் கவனம் செலுத்த தீர்மானித்துள்ளதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச் சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் ஏ. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சிறைக் கைதிகளை அனுமதிப்பத்திரத்தின் ஊடாக விடுதலை செய்யும் முறைமையில் திருத்தம் மேற்கொள்வதற்கு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவின் ஆலோசனைக்கு அமைய விசேட குழுவொன்று நியமிக் கப்பட்டுள்ளது.

தற்போது நடைமுறையிலுள்ள சிறைக் கைதிகளுக்கான வீட்டு விடுமுறை முறைமையில் மாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டும்என்றயோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

சிறைக் கைதி ஒருவர் தண்டனைக் காலம் நிறைவுறுவதற்கு முன்னர் விடுதலை செய்யப் படுவாராயின், சமூகத்திற்கு அது நன்மையளிக்காது.

அத்துடன், கைதிகளுக்கு வீட்டு விடுமுறை வழங்கப் பட்டு அதனை மூன்று தடவைகள் உரிய முறையில் அவர்கள் பயன்படுத்தி ஒழுக்கமாக செயற்படுவார்களாயின் சிறைக் கைதிகள் அனு மதிப் பத்திரத்திற்கு அமைய விடுதலை செய்யப்படுவார்கள் என்று மேலும் தெரிவித்தார். (ச)

## ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிட இணைப்பாளராக சுபனேநந்தி

கொழும்பு, மே 12

ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிட இணைப் பாளராகவும், மனிதாபிமான உதவிகளுக்கான இணைப் பாளராகவும் மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் நிரந்தர பிரதிநிதியாகவும் சுபனேநந்தி நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் இந்த நியமனத்தை வழங்கியுள்ளார். ஐ.நாவின் மூத்த அதிகாரியான இலங்கையிலுள்ள 20 அரச சார்பான மற்றும் அரச சார்பற்ற ஐ.நா. முகவரகங்களுக்கு இவர் தலைமை தாங்கவுள்ளார். சுபனே நந்தி ஐக்கிய நாடுகள் சபையில் 20 வருடகால அனுபவம் மிக்கவர்.

இறுதியாக சீனாவுக்கான ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதியாகப் பணிபுரிந்துள்ளார்.

# கண்ணிவெடிகளை முழுமையாக அகற்ற இன்னும் 8 ஆண்டுகள் தேவை

## சுவிற்சர்லாந்தைச் சேர்ந்த கண்ணிவெடி அகற்றும் நிறுவனம் தெரிவிப்பு

கொழும்பு, மே 12

யுத்தத்தால் இடம்பெயர்ந்துள்ள மக்களின் மீள்குடியேற்றத்துக்குப் பெரும் சவாலாக அமைந்துள்ள கண்ணிவெடிகளை முழுமையாக அகற்ற இன்னும் எட்டு ஆண்டுகள் தேவைப்படும் என்று சுவிற்சர்லாந்தைச் சேர்ந்த எவ்.எஸ்.டி. என்ற கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தின் திட்ட முகாமையாளராகிய நைஜல் ரொபின்சன் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசின் புள்ளி விவரங்களின் அடிப்படையிலேயே இது தெரியவந்துள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

சுவிற்சர்லாந்தைச் சேர்ந்த எவ்.எஸ்.டி என்ற கண்ணிவெடி அகற்றும் நிறுவனம் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதுதொடர்பாக அவர் தெரிவித்தவை வருமாறு-

போர் பிரதேசமாகத் திகழ்ந்த வட பகுதியில் கண்ணிவெடி மற்றும் குண்டுகள் வெடித்ததனால் ஏற்பட்ட விபத்துக்களில் கடந்த வருடம் மாத்திரம் 49 பேர் படுகாயமடைந்துள்ளார்கள். இவர்களில் 9 பேர் உயிரிழந்தனர். இவ்வாறு உயிரிழந்தவர்களில் எமது நிறுவனத்தைச் சேர்ந்த முக்கிய தொழில்நுட்ப ஆலோசகராகிய டொமினிக் மொரினும் ஒருவராவார். கடந்த வருடம் மே மாதம் 10 ஆம் திகதி கண்ணிவெடி அகற்றும் பணியின்போது வெடி பொருள் ஒன்றைக் கையாள்கையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் அவர் உயிரிழந்தார்.

இந்த விபத்து நடைபெற்ற இடத்தில் நினைவுச் சின்னம் ஒன்று வைக்கப்பட்டு, அவருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. இடம்பெயர்ந்துள்ள மக்களின் வாழ்விடங்களில் கடந்த வருடம் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டதையடுத்து, அந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பக் கூடிய வாய்ப்புக் கிட்டியுள்ளது.

இதனையடுத்து தற்போது அந்த மக்களின் விவசாய நிலங்களில் கண்ணிவெடிகள் அகற்றும் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன.

இலங்கையைப் பொறுத்த வகையில் சிவிலியன்களுக்கும், கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் ஆபத்தை ஏற்படுத்தி வருகின்ற கண்ணிவெடிகள், இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்கு விரைவாகத் திரும்பிச் செல்வதையும் தாமதப்படுத்தியுள்ளன- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் 2011 ஆம் ஆண்டுக்கான புகுமுக மாணவரின் மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நல்லூர்க் கோட்டக் கல்விப்பணிப்பாளர் கே.மாணிக்கராஜா வெற்றி பெற்ற அணிக்கு கேடயம் வழங்குகிறார். (ம)

# சைவத்துக்கும் சமூகத்துக்கும் சேவையாற்றிய பெரியோர்களின் விவரங்கள் பேணப்படவேண்டும்

யாழ்ப்பாணம்,மே 12

சைவத்துக்கும் சமூகத்துக்கும் அளப்பரிய சேவைகளை ஆற்றியவர்களின் விவரங்கள் படங்களாகவும், அறிக்கைகளாகவும் பாதுகாக்கப்படவேண்டியது அவசியமாகும்.

கடந்த காலங்களில் இவ்வாறு சேவைகளைப் புரிந்தவர்களின் விவரங்கள் எதுவித ஆவணங்களும் இல்லாமல் மறைக்கப்பட்டிருந்தன.

இவ்வாறு தெரிவித்தார் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் விரிவுரையாளர் ச.லலீசன்.

இளவாலை விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்ற "இளவாலை ஆணைவிழுந்தான் மாட்சிமை" என்னும் நூல் வெளியீட்டு விழாவில் மதிப்பீட்டுரை வழங்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது:

ஆலயத்தின் புராதன மகிமைகளை அனைவரும் அறிந்து கொள்ளக்கூடிய வகையிலும் அதனை ஆவணப்படுத்த வேண்டும் என்னும் நோக்கிலும் இந்த நூல் வெளியீடு இடம்பெறுகின்றது.

அத்துடன், இந்த நூலில் விநாயகர் வழிபாட்டுச் சிறப்புக்களை ஆய்வு ரீதியாகப் பலர் அறிந்திராத விடயங்களையும் எழுதியுள்ளார் நூலாசிரியர்.

இந்த நூலின் ஆசிரியரான சிவயோகமதி கந்தவனம் அனைவருக்கும் முன்மாதிரியாகத் தனது முதுமைக் காலத்தையும் பொருட்படுத்தாது சமூகப்பணிக்காக இந்த நூலை வெளியிட்டமை பாராட்டுக்குரியது.

இதனை ஏனைய சமூகத் தொண்டு நிறுவனங்களும் சமயம் சார்ந்த தகவல்களை ஆவணப் படுத்த முன்வரவேண்டும்.

இது தற்போதைய காலத்தின் கட்டாய தேவையாகவும் உள்ளது.

நமது மரபு ரீதியான தகவல்களைப் பேணிப் பாதுகாப்பதற்கு நூல் வெளியீடுகள் அவசியமான ஒன்றாகும்.

இதனை முன்னின்று செயற்படுத்துவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - இவ்வாறான ஒத்துழைப்புக்கள் மூலம் தான் சமூக சேவையாளரிகள் மதிக்கப்படக் கூடியவர்களாகவும் பாராட்டப்படக்கூடியவர்களாகவும் பேணப் படவேண்டும் - என்றார். (ம-313)

# மாணவர்கள் போட்டிகளில் பங்குபற்றினால் உளநலச் செயற்பாடுகள் சிறப்பாக அமையும்

யாழ்ப்பாணம்,மே 12

பாடசாலை மாணவர்கள் பல்வேறு வகையான போட்டிகளில் பங்குபற்றினால் அவர்களது உளநலச் செயற்பாடுகள் சிறந்தனவாக அமையும்.

போட்டிகளில் பங்கு பெறுதல் என்பது தான் அவசியமாகும். அதில் வெற்றி பெறவேண்டும் என்பது முக்கியமானதல்ல.

துணிவுடனும் தன்னம்பிக்கையுடனும் போட்டிகளில் பங்குபற்றுதல் மாணவர்களின் ஆளுமையைத் தூண்டுகிறது.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜா.

நல்லூர் கோட்டமட்டத் தமிழ்த்தினப் போட்டிகள் யாழ்.இந்து மகளிர் கல்லூரி விசாலாட்சி மண்டபத்தில் இடம்பெற்றன. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் மற்றைய மாணவர்களைப் பார்த்து கேலி செய்வதோ அவர்களின் மனம்நோகப் பேசுவதோ கூடாது.

திறமையான மாணவர்கள் ஏனைய மாணவர்களுக்கு வழிகாட்டியாக இருக்கவேண்டும். ஒவ்வொரு போட்டியிலும் ஒவ்வொரு மாணவர்கள் திறமையானவர்கள். தங்களின் திறமைகளை வெளிக்காட்டவே இந்தப் போட்டிகள் உதவுகின்றன.

அது மட்டுமன்றி, மாணவர்கள் வாசிப்புப் பழக்கத்தைத் தம்மிடையே ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

வாசிப்பானது மனிதருக்கு முக்கியமான ஒன்றாகும். வாசிப்பின் மூலம் பல விடயங்களை அறிந்து கொள்ளமுடியும்.

வாசிப்புப் பழக்கங்கள் மாணவர்களிடையே அருகிப் போகின்றன என்பதனாலேயே இது தொடர்பான போட்டிகள் வைக்கப்படுகின்றன.

பண்ணிசை, வில்லிசை, நாட்டார் பாடல் ஆகியவை தற்போது மங்கிவிட்ட ஒரு கலைகளாகவே உள்ளன. அவற்றுக்கு உயிர் கொடுக்கும் நோக்கிலே பாடசாலை மாணவர்களுக்குப் போட்டிகளை வைத்துள்ளோம்.

பாரம்பரிய கலைகளையும் பண்பாடுகளையும் பாடசாலை மாணவர் மத்தியில் ஏற்படுத்துவது அனைவரதும் கடமையாகும்.

மாணவர்கள் வளரும் சமுதாயத்தினர் என்றதால் இத்தகைய செயற்பாடுகளால் சிறந்த பாரம்பரியம்மிக்க சமுதாயத்தை உருவாக்க முடியும் - என்றார். (ம-311)

## தாதியர் கல்லூரிக்கு புதிய அதிபர்



வண்ணை, மே12

செல்வி ரஜீலாதேவி வல்லிபுரநாதன் யாழ். தாதியர் கல்லூரிக்கு அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனம் கடந்த மார்ச் மாதம் 14 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வந்துள்ளது.

காங்கேசன் துறை, நடேஸ்வரக் கல்லூரியில் ஆரம்பப் பிரிவில் இருந்து உயர் தரம் வரை கற்றார். பின்னர் கொழும்பு பட்டப்பின் தாதியர் பயிற்சிக் கல்லூரியில் கற்பித்தலும் மேற்பார்வையும் டிப்ளோமா கல்வியையும், நாவல திறந்த பல்கலைக் கழகத்தில் தாதியர் பட்டப்படிப்பையும் மேற்கொண்டார்.

தமிழ்நாடு, காமராஜர் பல்கலைக்கழகத்தில் வைத்திய சாலை முகாமைத்துவக் கல்வியைத் தொலைக் கல்வியூடாகவும் பெற்றுக் கொண்டுள்ளார். (ம-160)

## ஆன்மிக நிகழ்வுகள்

வடமராட்சி,மே 12

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்திவரும் ஆன்மிக நிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இன்னிசைக் கச்சேரி இடம்பெறும்.

இந்தக் கச்சேரியை பக்கவாத்தியங்கள் சகிதம் செல்வன் ஜெக[illegible]ஸ்வரன் மதூசிகன், கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் [illegible].அகிலதாஸின் நெறிப்படுத்தலில் நிகழ்த்துவார். (ம-236)

* * *

வடமராட்சி, மே 12

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் சுற்றாடலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் நடைபெற்றுவரும் வாராந்த ஆன்மீக நிகழ்வு வரிசையில் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணிக்கு "கண்ணனே கதை சொல்கிறான்" என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும்.

இந்தச் சொற்பொழிவை ஆசிரியர் இரா.சண்முகசுந்தரம் நிகழ்த்துவார். (ம-236)

# வடமராட்சி வலய எழுத்தாக்கப் போட்டி முடிவுகள்

பருத்தித்துறை,மே 12

தமிழ்மொழித்தினத்தை முன்னிட்டு வடமராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட வலய மட்ட எழுத்தாக்கப் போட்டியின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அந்தப் போட்டி முடிவுகளின் விவரங்கள் வருமாறு:-

**எழுத்து (பிரிவு-1)**

த.தாரிணி (கரவெட்டி ஞானசாரியர் கல்லூரி), இ.துஷாகரன் (பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம்), கி.ஜீதா (பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி).

**கட்டுரை (பிரிவு - II)**

பு.தயாபரன் (பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), ப.அன்ரன் டல்சன்(தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்), பி.கேதாரணி (பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை).

**கட்டுரை (பிரிவு - III)**

ஏ.திருபரன் (பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), சி.தனுஸ்குமார் (பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை), சி.சிந்துஜா (கரணவாய் மகாவித்தியாலயம்).

**கட்டுரை, இலக்கியம் (பிரிவு-IV)**

வ.ஜெயப்பிரசன்னா (பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி), ஈ.தர்சினி (கரவெட்டி விக்கினேஸ்வரக் கல்லூரி), சி.ஸ்ரீதிவாகரன் (நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்).

**கட்டுரை, இலக்கியம் (பிரிவு-V)**

லோ.தேனுஷா ([illegible] கினேஸ்வரக் கல்லூரி), [illegible] (பருத்தித்துறை வட. இந்து மகளிர் கல்லூரி), இ.கார்த்திகா (வல்வை மகளிர் கல்லூரி).

**இலக்கணம் (பிரிவு-IV)**

க.கீதாஞ்சனா(பருத்தித்துறை வட. இந்து மகளிர் கல்லூரி), க.கபிலன் ( பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி),தெ.நிருபன் (வல்வெட்டித்துறை இந்து தமிழ்க் கலவன் பாடசாலை).

**இலக்கணம் (பிரிவு-V)**

ஸ்ரீ.சத்தியா (பருத்தித்துறை வட. இந்து மகளிர் கல்லூரி), ப.அபிராமி (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), ப.சந்திரிகா (வதிரி தேவரையாளி இந்து மகளிர் கல்லூரி).

**திறனாய்வு (பிரிவு-V)**

ஜெ.ஜெசிதா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), பு.ஆர்த்திகா ([illegible] மத்திய மகளிர் கல்லூரி),சு.ஜெகதீபன் (வேலாயுதம் மகாவித்தியாலயம்).

**குறுநாடகம் (பிரிவு-IV)**

ஸ்ரீ.கார்த்திகா (நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்), க.அஜித்குமார் (செம்பியன் பற்று அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), செ.மனோஜா (தும்பளை சிவப் பிரகாச மகாவித்தியாலயம்).

**குறுநாடகம் (பிரிவு-V)**

இ.மைதிலி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), சௌ.பிரேமதர்சினி (கரவெட்டி விக்கினேஸ்வரக் கல்லூரி), அ.நிஷாந்தினி (கரவெட்டிவிக்கினேஸ்வரக் கல்லூரி).

**கவிதை (பிரிவு--IV)**

கி.சுவஸ்திகா (புலோலி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை), கு.சுரேன் (பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), த.கிருஸ்ஷிகா ( பருத்தித்துறை வட. இந்து மகளிர் கல்லூரி).

**கவிதை (பிரிவு-V)**

வி.கலைவாணி( நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்), ம.கிருத்திகா(வல்வை மகளிர் கல்லூரி), க.பிரசாந்த் (பருத்தித்துறை ஹாட்லிச் கல்லூரி), வி.வைதேகி (பருத்தித்துறை வட. இந்து மகளிர் கல்லூரி).

**சிறுகதை (பிரிவு-IV)**

க.செந்துஷன் (பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), ம.சாருஜா ( பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி), இ.லச்ஷியா (வல்வை மகளிர் கல்லூரி).

**சிறுகதை (பிரிவு-V)**

பி.பிரதீபா( வல்வை சிதம்பராக் கல்லூரி), ம.மிதுஷா (பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), நே.ஆர்த்திகா( நெல்லியடி மத்திய மகா வி[illegible]ம்). (190)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
உங்கள் நலனில் அக்கறை கொண்டவர்களை சந்திப்பீர்கள். பிள்ளைகள் கேட்ட பொருள்களை அதிக பணம் செலவழித்தாவது வாங்கிக் கொடுப்பீர்கள். உத்தியோகத்தர்கள் வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் பணிபுரியலாம். சில விஷயங்களில் முடிவு எடுத்து விட்டு அதில் மாற்றம் செய்யலாம்

**இடபம்:**
சுபகாரிய விடயங்களில் நினைத்தது நடக்கலாம். சிறிய வேலை ஒன்றை பெரியளவில் பிரயத்தனம் செய்து முடிக்கலாம். எதிர்பார்ப்பு ஒன்று ஏமாற்றம் தரலாம். உறவினர்கள் சிலர் உதவிகள் கேட்டு தொந்தரவு கொடுக்கலாம். மற்றவர்கள் ஆதாயம் பெற நீங்கள் உதவிகரமாக இருப்பீர்கள். வீண் பழிகள் வராமல் இருக்க விழிப்புணர்வு அவசியம்.

**மிதுனம்:**
திடீர் பணவரவுகளைப் பெறலாம். தேடி வந்த வாய்ப்பு ஒன்றை உதாசீனம் செய்யாமல் சாதகமாக பயன்படுத்திக் கொள்வீர்கள். பெண்கள் குடும்ப பெரியவர்களின் பாராட்டுக்களைப் பெறுவர். நீங்கள் தேடிச்சென்று பார்க்க நினைத்த உறவினர் ஒருவர் உங்களின் வீட்டிற்கே தேடி வரலாம். சுகமான, இனிய அனுபவங்களைப் பெறலாம்.

**கடகம்:**
எதிர்பாராத சில விடயங்கள் நடக்கலாம். நடப்பதெல்லாம் நன்மைக்கே என நினைப்பீர்கள். சாதகமாக முடியும் என நினைத்த ஒரு விடயம் பாதகமாக அமையலாம். திட்டமிட்ட வெளியூர் பயணம் செல்லலாம். உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தினரிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கலாம். குடும்ப நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**சிங்கம்:**
வீட்டுத் தேவைகளுக்காக தாராளமாகச் செலவு செய்வீர்கள். கணவன், மனைவியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். கலைஞர்கள் புதிய ஒப்பந்தங்களைப் பெறலாம். மாமன், மைத்துனர்களை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்க வேண்டாம். எதிர்பார்த்த பணவரவுகளைப் பெறலாம்.

**கன்னி:**
குறைந்த செலவில் முடியும் என நினைத்த வேலை ஒன்றுக்கு அதிகமாகச் செலவாகலாம். பொலிஸ் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். நோய் உபாதைகளால் சோர்வு, சோம்பல் ஆள் கொள்ளலாம். சிலரின் அன்புக்கட்டளைகளுக்கு ஆள்படலாம். கடன் விவகாரங்களை சாக்குப் போக்குச் சொல்லி சமாளிப்பீர்கள். பக்தி நாட்டம் கூடும்.

**துலாம்:**
சேமிப்பை அதிகரிக்கும் நாள். உறவினர் அல்லது நண்பர் வழியில் சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். மறதியாக வைத்த பொருள் ஒன்றை மீண்டும் கிடைக்கலாம். வீண் வம்பு விவகாரங்களில் தலையிடாமல் நழுவிக் கொள்வீர்கள். உங்களுக்குப் பிடித்தமான பொருள் ஒன்றை சிலர் கொடுக்கலாம். ஆடை, ஆபரணங்கள் வாங்கலாம்.

**விருச்சிகம்:**
நண்பர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு விலகும். உழைப்பில் கடுமை காணப்பட்டாலும், அதற்கேற்ற ஆதாயம் பெறுவீர்கள். நீண்டநாளைய ஆசைகள் நிறைவேறும். தம்பதியர் இடையே பாசம் அதிகரிக்கும். நீண்ட யோசனைக்கு பின் சில காரியங்களில் இறங்குவீர்கள். சந்தோஷமான செய்தியைக் கேட்கலாம்.


**தனுசு:**
எதிர்பாராத சந்திப்புகள் நிகழும் நாள். மற்றவர்களின் விமர்சனங்களைப் பற்றி கவலைப்படாமல் சில விடயங்களில் துணிச்சலாக இறங்குவீர்கள். உதிரி வருமானம் கைக்குக் கிடைக்கலாம். உங்களுக்கு வேண்டிய ஒன்றைச் சாதிப்பதற்காக மற்றவர்களை நச்சரிப்பீர்கள். உடல் நலம் இல்லாமல் இருக்கும் உறவினர் ஒருவரைப் பார்க்கலாம்.

**மகரம்:**
வரவுகளை விட செலவுகள் அதிகரிக்கும் நாள். சொந்தங்கள் வழியில் சங்கடம் தரும் செய்திகளைக் கேட்கலாம். புதிய பொருள்கள் வாங்க போட்ட திட்டம் தள்ளிப் போகலாம். கிடைக்கும் நேரத்தை வீணடித்துவிட்டு பின் அவசரமாகச் செயற்படுவீர்கள். நன்றி மறந்த ஒருவரை நினைத்து கவலைப்படுவீர்கள்.

**கும்பம்:**
நேரம் காலம் பார்த்து சில வேலைகளைச் செய்வீர்கள். உங்களிடம் வாக்குக் கொடுத்த நண்பர்கள் அதை காப்பாற்றி பெருமை சேர்ப்பர். வியாபாரிகளுக்கு திடீர் பணவரவுகளால் கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். ஆடம்பரப் பொருள்கள் வாங்க தாராளமாகச் செலவிடுவீர்கள்.

**மீனம்:**
மதிப்பு, கௌரவம் அதிகரிக்கும். காலையில் முடியும் என நினைத்த வேலை ஒன்று மாலையில் முடியும். முக்கியமான வேலைகளுக்காக வெளியூர் பயணம் செல்லலாம். பெண்கள் வீட்டுச் செலவுகளில் சிக்கனம் காட்டுவர். உறவினர் ஒருவர் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். அரசு காரியங்கள் அனுகூலமாக முடியும்.

# எவரையும் தாக்கலாம் எய்ட்ஸ்...!




யாழ்ப்பாணத்தில் எய்ட்ஸ் பற்றிய தகவல்கள் அதிர்ச்சியூட்டுவனவாக உள்ளன. எனினும் மக்களில் பெரும் பகுதியினர் தமக்கும் எய்ட்ஸ் நோய்க்கும் தொடர்பு ஏதும் கிடையாது என்ற போக்கில் நடந்துகொள்கின்றனர்.

தவறு செய்பவர்கள்தான் எய்ட்ஸ் நோயின் பிடியில் சிக்குவார்கள். நமக்கு என்ன? இதுபற்றி அறிந்து கொள்வதற்கு எதற்காக நேரத்தை வீணடிக்க வேண்டும் என்று எண்ணுபவர்களின் எண்ணிக்கை இங்கு அதிகம். ஆனால், தவறுகள் எல்லாவற்றையும் வடிகட்டி வர்ணம் தீட்டி இதுதான் உண்மை வாழ்க்கை என்று காட்டி வரும் சின்னத்திரைகளின் தொடர்களைப் பார்த்து நேரத்தை வீணாக்குவார்கள் நம் மக்கள்.

இவர்களுக்குத் தவறு எது நல்லது எது என்று சரியாகத் தெரியவில்லையோ? அல்லது 'கெடுகுடி சொல்கேளாது' என்பது போல் சீரழியும் எமது சமூகம் இது போன்ற விடயங்களை உணர்வதற்குக் காலம் தேவையோ?

வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இன்றைய நிலை விசித்திரமானது. எய்ட்ஸ் நோயால் பீடிக்கப்பட்டவர்கள் பற்றியும் பாலியல் நடத்தைப் பிறழ்வுகள் பற்றியும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டால் அவை உண்மையல்ல என்று சொல்லும் அதிகாரி ஒருபுறம், ஐயோ குடி முழுகிப் போச்சு கலாசாரம் குட்டிச் சுவராகி விட்டது என்று கூறும் அதிகாரி மறுபுறம். ஆனால் மக்களோ எதுவும் அறியாதவர்களாக நடுத்தெருவில்.

கல்விமான்கள், ''கலவிமான்கள்'' ஆகிவிட்டனரோ என்று எண்ணத் தலைப்படும் நிலைக்கு இட்டுச் செல்லும் பரிதாபமும் ஆங்காங்கே நடைபெற்ற வண்ணம்தான் உள்ளன.

### விழிப்புணர்வின்மை

மக்கள் மத்தியில் எய்ட்ஸ் நோய் பற்றி தெளிவின்மை, விழிப்பின்மை அதிகம் காணப்படுகிறது. எப்படி என்று அறியாமல் எய்ட்ஸ் நோயை வாங்கிக் கொண்ட யுவதிகள் பலர் இங்கிருக்கிறார்கள். இளைஞர்கள் பலர் எய்ட்ஸ் காவிகளாகச் சமூகத்தில் விதைக்கப்பட்டு விட்டார்கள். இந்த விதத்தில் போனால் ''ஐயோ! எனது மகளுக்கு எய்ட்ஸ் எப்படி வந்ததென்றே தெரியாது... எல்லா நேரமும் புத்தகத்துடன்தான் அவள் இருந்தாள்'' என்று கூறும் தந்தைமார், தாய்மாரை நாம் விரைவில் காணக் கிடைக்கும். புத்தகம் சுமக்கும் வயதில், பல சிறுமிகளின் கருவறைகள் கல்லறைகளான தரவுகள் அதிகரித்துச் செல்கின்றன. அதிலும் பல கருச்சிதைப்புகள் வெளிவராமல் காதோடு காதாகி மறைந்துவிட்டன.

எமது சமூகத்தின் இன்றைய நிலை மிக ஆபத்தானதாக இருக்கிறது. தாயோடு மகள் ஒரே தலையணையில் உறங்கினாலும் ''தாயும் மகளும் என்றாலும் வாயும் வயிறும் வேறு'' என்ற சொல்லுக்கு அர்த்தம் கற்பிக்கும் செயல்கள் பல இடம்பெறுகின்றன. மகளின் வயிற்றில் மகவொன்று உருவாகிவிட்ட பின்னர்தான் இந்த உண்மை பெற்றோருக்கு உறைக்கிறது. அதுவரை தன் மகள் தவறு செய்யமாட்டாள், தன் நேரடிக் கண்காணிப்பில்தான் இருக்கிறாள் என்றே பெற்றோர் நம்புகின்றனர்.

அதிலும் பரிதாபத்துக்குரிய பெற்றோர்கள் பலருண்டு. மகளின் வயிற்றில் மகவொன்று உருவாகி விட்டது என்று மருத்துவர் சொன்னால், அந்த மருத்துவரை முதலில் கீழ்த்தரமாகப் பார்க்கும் பெற்றோர் பலரை நான் பார்த்திருக்கிறேன்.

தலைச்சுற்றல் என்று வைத்தியசாலைக்கு வரும் யுவதியைப் பரிசோதித்தால் கர்ப்பம் என்கிற விடை கிடைக்கிறது. வயிறு வைத்துவிட்டது. மாதவிடாய் ஒழுங்கில்லை என்று சொல்லிக் கொண்டு வைத்தியசாலைக்கு வரும் திருமணமாகாத யுவதிகளைப் பரிசோதித்தால் அவர்கள் அம்மாவாகிவிட்டிருப்பார்கள் என்ற சோகம் தொடர்கிறது. அதை அவர்களின் பெற்றோரிடம் கூறினால் மருத்துவர் ஏதோ தவறு செய்துவிட்டார் என்பது போல நோக்குகிறார்கள்.

''இல்லை அப்படி இருக்காது... நீங்கள் பிழையாகச் சோதித்திருப்பீர்கள்'' என்று அடித்துக் கூறும் அம்மாக்களும் அப்பாக்களும் கூட இருக்கிறார்கள்.

### கண்காணிப்புத் தேவை

இப்போது ஒரு சிலராக இருக்கும் இத்தகைய பெற்றோரின் எண்ணிக்கை, இந்தச் சமூகம் விழிப்படையத் தவறினால் மேலும் அதிகரிக்கும். பண்பாட்டுக் கட்டுப்பாடுகள் மிக்க எம் மக்கள் மத்தியில் எய்ட்ஸ் நோயா? என்று கதறி அழும் நிலை வரும் முன்னர் காப்பதே சிறந்தது.

பெற்றோரின் பிள்ளைகள் மீதான அக்கறை, நம்பிக்கை என்பதைவிட அவர்கள் மீதான கண்காணிப்பு மிகமிக அவசியமாகிவிட்டது. பிள்ளைகளின் கைகளில் அதி நவீன தொடர்பாடல் சாதனங்கள் புரளத் தொடங்கிய நிலையிலும், பிள்ளைகள் மீதான பெற்றோரின் கண்காணிப்புப் பொறிமுறைகள் அறப் பழசாக இருக்கின்றன. இந்த இடைவெளிகளே தெரியாத தவறுகளுக்கு வழிகோலுகின்றன.

பெற்றதுடன் மட்டுமோ அல்லது பிள்ளைக்குக் கல்வியை வழங்குவதுடன் மட்டுமோ பெற்றோரின் கடமை முடிந்து விடுவதில்லை. ஒவ்வொரு பிள்ளையும் இந்தச் சமூகத்தில் காத்திரமான பங்காளியாக உடல், உள ஆரோக்கியத்துடன் நடமாடுவதற்கான வழிவகைகளையும் பெற்றோர் ஏற்படுத்தவேண்டும். அதற்கான கண்காணிப்புப் பொறிமுறைகளில் அவர்கள் தீவிர கவனம் செலுத்த வேண்டியது இன்றைய சூழலின் தேவையாகிறது.

இன்று வடக்குப் பெற்றோரின் நிலை 'சந்தோஷ் சுப்பிரமணியம்' படத்தில் வரும் அப்பாக்கள் போன்றுதான் உள்ளது. அவர்கள் தமது பிள்ளைகள் மீது அதிக கரிசனை கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களால் கண்டறிய முடியாத இடைவெளிகள் பிள்ளைகளுக்கு ஏற்படுத்தும் தாக்கத்தால் தங்களுடன் இல்லாத தருணங்களில் பிள்ளைகள் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பது பல பெற்றோருக்குத் தெரியாமலேயே போகிறது.

இந்த விடயத்தில் பெற்றோர் கண்டிப்பாக விழிப்படைய வேண்டும். இல்லாது போனால் எதிர்வரும் காலம் அவர்களை எள்ளி நகையாடும். அதுபோக எமது சமூகத்தின் அழிவுக்குப் பொறுப்பானவர்கள் என்ற வரிசையில் இரண்டாம் இடத்தைப் பெறுவார்கள். முதலாமிடத்தை அறிவுச் சமூகம் ஏற்கனவே தட்டிப் பறித்துவிட்டது.

### பலவீனமான திறவுகோல்கள்

எமது சமூகத்தில் எய்ட்ஸ் நோய்க்கான பலவீனமான திறவுகோல்கள் பல உள்ளன. கலாசார சீரழிவுகள், கைபேசிகளில் இலகுவாக உள்ளடக்கி விடக்கூடியதாக இருக்கும் ஆபாசப் படங்கள், அவற்றின் பின்னால் அலையும் இளைஞர் பட்டாளம். இளைஞர்கள் என்றால் ஆண்கள் மட்டும் என்று பொருள்படாது; பெண்களும் இதில் உள்ளடங்குகிறார்கள்.

இவ்வாறு உணர்வேற்றப்பட்ட இளம் சமூகம் நெறிப்பிறழ்வுகளுக்குள் சிக்குவது இலகுவாகின்றது. அவ்வாறு அவர்கள் நெறிப்பிறழ்வுகளுக்குள் சிக்கிக் கொள்வது மற்றொருபுறத்தில் வேறொருவருக்குத் தேவையாகவும் இருக்கிறது. ஒழுக்க நெறிப்பிறழ்வுகள் சமூக விழுமியங்களையும் கூடக் கேள்விக்கு உள்ளாக்குகின்றன என்பதைக் கண்கூடாகக் காண்கிறோம். தண்ணீரில் மூழ்கும் போது கூடத் தனது குழந்தையைத் தன் தலைமேலேயே தூக்கி வைத்து காப்பாற்ற நினைப்பதுதான் தாய்மை என்று சொல்லி வளர்க்கப்பட்ட எமது விழுமியம், இன்று பிறந்த சிசுக்களை வீதியில் தூக்கி எறியும் நிலைக்கும் கொன்று புதைக்கும் நிலைக்கும் இட்டுச் சென்றுள்ளது.

இதற்காகச் சம்பந்தப்பட்டவர்களைக் குறைகூறிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...மூகம் எதிர்கொள்ளப்போகும் பெரும் சவால்.....

## ...திறந்த பாலியல் கலாசாரப் பின்னணியில் கலாசாரச் சீரழிவுகள் மிகையுற்ற நிலையில் விழிப்புணர்வின்றி நோயின் பிடியில் இளைஞர், யுவதிகள் வீழ்கின்றனர் காதல் வலையூடாக......

பயனில்லை. காலத்தின் கோரப் பற்களால் இவர்கள் சீரழிக்கப்பட்டதன் உச்சக்கட்டம்தான் இவை என்பதை மக்கள் உணரவேண்டும். அவர்களுக்கு உரிய சமூகப் பாதுகாப்பையும் தேவைகளை நிறைவேற்றுவதற்கான உள, நிதி உதவிகளையும் வழங்கத் தவறிய இந்தச் சமூகமே இதற்கான முக்கிய பொறுப்பை ஏற்க வேண்டும்.

சிசுக்களைக் கொன்று புதைத்த அல்லது வீசி எறிந்த எந்தத் தாயையும் குற்றவாளிகளாகப் பார்க்காதீர்கள். தீக்குச்சிகள் எதுவும் தாமாகவே பற்றிக் கொள்வதில்லை. வலிந்தே பற்ற வைக்கப்படுகின்றன. பராமரிப்போர் செய்யும் தவறுதான் இதற்கான முக்கிய காரணம் என்று கூற வேண்டும்.

### நம்பி ஏமாறுவோர்

எமது சமூகத்தில் எந்த விளக்கையும் ஏற்றுவதற்காக அன்றித் தீக்கிரையாகிய தீக்குச்சிகள் அநேகம். காதல் என்ற ஒற்றை வார்த்தை அந்தத் தீக்குச்சிகளை இலகுவில் பற்ற வைத்து நெருப்புக்கு ஆகுதியாக்குகின்றது. தமக்கு வாழ்வு தேவை, இந்த சமூகத்தில் தமக்கும் ஒரு மதிப்புமிக்க வாழ்வை எப்படியாவது அமைத்துக் கொள்ளவேண்டும் என்றே அந்த ஒவ்வொரு தீக்குச்சிகளும் நினைக்கின்றன.

காதல் என்ற வார்த்தையைக் கொண்டு தம்மைப் பற்றவைப்பவரின் பின்னணி பற்றி அவை அதிகம் யோசிப்பதில்லை. ஆனால் அவர்கள் பல தீக்குச்சிகளைப் பற்ற வைத்த அனுபவசாலிகள் என்ற உண்மையை எரிந்து கருகும் போதே பல தீக்குச்சிகள் உணரத் தலைப்படுகின்றன என்பதுதான் பெரும் சோகம்.

பாதிக்கப்பட்ட பல பெண்களிடம் பெறப்பட்ட தகவல்களில் இருந்தே இந்தக் கருத்து இங்கு முன்வைக்கப்படுகிறது.

இதைவிட எமது இளைஞர்கள் வேற்றுக் கலாசாரத்தின் மீதும் மேற்குக் கலாசாரத்தின் மீதும் வெறியர்களாக இருப்பது நெறிப் பிறழ்வுகளுக்குக் காரணமாகின்றன. வெள்ளைத் தோல் கொண்ட வேற்று நாட்டுக்காரிகளைத் தேவதைகளாக எண்ணும் இளைஞர்களின் மனோநிலை அவர்களை மட்டுமல்ல வேறு பலரையும் ஆபத்தில் தள்ளி விடுகிறது. இந்த வெளிர் நிறத் தேவதைகளுடன் உறவாடிப் பெற்ற சாபத்[illegible]த எம் சமூக யுவதிகளுக்கும் காதல் என்ற போர்வையில் எமது இளைஞர்கள் கொடுத்துவிடும் சோகம் இங்கு தினம் தினம் நடந்தேறுகிறது.

இந்த உலகத்தில் எவனுமே ராமனில்லை என்ற வார்த்தையைப் பாடலில் கேட்கும் யுவதிகளுக்கு அந்த வரிகளின் அர்த்தம் சிந்தனையில் புகவில்லையோ, இல்லை காதல் மயக்கமோ தெரியாது, விட்டில் பூச்சிகளாக இலகுவில் வீழ்ந்து விடுகிறார்கள்.

தங்களைக் கில்லிகளாக இளைஞர்களும் அசின், திரிஷாக்களாக யுவதிகளும் கற்பனை செய்து கொண்டு அலைவதுதான் இதற்கான காரணம். இந்த அசின், திரிஷாக்களில் எத்தனை பேர் கெட்டியான ஆயுள் உள்ளவர்கள், நோய் நொடியில்லாத வாழ்வு வாழ்வார்கள் என்ற விடை காணமுடியாத வினா ஒன்று உள்ளது. கில்லிகள் எத்தனை பேருக்கு உடனடி மரணத்தையும் மெல்லச் சரிக்கும் மரணத்தையும் பரிசளிப்பார்கள் என்பதையும் எதிர்வுகூற முடியாதுள்ளது.

### வன்னியின் சோகம்

இங்கே எய்ட்ஸ் நோயாளர்கள் தவறுதலாகவே இனங்காணப்படுகின்றனர். அந்த எண்ணிக்கையே தலையை விறைக்க வைக்கின்றது. இனம் காணப்படாமல் இன்னும் எத்தனை பேர் இருப்பர் என்பதை நினைக்கக் கண்கள் இருள்கின்றன. இத்தகைய சூழலில் வன்னியை நினைத்தால் இந்தச் சமூகத்தின் மீது கடும் கோபம்தான் வருகிறது. போரின் கொடூரத்திடம் இருந்து முற்றாக இன்னும் மீளாத நிலையில் அங்கு அதிகரிக்கும் அல்லது திட்டமிட்டு அதிகரிக்கப்படும் நெறிப் பிறழ்வுகளை எப்படிக் கட்டுப்படுத்துவது என்பதற்கான திட்டங்கள் எவையும் இல்லை.

அதனிடையே இளம் விதவைகள் எண்ணிக்கை அதிகரிப்பு, அவர்களுக்கான மாற்று வாழ்வுக்கான வழிகாட்டல்கள் இல்லாமை, வாழ்வாதாரத்தை மேம்படுத்த அவர்களுக்கு எந்த மனிதரும் உதவாத நிலை என்பன சூழ்நிலையை மேலும் சிக்கலாக்குகின்றன.

வடக்கு - கிழக்கில் 49,000க்கும் அதிகமான இளம் விதவைகள் இருக்கிறார்கள் என்று ஒரு புள்ளிவிவரம் கூறுகின்றது. சமூகப் பாதுகாப்பும் மதிப்பும் அற்ற நிலையில் இருக்கும் இவர்களை, இலகுவில் சமூகத்தில் இருந்து தனிக்கச் செய்து வேட்டையாடும் சிங்கங்கள் இங்கே அதிகம் இருக்கின்றன. இது எய்ட்ஸ் போன்ற நோய்களின் பரம்பல் வீதத்தை வடக்கில் அதிகரிப்பதற்கான ஏதுநிலையை துரிதப்படுத்துகின்றன.

யார் யார் எய்ட்ஸ் நோயாளிகள் என்பது எவருக்கும் தெரியாது. தெரியக் கூடாது என்கிறது மருத்துவ விதிமுறைகள். மருத்துவர்களுக்கு நோயைக் கண்டுபிடிக்க உரிமை உண்டு. ஆனால் அதுபற்றி எவருக்கும் சொல்லும் உரிமை அவர்களுக்கு இல்லை. இதை மீறமுடியாது. யார் யார் எய்ட்ஸ் நோயாளிகள் என்ற தகவல் வெளியே தெரிய வராத நிலையில் யாரும் எய்ட்ஸ் காவிகளாக இருக்க முடியும் என்ற ஏதுநிலையை நிராகரிக்க முடியாது.

இந்தப் பெரும் ஆபத்து நிலையை இளைஞர்களும் யுவதிகளும் ஏனையவர்களும் உணர்ந்து கொள்ள வேண்டும். பண்பாட்டை மீறுவது என்பது வெறும் சில மணிநேரச் சுகபோகம் அல்ல; அது வாழ் நாள் தண்டனையாக மாறிவிடலாம் என்பதை உணரத் தவறுபவர்கள் அதற்கான தண்டனையை அடைந்தே தீரவேண்டும்.

### எவரும் காவியாயிருக்கலாம்

பாலியல் தொடர்புகளைப் பாதுகாப்பாகப் பேணினால் பிரச்சினை இல்லை என்று நினைப்பவர்களிடம் ஒரு கேள்வி.

இவர் ஓர் எய்ட்ஸ் நோயாளி என்று உங்கள் முன் ஒருவரை நிறுத்தி, பாதுகாப்பான வழிமுறைகளில் இவருடன் நீங்கள் உறவு கொள்ளலாம் என்று தெரிவித்தால் எத்தனை பேர் அதற்கு முன்வருவீர்கள்?

இதற்கான விடைதான் ஒவ்வொரு தருணத்திலும் நெறி பிறழும் தருணங்களில் நீங்கள் கேட்டுக் கொள்ள வேண்டியது. ஏனெனில் இன்றைய சூழலில் எவரும் எய்ட்ஸ் நோயாளியாகவோ நோய் காவியாகவோ இருக்கலாம். அறிமுகமில்லாத அன்னியத் தொடர்புகள் மட்டுமல்ல நம்பிக்கையற்ற தொடர்புகளும் நட்புகளும் கூட நம்பகமற்றவை என்பதே உண்மை.

இன்னும் விரிவாகச் சொன்னால் ஒவ்வொரு திருமணத்துக்கும் முன்னர் ஆணும் பெண்ணும் எய்ட்ஸ் நற்சான்றிதழ் பெற்றே மணவாழ்வுக்குள் நுழைய வேண்டும் என்பதை நாம் கட்டாயப்படுத்த வேண்டிய நிலை விரைவில் வரும்.

**டாக்டர் வே.நாகநாதன்**

எனவே பெற்றோரே உங்கள் பிள்ளைகள் தொடர்பில் இன்னும் அதிக கவனம் எடுங்கள். அவர்களைக் கண்காணிப்பதற்கான பொருத்தமான பொறிமுறைகளை உருவாக்குங்கள். பிறழ்வுகளுக்கான ஏதுநிலைகளைக் கண்டறிந்து அவற்றை ஆரம்பத்திலேயே சரிப்படுத்தி விடப் பாருங்கள்.

வடக்கில் அண்மைக் காலங்களில் இனம் காணப்பட்ட எய்ட்ஸ் நோயாளிகளில் எவரையும் பாலியல் தொழிலை மையமாகக் கொண்டவர்கள் என்று குறிப்பிட முடியாது. பாடசாலை மாணவிகள் பெருமளவில் கருச்சிதைவுகளை மேற்கொண்டுள்ளனர் என்று புள்ளிவிவரங்கள் கூறும் நிலையில் எய்ட்ஸ் நோய் எவரையும் தாக்கலாம் என்பதே ஆழ்ந்த உட்பொருள்.

இளைஞர்கள் வேற்றுக் கலாசார யுவதிகளுடன் அதாவது பாலியல் தொழில் புரியும் யுவதிகளுடன் சல்லாபிக்கின்றமையும் அதிகரித்து வரும் நிலையில் எவருக்கும் எய்ட்ஸ் வரலாம் என்ற வாதம் மேலும் வலுவடைகிறது.

பெறுப்புகளில் இருந்து நாம் விலகி ஓடலாம் - ஆனால் விளைவுகள் நம்மை நோக்கியே தேடி வரும்.

# ஆன்மீக அசுரர்கள்



உடல் தூய்மை தெய்வீகத்தின் அடுத்த அடையாளம். உடலில் தங்கும் கழிவுகள் நாளடையில் நஞ்சுத்தன்மை பெற்று எம்மை அசுரர்களாக மாற்றி வருகின்றன. அடிக்கடி குளிப்பது தூய ஆடைகளை அணிவது, வியர்வை, மலம் சிறுநீர் போன்ற கழிவுக் கொள்கலனாக உடலை வைத்திருக்காது உடனுக்குடன் அவற்றை வெளியேற்றி சாத்வீக குணத்தைப் பாதுகாப்பது தெய்வீக சாதகனின் முக்கிய கடமைகள். தூய்மை ஒரு வகைத் தெய்வீக இயல்பு என்கிறது கீதை.

ஒரு சின்ன உதாரணம்:-

அழுக்குப் பன்றி இருந்த கொட்டகை நோக்கி மூன்று நண்பர்கள் போனார்கள். பத்தடி தொலைவில் இருக்கும் போதே 'ஐயோ குடலைக் குமட்டுகிறதே'' என்று ஒருவன் ஓடி வந்தான். அவன் மலையாளதேசம். இரண்டாமவன் அறைக்குள் நுழைந்து விட்டு அவசரமாக '' ஆமாம், குடலைக் குமட்டுகிறது'' என்று வெளியே ஓடி வந்தான். அவன் தமிழ்நாடு. மூன்றாமவன் நுழைந்து உள்ளே போனதும் ''ம் நாறுகிறதே'' என்று கத்தியபடி பன்றி வெளியே வந்துவிட்டது. அவன் எந்த ஊர் என்று தெரியாது. உங்களுக்குத் தெரிந்தால் யாருக்கும் சொல்லாதீர்கள்.

அடுத்தது தெய்வீக இயல்பு; வஞ்சகம் இல்லாமை. அபிராமி அந்தாதியில் அம்பிகை வழிபாடு என்ன நன்மைதரும் என்று எழுதிய அபிராமிப்பட்டர் '' நெஞ்சில் வஞ்சம் இல்லா இனம் தரும்'' என்கிறார். வஞ்சனை அசுர இயல்பு. யேசுநாதர் என்கிற தெய்வ புருஷரை ஒரு வஞ்சகன் காட்டிக் கொடுக்கிறான். தெய்வத்திற்கு எதிரானது வஞ்சனை என் பதற்கு இதுவே தக்க சான்று.

தன் உண்மை நிலையை மறைத்து பொய்யாக வேடமிட்டு நடித்து ஏமாற்றுவது, பொய்கூறி ஏமாற்றுவது என்பவை எல்லாம் வஞ்சனையின் குடும்ப உறுப்பினர்கள். பெரியபுராணம் என்பது சிவனடியார்களின் வரலாறு கூறும் நூல். அடியார்களைக் கொல்ல வஞ்சனையாளர்கள் முயன்றபோது கூட அவர்கள் குற்றவாளிகளை மன்னித்தனர்

முத்தநாதன் என்பவன் சிவனடியார் வேடமிட்டு வந்த ஒரு நாயனாரைக் கொல்ல முயற்சிக்கிறான். அருகில் இருந்த 'தத்தன்' என்ற மெய்க் காவலன் முத்தநாதனைக் கொல்ல வாளை உருவுகிறான். நாயனாரோ தடுத்தார். அவர் நம்மவர் என்று தடுத்து வஞ்சனையை மன்னித்து விடுகிறார். ''ஊர் எல்லை வரை இந்தச் சிவனடியாரைக் கூட்டிக் கொண்டுபோய் விட்டுவிட்டு வா'' என்று கட்டளை இடுகிறார். இதுதான் தெய்வீகம்.

''புதருக்குள் ஒளிந்து கொண்டு பறவைகளைப் பிடிக்கும் வேடர்களைப் போல் நல்லவர்களாக நடித்துச் சமுதாயத்தைக் கெடுப்பவர்கள் வஞ்சனையாளர்'' என்கிறார் திருவள்ளுவர். தெய்வீக நிலையுடையவர்கள் உள்ளொன்றும், புறமொன்று என்கிற வாழ்க்கை அற்றவர்கள்.

இன்று பெருவாரியாக வரும் சாமியார்கள், சந்நியாசிகள், சமயத் தலைவர்கள் வஞ்சகம் மிக்கவர்கள். பணம், புகழ் இவற்றை வஞ்சனையாக மறைத்துக் கொண்டு காவியுடைக்குள் ஒளிந்து கொண்டிருக்கும் கர்விகள், கறைபடிந்த உள்ளம் உடையவர்கள்.

இந்த உலகம் தர்மத்தை ஆதாரமாகக் கொண்டது என்பதை இவர்கள் உணர்வதில்லை. இறைவன் என்கிற தத்துவத்தை இவர்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். காரணம் அதை ஒப்புக் கொண்டால் இவர்களின் அயோக்கியத்தனத்திற்கு இடையூறாக இருக்கும் அது.

உலகம் காரண காரியத்திற்குக் கட்டுப்பட்டது என்பதை இவர்கள் ஏற்பதில்லை. பாவ புண்ணியம் கர்மவினை இவைவெறும் கற்பனை என்பார்கள். கூச்சம் இன்றிப் பாவங்களை ஆனந்தமாகச் செய்வார்கள். உலகத்தின் அழிவுக்குப் பெரும்பாலும் இவர்களே காரணம்.

இவர்களின் ஆசைக்கு முடிவே கிடையாது. எதற்கு இவ்வளவு பணம்? இதை வைத்து என்ன செய்யப் போகிறோம்? என்கிற விவேகம் இவர்களுக்குக் கிடையாது. அநியாயமாக வருமானத்தைப் பெருக்கிக் கொண்டு அசுத்தமான காரியங்களில் ஈடுபடுவார்கள். இந்த அசுரர்கள் தாங்கள் எதை நோக்கிப் பயணம் செய்கிறோம் என்று தெரியாமலேயே பயணித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்பத்தை நோக்கி, சுவர்க்கத்தை நோக்கி என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இவர்கள் எங்கே போகிறார்கள் தெரியுமா?

சுகி.சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

காலையில் சூரியன்
கிழக்கில் உதிப்பான்
காலையில் உதயன்
இல்லங்களில் தோன்றுவான்
உதயமாகத் தினந் தினம்
தோன்றுவான் நம் உதயன்

சரண்யா குலேந்திரன்,
தனங்கிளப்பு.

## அன்னை



அன்னை!
கற்பக விருட்சமாய்
கருணை வழங்கி
நிழல்போல்
நில்லாது தொடர்ந்து
கருவறை முதல்
கல்லறை வரை
காணிக்கையாகத் தன்னை
அர்ப்பணிப்பவள்...

சுவஸ்திகா சிவபாதசுந்தரம்,
யாழ்ப்பாணம்.

## வாழ்வியலின் வைர வரிகள்

* இறந்த காலத்தில் இழந்ததை நிகழ்காலத்தில் தேடாதே உனது தேடல் பிரயோசனமற்றதாகிவிடும்.
* மற்றவர்களது அபிப்பிராயங்களுக்கு இடம்கொடுத்தால்தான் உனது அபிப்பிராயங்களும் அங்கீகரிக்கப்படும்.
* மலரிதழினைவிட மென்மையானது ஒரு பெண்ணின் மனது. அது புண்படாமல் பாதுகாக்கப்பட வேண்டும்.
* நிர்ப்பந்தங்களும் நெருக்கடிகளும் உள்ள இடத்தில்தான் நிம்மதியும் உள்ளது.
* சிந்தனைகள் நல்லவைகளென்றால் செயல்களும் நல்லவைகளாக இருக்கும்.
* இப்போது இருள் இல்லையென்றால் நாளை விடியல் இல்லை.
* வாழ்க்கை போர்க்களமாக மாறும் போதுதான் புறமுதுகு காட்டாமல் போராட வேண்டும்.

சா.ஜிந்துஜா,
கோண்டாவில்.

## தொலைபேசிப் பாவனையின் சாதகமும் பாதகமும்...!

தொலைபேசிப் பாவனை என்பது எம்மில் பலருக்குத் தொல்லைதரும் விடயமாகவே மாறிவிட்டது. அவ்வாறான தொலைபேசிகள் செல்லிடத் தொலைபேசி/ கைத் தொலைபேசி/ நடைபேசி என்று பலதரப்பட்ட பெயர்களால் அழைக்கப்படும். கைக்கு அடக்கமான இலகு பாவனைக்கு உதவுகின்ற தொலைபேசிதான் இப்போது அதிகம் மக்களிடையே பாவனையில் உள்ளது. அது எம்மவர்களிடையே எவ்வாறான சாதக, பாதகங்களை ஏற்படுத்துகின்றது என்பதை இந்தப் பந்தியூடாக ஆராய்வது பொருத்தமானது என நினைக்கிறேன்.

காலங்காலமாய் எம் உறவுகளின் பிரிவினைத் துயரைப் போக்கி சுக நலன்களைப் பேணுகின்ற அல்லது விசாரிக்கின்ற நல்லூடகமாகவும் நினைவு வரும் போதெல்லாம் பார்த்துப் பார்த்து மனநிறைவடைகின்ற ஒரு தனித்துவம் மிக்க மார்க்கமாகவும் இருந்து வந்தது தபால் ஊடான உறவுப் பரிமாற்றமே. அவ்வாறான கடிதத் தொடர்பாடல்முறை இப்போது மிகமிகக் குறைந்துவிட்டது. இதற்கு முக்கிய காரணமாக இருப்பது அதிகரித்துவரும் தொலைபேசியின் பாவனைதான் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

அந்தவகையில் தூரத்தே இருக்கக் கூடிய உறவுகளின் இன்ப, துன்பங்களை, கருத்துப் பரிமாற்றங்களை நினைத்தவுடன் அறியக் கூடியவகையில் நவீனத்துவ வளர்ச்சிப் போக்கின் ஓர் அங்கமாக மிகப் பெரிய பணியாற்றிவரும் இந்தத் தொலைபேசிகள் இல்லாத வீடுகள் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றன. இந்தத் தொலைபேசிகளின் பணி என்பது மிகவும் அதி உன்னதமானதுதான். அதேவேளையில் அந்தப் பாவனைக்கான செலவும் அதிகமானதுதான்.

எமது நாளாந்தப் பணியில் மிக முக்கிய பகுதியை மிக இலகுவாக மேற்கொள்ளவும் உரிய நேரத்துக்குச் செய்து முடிக்கவும் பெரிதும் உதவும் இந்தத் தொலைபேசிச் சேவைகளை உரிய முறையில் பயன்படுத்தி நன்மை பெறும் பலர் மத்தியில் அந் தத் தொலைபேசிச் சேவையைப் பயன்படுத்தி சமூகத்தில் பல இழிவான, யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாத கீழ்த்தரமான செயற்பாடுகளைச் செய்யும் ஒரு சமூக விரோத மான கும்பல்களும் இருக்கத்தான் செய்கிறன. இவ்வாறு விஸ்வரூபம் எடுத்து ஊதாரித்தனமான முறையில் செயற்படும் இவர்கள் தங்கள் அற்ப சொற்ப சுயநலன்களுக்காக மக்கள் மத்தியில் பெரும் பணியாற்றும் தொலைபேசிச் சேவையை வெறுக்கச் செய்துவிடுகின்றார்கள். வீட்டிலோ அல்லது அலுவலகத்திலோ அல்லது பயணத்தின் போதோ தொலைபேசியின் அலறல் ஒலி கேட்கும் போது தெரியாத, அறிமுகம் இல்லாத இலக்கம் என்றால் ஒரு தடவை எச்சரிக்கையாகவே அதனைக் கையாள்கின்றார்கள். அவ்வளவுக்கு அதனை கொள்ளை, கொலை, ஆள்கடத்தல், கப்பம கோரல் என இன்னோரன்ன நாசகார வேலைகளுக்குப் பயன்படுத்தி மக்களைப் பீதியில் உறைய வைத்துவிடும் ஊதாரிகள் திருந்துவது எப்போது? இராப்பொழுதுகளில்வரும் உறவினர்களின் அழைப்புக்களைக்கூட பயவுணர்வுடனேயே அணுகித் தொடர்பை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இவ்வாறான அசௌகரியங்கள் நிறைந்த சூழ லில் தான் எமது யாழ்.குடாநாட்டு மக்கள் தற்போதும் வாழ்ந்து வருகின்றார்கள். இவர் களின் பயம் சூழ்ந்த துர்ப்பாக்கியமான நிலை மாற வேண்டும். அதற்காகத் தொலை பேசிகள் ஊடாகப் பயமுறுத்த முனைபவர்கள், சமூகம் விரும்பாத சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவோர் மக்களின் மனங்களைப் புரிந்து கொண்டு பல வகையான, துன்ப, துயரங்களோடு வாழும் குடாநாட்டு மக்களை மேலும் சிரமப்படுத்தும் வகையில் அனாமதேய அழைப்புக்களை ஏற்படுத்திப் பயமுறுத்தாது நிம்மதியாக நல்வாழ்வுவாழ இனியேனும் வழி செய்ய வேண்டும் என்பது பலரின் ஆவலோடு கூடிய எதிர்பார்ப்பாகும்.

து.திலக்,
யாழ்ப்பாணம்.

(வளரும்)

## இளவல்கள் வட்டம் வாக்குச் சீட்டு

**இளம் சமுதாயத்தின் தற்கொலை அதிகரிப்புக்குக் காரணம்**

தவறான வழிகாட்டலா? ☐ தன்னிச்சையான தீர்மானங்களா? ☐

பெயர்: ..............................
முகவரி: ..............................
..............................
அடையாள அட்டை இல. ..............................

உங்கள் தீர்ப்புக்களை 26.05.2011 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இந்த வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

இளவல்கள் வட்டம்




## இளம் சமுதாயத்தின் தற்கொலை அதிகரிப்புக்குக் காரணம்

### தவறான வழிகாட்டல்

இளம் சமுதாயத்தின் தற்கொலை அதிகரிப்புக்குக் காரணம் தவறான வழிகாட்டல் என்ற தரப்பில் என் கருத்துக்களை முன்வைக்கின்றேன். தவறான வழி காட்டல் குழந்தைப் பருவத்திலேயே வித்திடப்படுகின்றது. இதற்கான சந்தர்ப்பங்கள் தெரிந்தும் தெரியாமலும் ஏற்படுகின்றன.

அதாவது 'வளரும் பிள்ளையை மண்விளையாட்டில் தெரியும்' என்பது பழமொழி. ஆனால், இன்றைய பெற்றோர் தம் சுகத்துக்காக குழந்தைகளை விளையாடவிடுவதில்லை. எதிராக அங்கே பாம்பு, பேய் எனப் பயமுறுத்துவதால் குழந்தையின் சிந்தனைத்திறன் அடக்கப்பட்டு பயம் என்றவுணர்வு ஏற்படுகின்றது. குழந்தையின் பாலர் பருவத்திலேயே பெற்றோர் நேரகாலமின்றி அதைப்படி, இதைப்படியெனத் திணிப்பது, வற்புறுத்துவது. இதனால் குழந்தையின் வளர்ச்சிப் பருவத்திலேயே மனச்சோர்வு, இயலாமை போன்றன ஏற்படுகின்றன. பெற்றோர் இருவரும் வேலைக்குச் செல்ல குழந்தை ஆயாவினால் பராமரிக்கப்படுவதால் குழந்தைக்கும் பெற்றோருக்குமிடையே அன்புப்பிணைப்பு இன்மையால் குழந்தை பிறர் அன்பை நாடுதல், பெற்றோரை வெறுத்தல், விரக்திக்கு ஆளாகின்றது. பிள்ளைகளின் நடத்தை மாற்றங்களைப் பெற்றோர் கவனிக்கத் தவறுதல், அவர்களின் விருப்பு, வெறுப்புக்களை அறிந்து நன்மை தீமைகளை எடுத்துக் கூறப் பெற்றோர் தவறுகின்றனர். நாகரிகம், கௌரவம் என்ற ரீதியில் 'கைத்தொலைபேசி, அளவுக்கு மீறிப் பணம் ஆகியவற்றைப் பிள்ளைகளிடம் கொடுப்பதால் இளம் வயதினர் மதுபானம், புகைத்தல், பாலியல் போன்ற தீய செயல்களில் ஈடுபட்டு அவற்றிலிருந்து மீளமுடியாது மன உளைச்சலுக்கு ஆளாகுதல், பாடசாலை, கல்விக் கூடங்களில் கெட்டிக்கார மாணவர்களும், வசதி படைத்த மாணவர்களும் முன்னிலைப்படுத்தப்படுவதால் மற்றைய மாணவர்கள் வறுமை, இயலாமை போன்றவற்றை நினைத்து தாழ்வுமனப்பாங்குக்குஆளாகுதல் இப்படியான தவறான வழிகாட்டல்களால் தாழ்வு மனப்பாங்கு, விரக்தி, கோபம், பயம், இயலாமை, மன உளைச்சல் போன்றவற்றுக்கு ஆளாகின்றனர். எனவே. இளம் சமுதாயத்தில் தற்கொலை அதிகரிப்புக்குக் காரணம் தவ றான வழிகாட்டலாகும்.

ஆ.இந்திரா,
வதிரி, கரவெட்டி.

### தன்னிச்சையான தீர்மானங்கள்

இன்றைய கால இளைய சமூகத்தினர் அடிப்படை வாழ்க்கைக்கு அவசியமானவை எனக் கருதுவது நாகரீக மோகமும் விஞ்ஞான வளர்ச்சியால் கண்டுபிடிக்கப்பட்ட நவீன கருவிகளையுமே. அதன் காரணமாக இளம் சமூகத்தினர் எதிலும் அனுபவசாலிகளான பெரியவர்களிடம் ஆலோசனை பெறாமல் தன்னிச்சையாகச் செயற்பட முனைகிறார்கள். அதன் காரணமாக வாழ்க்கையில் பல தோல்விகளையும் ஏமாற்றங்களையும் சந்திக்க நேரிடுகிறது. அதன் நிமித்தம் இளம் சந்ததியினர் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டுத் தற்கொலை செய்து கொள்ள முயற்சிக்கின்றனர். குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தற்கொலை அதிகரிப்புக்குக் காரணமாக இத்தகைய செயற்பாடுகள் அமைந்துவிடுகிறன.

அடுத்து இளம் சமுதாயத்தினர் எதிலும் சுலபத்தில் வசப்பட்டு விடுகிறார்கள். நல்லதோ? கெட்டதோ! என ஆராயாமல் தம் சுயவிருப்பத்தின் பேரில் ஒரு செயலில் இறங்குகிறார்கள். நவீன கருவிகளைக் கொள்வனவு செய்கிறார்கள். நாளடைவில் பலபெறுமதியான பொருள்களை வாங்கி நஷ்டமடைவதால் மிகவும் பரிதாபமான சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டு பணமும் விரயமாகி எடுத்தகாரியம் நிறைவேறாமல் யாருமற்ற அபலையாகித் தத்தளிக்கிறார்கள். இந்தச் செயலானது தன்னிச்சையான தீர்மானங்களால்தான் ஏற்படுகின்றது. விளைவுகளால் மனமுடைந்து எங்கே நிம்மதி... எங்கே நிம்மதி என அலைக்கழித்து நஞ்சே தஞ்சமென எண்ணிப் பலர் தற்கொலை முடிவை எடுக்கின்றனர். இத்தகைய தன்னிச்சையான செயற்பாடுகள் மாற வேண்டும்.

சுகிர்தா

### இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
36, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர் :- ..............................
முகவரி :- ..............................
..............................
.............. திகதி .............. கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் வளத்தை மேலும் நிவர்த்தி செய்யக் கோரும் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

நீர்வேலியின் பாரம்பரியமான கல்வி முன்னெடுப்புக்களினாலும் கல்லூரிச் சமூகத்தின் ஒன்றிணைந்த ஒத்துழைப்பினாலும் உயர்ந்து வரும் அத்தியார் இந்துக்கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நிறுவுநர் முதலியார் அத்தியார் அருணாசலம் அமரத்துவம் அடைந்த செப்ரெம்பர் 22 ஆம் திகதி ஆண்டுதோறும் நியமப்படுத்தப்பட்ட முறையில் கொண்டாடப்படுகின்றது.

'நிறுவுநர் தினமும் பரிசில் நாளும்'' ஆண்டுதோறும் ஒக்ரோபரில் தொடங்கி அடுத்த ஆண்டு செப்ரெம்பர் வரையுள்ள 12 மாத காலப்பகுதியை கல்வியாண்டாகக் கொண்டு கொண்டாடப்படும் அதே வேளையில் குறித்த காலப்பகுதியில் முழுமையான செயற்பாடுகள் அதிபரின் அறிக்கைமூலம் சமூகத்துக்கு முழுமையாக வெளிப்படுத்தப்படுகின்றன.

அதிபர் அறிக்கை நிறுவுநருக்கு சமர்ப்பணம் செய்வதன் மூலமும் நிறுவுநர் நினைவுப் பேருரை மூலமும் நிறுவுநர் பசுமையுடன் நினைவு கூரப்படுகின்றார்.

நிறுவுநரின் அஸ்தி பாடசாலை வளவில் சமாதி செய்யப்பட்டு, அதன் மேல் ஆறுகோண மண்டபம் அமைக்கப்பட்டிருப்பதோடு, வழிபாட்டுக்குரிய இடமாகவும் புனிதப்படுத்தப்பட்டுள்ளது.

கல்லூரிச்சமூகம் கல்லூரியுடன் ஒன்றிணைந்து செயற்படுகின்றது என்பதற்கு எடுத்துக் காட்டாக 24 பொதுப்பரிசில் நிதியங்கள் நிறுவப்பட்டிருப் பதும் அவைக்குரிய நிதியும் குடும்ப உறவினர்களின் நினைவாக உறவினர்களால் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. 11, 200




கனடா டொலர் நிதி உதவியும் மற்றும் இலங்கை நாணயத்தில் 575,000 ரூபாவும் 2010 கல்வியாண்டில் பழைய மாணவர்களால் கல்லூரிக்கு உதவுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. நீர்வேலி நலன்புரி சங்கம் (கனடா) ஆண்டுதோறும் கல்லூரியின் மெய்வன்மைப் போட்டிக்கு 50 ஆயிரம் ரூபாவும் பரிசளிப்பு விழாவுக்கு 50 ஆயிரம் ரூபாவும் வழங்கி வருவது பரிசு நாள் அறிக்யையில் அதிபரினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளையும் இணைப்பாட விதானச் செயற்பாடுகளையும் ஆரோக்கியமான முறையில் முன்னெடுப்பதற்கு வசதியாக சிவநெறி மன்றம், கணித விஞ்ஞான மன்றம், சமூகக்கல்வி மன்றம், வணிக மன்றம், கவின் கலை மன்றம், உயர்தர மாணவர் மன்றம், ஆங்கில மன்றம், தொழில்நுட்ப மன்றம், சுகாதார மன்றம், கணினி மன்றம், சாரணியம், மக்கள் நலன்புரி சங்கங்களும் அதன் படையணிகளும் வங்கிச் சேவை அமைப்புகள் போன்றனவும் திட்டமிட்ட செயற்பாடுகளை மேற்கொண்டுவருகின்றன. தமிழ்த் தினப் போட்டி, மெய்வன்மைப் போட்டி, ஆங்கில தினப் போட்டி உள்ளிட்ட அனைத்து போட்டிகளிலும் கோட்ட மட்டம், வலய மட்டம், மாவட்ட மட்டங்களில் குறிப்பிடத்தக்களவு வெற்றிகளை பெற்று வருவதோடு, மாகாண மற்றும் தேசிய மட்டத்திலும் சில சாதனைகளை நாட்டியுள்ளது.

2010 ஆம் ஆண்டுக்கான கோப்பாய் கோட்ட மட்ட விளையாட்டு போட்டியில் 264 புள்ளிகளை பெற்று முதலாம் இடத்தைப் பெற்றிருப்பதுடன், 34 முதலாம் இடங்களையும் 27 இரண்டாம் இடங்களையும் பெற்றுள்ளது. செல்வன் பேரானந்தராசா தயாகரன் வடக்கு மாகாண மட்டத்தில் வெற்றிபெற்று தேசிய மட்டப் போட்டிகளில் கலந்து கொண்டு பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

யாழ்.மாவட்ட பாடசாலைகள் இடையே டிஎஸ்ஐ நிறுவனம் நடத்திய 14 வயதுப் பெண்கள் அணிகளுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் மாவட்ட நிலையில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

யாழ். கல்வி வலயத்திலேயே மிக விஸ்தீரணமான விளையாட்டு மைதானத்தைக் கொண்டதும் மாவட்டநிலை போட்டிகள் பலவற்றை நடத்துவதற்கு பயன்படுத்தும் மைதானமாகவும் விளங்குகின்ற கல்லூரிக்கு விளையாட்டுத் துறைக்கான ஆசிரியர் நியமிக்கப்படவில்லை. எனவே பாடத்துறை ரீதியிலான ஆசிரியர் பற்றாக்குறை உடனடியாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என கல்லூரிச் சமூகம் யாழ். கல்வி வலயப் பணிப்பாளரிடம் கோரி வருகிறது.

கிராமப்புறம் சார்ந்த பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் ஆளணிப் பற்றாக்குறைகளும் வள வசதியீனங்களும் பொருத்தமான முறையில் நிவர்த்தி செய்யப்பட வேண்டும். அவ்வாறு நிவர்த்தி செய்யப்பட்டால் கிராமத்திலிருந்து நகரம் நோக்கிய மாணவர் நகர்வை குறைக்க முடியும். அதுமட்டுமல்ல கிராமப்புறப் பாடசாலைகள் தனித்துவத்துடன் கல்வி அடைவு மட்டத்திலும் பெறுபேறுகளிலும் நகரப் பாடசாலைகளுக்கு சமமான முறையில் துலங்க முடியும்.

அந்த வகையில் அத்தியார் இந்துவும் தனது பெயரை மேலும் நிலை நிறுத்தவும் நிறுவுநர் அத்தியார் அருணாசலம் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட கல்விப் பணியை மங்க விடாது பாதுகாப்பதிலும் முனைப்புடன் செயற்படுகின்றது. அதற்கேற்ப வளர்ச்சியையும் புகழையும் பெற்றுத் திகழும் என்பது உறுதி.

★

**தொகுப்பு- ஞானஆதவன்**

# வரலாற்றுச் சின்னமாக விளங்குவதால் பாதுகாக்கப்பட வேண்டிய சங்கிலி மன்னன் நீராடிய கோப்பாய் குதியடிக் குளம்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

யாழ்ப்பாண இராச்சிய மன்னர்களின் தலைநகரான நல்லூருக்கு வடக்குப் பக்கமாக அமைந்திருந்த வலி. கிழக்குப் பிரதேசம் மன்னர்களுக்கு வளம் சேர்க்கும் பெரு நிலப் பரப்பாக அமைந்திருந்தது. வலி. கிழக்கின் கிழக்கு எல்லையான குடாக் கடல் நீரேரியில் உப்பும் அதை அண்டிய தாழ்நிலங்களில் பெருமளவில் செந்நெல்லும் விளைந்தன. அதை அடுத்த பிரதேசங்களில் தென்னையும் மேட்டு நிலங்களில் பல்வேறு வகையான உணவுப் பயிர்களும் செய்கை பண்ணப்பட்டு, வளங்கொழிக்கும் பிரதேசமாக விளங்கியது.

யாழ்ப்பாண இராச்சியத்தில் அமைந்துள்ள சைவக் கோயில்களில் பூசை வழிபாடுகளை செய்வதற்கும் மன்னர்களின் யாகங்கள் மற்றும் ஹோமங்களை நிறைவு செய்வதற்கும் அந்தணர்கள் இந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்டு வளமான வசதியான இடங்களில் குடியமர்த்தப்பட்டனர். அவ்வாறு குடியமர்த்தப்பட்ட அந்தணர் குடியிருப்பு குதியடிக் குளத்தை உள்ளடக்கிய பிரதேசத்தில் இருந்ததாகக் கூறப்படுகின்றது.

கோப்பாயில் விசாலமான பிரதேசத்தை உள்ளடக்கிய ''பிராமணக் குடியிருப்பு'' அமைந்திருந்தது என்பதற்கு ஆதாரமாக இன்றும் அந்தணர் பெயர் விளங்கும் ''பிராமண ஓடை'', ''குருக்கள் குடியிருப்பு'', ''குருக்கள் ஒழுங்கை'' போன்ற பெயர்கள் தற்பொழுதும் வழக்கில் உள்ளன. அத்துடன் அந்தப் பகுதியில் உள்ள காணிகளின் பெரும்பகுதி அந்தணர்களுக்குச் சொந்தமாக இருந்தன. சம காலத்திலும் சில பிராமணக் குடும்பங்கள் குடியிருப்பது அவதானிக்கத்தக்கது.

இந்தப் பகுதியில் அமைந்திருந்த ஆலயங்களின் பூசகர்களாக இருந்த அந்தணர்களின் சந்ததியினர் இந்துக்களுக்கான கிரியைகளை மேற்கொண்டனர். இந்தப் பிரதேசங்களில் அமைந்திருந்த வைரவர், நாச்சிமார், காளி, அம்மன், வீரபத்திரர் ஆலயங்கள் மன்னர்களின் வீரம் சார்ந்த செயற்பாடுகளை முன்னெடுக்கும் களங்களாகவும், போர் வீரர்கள் பயிற்சி பெறும் இடங்களாகவும் விளங்கின எனக் கூறப்படுகின்றது.

அந்தணர்களுக்கும் மன்னன் சங்கிலியனுக்கும் நெருக்கமான தொடர்பு இருந்தமையினால் குதியடிக்குளம் சார்ந்த குடியிருப்பில் பாதுகாப்புக் கருதி மன்னன் வந்து தங்கியிருந்து செல்வதாகவும் தங்கியிருந்த காலங்களில் ,குதியடிக் குளத்தை நீராடும் தடாகமாகப் பயன்படுத்தியதாகவும் கூறப்படுகின்றது. சங்கிலி மன்னனின் பாவனைக்கு உரியது என்பதை வேறுபடுத்திக் காட்டுவதற்காகவும் அதனை நினைவு கூரவும் குதியடிக் குளத்துக்கு செல்லும் ஒழுங்கையில் ''வளைவு'' அமைக்கப்பட்டதாகவும் அது பிற்காலத்தில் சேதமடைந்ததாகவும் கூறப்படுகின்றது.

குதியடிக் குளத்தோடு சேர்ந்த அயல் பிரதேசங்களை நேரில் சென்று அவதானித்தால் பெருமளவில் செங்கல் மேடுகள், அகழிகள் காணப்படுகின்றன. இதன் மூலம் இந்தப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த கட்டடங்கள் செங்கல் கொண்டு நிர்மாணிக்கப்பட்டிருந்தமையும் அவற்றின்



அழிபாடுகள் தான் செங்கல் மேடுகள் என்பதையும் வெளிப்படையாகக் கண்டுகொள்ளக் கூடியதாக உள்ளது.

1987 ஆம் ஆண்டு இந்திய அமைதிப்படை யாழ் - பருத்தித்துறை பிரதான வீதியூடாக யாழ். நகர் நோக்கி முன்னேறிய போது குதியடிக் குளத்துடன் சேர்ந்த பகுதியில் பெரும் எதிர்ப்பைச் சந்திக்க நேர்ந்ததால் அந்தப் பிரதேசம் பெரும் தாக்குதலுக்கும் சேதத்துக்கும் உள்ளாகியது. அங்கு அமைந்திருந்த பழைய கட்டடத்தொகுதிகள் மற்றும் வீடுகள் அனைத்தும் முற்றாகச் சேதமாக்கப்பட்டு தரைமட்டமாகின என்று கூறப்படுகின்றது.

தற்போதும் இந்தப் பகுதியில் மக்கள் முழுமையாக மீளக் குடியேற வில்லை. யுத்த அழிபாடுகளுடன் முழுமையாக புதர் மண்டிய பிரதேசமாகக் காணப்படுகின்றது. இங்கு கால்நடைகளின் நடமாட்டத்தைத்தான் கண்டு கொள்ள முடிகின்றது. ''குதியடிக்குளம் நன்னீர்த் தடாகமாக இருப்பதால் அதனைப் பயன்படுத்தி அந்தப் பிரதேசத்தில் மீண்டும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான முன்மொழிவுகள் முன் வைக்கப்பட்டுள்ள போதிலும் அவை இது வரையும் செயல் வடிவம் பெறவில்லை'' எனக் கிராம அலுவலர் செ.தி. வரதராசன் தெரிவித்தார்.

தமிழர் வரலாற்று பின்னணியுடன் கூடிய குதியடிக்குளம் வரலாற்றுச் சின்னமாகப் பேணிப் பாதுகாக்கப்படுவதோடு அந்தப் பிரதேசம் மீண்டும் வளம் பெற வேண்டும்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு,மே.12

தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத 2392 ஆம் இலக்க நேற்று முன்தினம் சீட்டிழுப்பில் "P" என்ற ஆங்கில எழுத்தும் 7/1/4/9/4/1 என்ற இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக்குரியனவாகத் தெரிவாகின.

இதன் பிரகாரம் வலமிருந்து இடமான அமைப்பில் P என்ற ஆங்கில எழுத்தும் 7/1/4/9/4/1 என்ற இலக்கங்களும் வைத்திருக்கும் ஒருவருக்கு சுப்பர் பரிசாக 13,813,378 ரூபா கிடைக்கவுள்ளது.

7/1/4/9/4/1 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் ஒருவருக்கு முதலாம் பரிசாகத் தலா இருபது இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

1/4/9/4/1 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 14 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

4/9/4/1 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 139 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

9/4/1 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,311 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

4/1 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,047 பேருக்கு 5ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

1 என்ற இலக்கத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,29,237 பேருக்கு 6ஆம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கும்.

இடமிருந்து வலமான அமைப்பில் 7/1/4/9/4 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13 பேருக்கு ஏழாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

7/1/4/9 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 134 பேருக்கு 8ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

7/1/4 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,303 பேருக்கு 9ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

7/1 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 12,906 பேருக்கு பத்தாம் பரிசாகத் தலா ஐம்பது ரூபா கிடைக்கும்.

"P" என்ற ஆங்கில எழுத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 51,912 பேருக்கு பதினோராம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (ற)


## வலயக்கல்வி அலுவலகம் - வலிகாமம்
## பாடசாலை வேலைகளுக்கான
## கேள்வி அறிவித்தல் - 2011

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரால் இக்ராட் (ICTAD) இல் பதிவுசெய்து பதிவுச் சான்றிதழ் வைத்திருப்பவர்களிடம் இருந்தும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே தரப்பட்ட அட்டவணைப்படி வேலைகளுக்கான கேள்வி வைப்புப் பணத்தை வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரின் கணக்கில் வைப்புச் செய்து அல்லது வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தில் நேரடியாகச் செலுத்திப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

1. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி: 12.05.2011 முதல் 25.05.2011 நண்பகல் 12.00 மணி வரை.
2. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி: 27.05.2011 மு.ப.10.00 மணி வரை
3. கேள்வி திறக்கப்படும் திகதி: 27.05.2011 மு.ப. 10.30 மணி (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
4. கீழ்க் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் விண்ணப்பிக்கலாம்.
5. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு . சரியாக நிரப்பப்படாத தெளிவற்ற கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
6. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தகாரர் தமது இக்ராட் (ICTAD) பதிவுப்புத்தகத்தை, பாடசாலைகள் வேலைகள் பொறியியலாளர், யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம் அவர்களிடம் சமர்ப்பித்து சிபார்சுக் கடிதத்தைப் பெறுதல் வேண்டும்.
7. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்து மூலப்பிரதியும், எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப்படிவமும், கையொப்பமும், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றையும் கேள்விப்பத்திர இணைப் பிரதியையும் தனித்தனி இரு கடித உறைகளில் இட்டு கடித உறையின் இடப்புற மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையிலிட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரின் முத்திரை இடப்பட்டு மருதனார்மடத்திலுள்ள வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் இடல் வேண்டும்.
8. கேள்விப் பத்திரங்களில் பெறுமதி சேர்வரி (Vat) 12% சேர்க்கப்பட்ட கேள்வித் தொகை, பெறுமதி சேர்வரி (Vat) 12% சேர்க்கப்படாத கேள்வித்தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடல் வேண்டும். எனினும், இந்த நிபந்தனையும் மீளளிக்கப்படும் வைப்புப் பணம், மீளளிக்கப்படாத வைப்புப் பணம் என்பனவும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்துக்கு விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது.
9. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் தெரிவு செய்யப்படும் திகதியிலிருந்து 03 மாத காலத்துக்குள் அனைத்து வேலைகளையும் பூர்த்தி செய்து கையளிக்க வேண்டும். எதுவித காலதாமதங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன், மேலதிக விவரங்களைப் பாடசாலை வேலைகள் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

| இல. | விவரம் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | திட்டம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் | இக்ராட் இல. |
|---|---|---|---|---|---|
| 01. | யா/ஏழாலை மகா வித்தி. இருமாடி வகுப்பறைக் கட்டட நிர்மாணம்- 60'X 25' தொடர் வேலை | 750.00 | PSDG | 20,000.00 | M7/C8 |
| 02. | யா/உடுவில் முருகமூர்த்தி வித்தி. இருமாடி வகுப்பறைக் கட்டட நிர்மாணம் 50'X 25' தொடர் வேலை | 750.00 | PSDG | 20,000.00 | M7/C8 |
| 03. | யா/பிரான்பற்று கலைமகள் வித்தி. இருமாடி வகுப்பறைக் கட்டட நிர்மாணம். 50'X 25' தொடர் வேலை. | 750.00 | PSDG | 20,000.00 | M7/C8 |
| 04. | யா/குட்டியப்புலம் அதகபா. இருமாடி நூலகக் கட்டடம் நிர்மாணம் 40'X 25' - (கீழ்த் தளம்) | 1000.00 | PSDG | 29,000.00 | M7/C8 |
| 05. | யா/அளவெட்டி அருணோதயக் கல்லூரி இருமாடி வகுப்பறைக் கட்டட நிர்மாணம் 50'X 25' தொடர் வேலை. | 1000.00 | PSDG | 25,000.00 | M7/C8 |

பாடசாலை வேலைப்பகுதி,
வலிகாமம் வலயம்.

வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்விப் பணிமனை, வலிகாமம்.



## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
25.05.1969

அரனின் அடியில்
12.05.2001

**திருமதி**
**ஞானகாந்தன் வாசுகி**

அன்புத் தெய்வமே!
பண்பின் உறைவிடமாய் பாசத்தின்
பிறப்பிடமாய் அன்புடனே
அரவணைத்து அணையாது
ஒளிவிட்ட தீபமன்றோ! வேதனையோ
தீரவில்லை எம் மங்காப் பெரும்
செல்வமே! உமது பாசமிகு
நினைவுகளை நினைத்து
கலங்குகின்றோம் அன்பெனும் தெய்வமே!

உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

வங்கியடி, இணுவில் கிழக்கு,
இணுவில்.

(49,23,50)

- குடும்பத்தினர்.



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

வைகாசி ஐந்தில் உடைத்தெறியப்பட்ட எங்கள் முத்துக்கள் மூன்று



ஐயாத்துரை யோகராணி | ஐயாத்துரை செல்வராணி | ஐயாத்துரை லோகராணி

05.05.2009

வைகாசி ஐந்திலே
வலிய கொடிய அரக்கன்
வையத்தில் நீங்கள்
வாழக்கூடாது என்றெண்ணி
வதம் செய்து கொன்று விட்டான்
வாடுகிறோம் இங்கு....
பெற்றவளின் வயிறோ
நெருப்பாய் எரிகிறது
உடன் பிறப்புக்களோ-இங்கு
உருக்குலைந்து நிற்கின்றோம்

அத்தான் மாரோ- இன்றும்
ஆறுதல் அடையவில்லை
பேறாமக்களோ மருமக்கள்மாரோ
பெற்றாரிடம் பலகேள்வி
என்ன பாவம் செய்தோம்
எப்போ எம்மிடம் வருவீர்கள்-நீங்கள்
எமைப் பிரிந்து ஈராண்டுகள் ஆனதம்மாக்களே
ஈராண்டென்ன எத்தனை எத்தனை ஆண்டுகள்
சென்றாலும் எந்நாளுமே இருப்போம்
உம் நினைவில்

இவர்களின் ஆத்மசாந்திக் கிரியை (13.05.2011) வெள்ளிக்கிழமையன்று கல்மடுநகர் இராமநாதபுரத்திலுள்ள 497ஆம் இலக்க இல்லத்தில் நடைபெறவுள்ளது. உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

497, கல்மடுநகர், இராமநாதபுரம்,
வட்டக்கச்சி.

(22,27,49)

-குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கியமான விடுதிக் கைத்தொழில் இலாபத்தைத் தரும்

யாழ்.- வவுனியா தரை வழிப் பாதை 2010 ஜனவரியுடன் 24 மணி நேரமும் முழுமையான சுதந்திரமாகத் திறந்து விடப்பட்டது. காட்டாற்று வெள்ளம் கரைபுரண்டு வந்ததுபோல வவுனியாவுக்குத் தெற்காக உள்ள அனைத்துப் பிரதேச மூவின மக்களும் சுற்றுலாப் பயணிகளாக வந்தனர்.

அவர்கள் தங்க இடமின்றித் தடுமாறினர். மரங்கள், நிழல்கள் எல்லாம் தங்கிச் சிரமப்பட்டனர். ''தேவை கண்டுபிடிப்புக்களின் தாயல்லவா'' விடுதிகள் யாழ். குடாநாட்டின் நாலா திசைகளிலும் முளைக்க ஆரம்பித்தன. இந்த விடுதிகள், ஓய்வு விடுதிகள், ஹொட்டேல்கள் 3 வகைப்பட்ட வருமான வகுப்பினரை இலக்கு வைத்து உருவாகின.

கீழ் நடுத்தர வருமானம் பெறுபவர்கள், மேல் நடுத்தர வருமானம் பெறுபவர்கள், செல்வந்தர்கள் போன்ற வகையில் இலக்குகள் அமைந்தன.

இதில் கீழ் நடுத்தர வருமானம் பெறுபவர்களை இலக்கு வைத்தே விடுதிகள் ஏராளம் உருவாகின.

இப்படியே தினந்தோறும் அள்ளுப்பட்டு வருவார்கள் என்ற எதிர்பார்ப்பு பொய்த்துப் போகத் தொடங்கிவிட்டது.

சுற்றுலாப் பயணிகள், யாத்திரிகர்களின் உச்சநேரம் முடிவடைந்துவிட்டது.

இதனால் விடுதிகள், ஓய்வு விடுதிகள், ஹொட்டேல்கள் நாளாந்தம் ஒவ்வொன்றாக மூடப்படுகின்றன. வீடுகளில் வாடகைக்குக் குடியிருந்தோரை எழுப்பிக் கலைத்து விட்டு அவற்றை விடுதிகளாக்கியோரும் பெரும் தொகை முற்பணம் கொடுத்தும் கட்டடத்தை நவீனப்படுத்தியும் வருடக் கணக்கில் ஒப்பந்தம் செய்து எடுத்தோரும் விழிபிதுங்கி நிற்கின்றனர். ஆரம்பத்தில் சொர்க்கம் போலத் தெரிந்த இந்தத் தொழில் படுவேகமாக நரகம் போல மாறிவிட்டது. தென்பகுதி மக்களின் வருகை தற்போது பருவ கால வருகையாக அதாவது, பௌத்த விசேட சமய தினங்கள், பாடசாலை விடுமுறை நாள்கள், சனி, ஞாயிறுடன் அண்மித்து வரும் கிழமை நாள்களின் பொது விடுமுறை தினங்கள் என்பவற்றுடன் அண்மித்த ஒன்றாக மாறிவிட்டது. தொகையும் வீழ்ச்சியடைந்து விட்டது. ஆயினும் சில வகை விடுதிகள் தப்பிப் பிழைத்து வெற்றி நடைபோடத்தான் செய்கின்றன.

யாழ் நகர, புறநகர பிரதேசங்களில் குறைந்த வருமானம் பெறுபவர்களை இலக்காகக் கொண்ட விடுதிகள் இவ்வாறு செயற்படுகின்றன.

வர்த்தகத்தில் ஈடுபடவென வெளிஇடங்களில் இருந்து வந்து நிரந்தரமாகத் தங்கி உள்ளோரும், சுற்றுலா பயணிகளும் வருவதால் இவை இலாபகரமானதாக இயங்க முடிகின்றது.

மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மதுபானம் ஊற்றி விற்க அனுமதிக்கப்பட்ட ஓய்வு விடுதிகள் இவை.

மதுபானத்தின் மீதான கவர்ச்சியுள்ளோர் வருகை தருவதால் இவையும் வெற்றிகரமாக இயங்குகின்றன.

அரச உயரதிகாரிகள், உள்ளூர், சர்வதேச தொண்டு நிறுவனங்களின் உயரதிகாரிகள், தனியார்துறை உயரதிகாரிகள் ஆகியோரை வாடிக்கையாளராக வைத்துள்ள சில ஓய்வு விடுதிகள், ஹொட்டேல்களும் வெற்றிகரமாக இயங்குகின்றன.

விடுதிக் கைத்தொழில் நட்டமடைய ஆரம்பிப்பதனைக் கண்ட சில புத்திசாலிகள் வட மாகாண சபையின் அலுவலகங்கள் யாழ்ப்பாணம் வரவுள்ளதை அறிந்து அவற்றுக்குத் தமது கட்டடங்களைக் கொடுத்து விட்டனர்.

இவர்கள் நிலைமைக்கேற்ப மாற்றுத் தீர்மானங்களை எடுத்துத் தப்பிப்பிழைக்கும் அதி புத்தி சாலிகளாவர்.

மேற்சொன்ன வகைக்குள் அடங்காதோர் தான் நட்டப்படும் நிலைக்கு வந்துள்ளனர்.

நுவரெலியாப் பிரதேசத்தில் வீட்டு உரிமையாளர்கள் சுற்றுலா பருவ காலத்தில் தமது வீட்டின் ஒரு பகுதியை தின வாடகைக்குக் கொடுத்து வருமானம் சம்பாதிக்கின்றனர். அது போல் மாற்று நிலைப்பாட்டை யாழ்ப்பாண மக்களும் எடுப்பது இந்தத் தொழிலின் எதிர்காலத்துக்கு உகந்தது.

யாழ். மாவட்டச் செயலகம் மிக அண்மையில் சுற்றுலாத் துறை குறித்த வழிகாட்டி நூலொன்றை வெளியிட்டுள்ளது. இத்துறை குறித்த உயர்வான அக்கறை பாராட்டுதற்குரியது.

சுற்றுலாக் கைத்தொழில் உலகெங்கும் வெற்றி நடைபோடும் ஒரு கைத்தொழிலாகியுள்ளது. ஆனால் யாழ். குடாநாட்டில் இது நட்டப்படும் துறையாக மாறுவதைத் தடுக்க வேண்டிய கூட்டுச் சமூகப் பொறுப்பு எம்மீது சுமத்தப்பட்டுள்ளது.

நீண்ட கொடிய யுத்தத்தால் சுற்றுலாத் தொழில் குறித்த அறிவு, விழிப்புணர்வு, அக்கறை எம்மிடம் இல்லாமல் போனமை வருந்துதற்குரியது. அது எமது குற்றமும் அல்ல. என்றாலும் மாறும் உலகின் போக்கை உணர்ந்து எமது பொருளாதாரத் திட்டமிடல்களை நாம் மேற்கொள்ள வேண்டிய காலத்தின் தேவையை உணரவேண்டும்.

அழகழகான சிறு தீவுகள், வனப்பான கடற்கரைகள், யுத்தத்தின் சத்தத்தின் மத்தியிலும் தப்பித்த சில புராதன சின்னங்கள், புகழ்பெற்ற கோயில்கள் என்று எம்மிடம் உள்ள சுற்றுலாத் தலங்கள் செல்வம் ஈட்டித்தர வல்லவை. விடுதிக் கைத்தொழில் துறையை ஆரோக்கியமான போக்கு ஒன்றினுள் அழைத்துச் சென்றால் வருவாய் ஈட்டும் சிறந்த துறையாக நிச்சயம் திகழும்.

வே.தபேந்திரன்

## பொலிஸார் சமிக்ஞையை உதாசீனம் செய்தவருக்கு அபராதம்

தென்மராட்சி, மே 12

வாகனத்தை நிறுத்துமாறு பொலிஸார் சமிக்ஞை செய்தும் நிறுத்தாமல் சென்ற உழவு இயந்திரத்தை துரத்திப் பிடித்துப் பார்த்தபோது அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிச் சென்றது தெரியவந்தது.

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்றதாகப் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது வழக்கினை விசாரித்த நீதிவான் உழவு இயந்திரச் சாரதிக்கு அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிச்சென்ற குற்றத்துக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத்தொகை செலுத்தத் தவறின் ஐந்து மாத சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார்.

வாகனத்தை நிறுத்தாமல் சென்றமைக்காக ஆயிரம் ரூபா அபராதமும் விதித்தார். (ம-207)

## பரிசளிப்பு விழா

தென்மராட்சி, மே 12

தென்மராட்சி கல்வி வலயதினால் நடத்தப்பட்ட சைவ சமய பாட போட்டிப் பரீட்சைகளில் சித்திபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்புவிழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்குச் சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ற-207)

## தென்மராட்சியில் வீதி நாடகம்

காவேரி கலாமன்ற நடிகர்கள் வழங்கும் வீதி நாடகம் தென்மராட்சிப் பிரதேசத்தில் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக நடத்தப்பட்டு வருகிறது.

சாவகச்சேரி கோவில் குடியிருப்புப் பிரிவுக்கான வீதி நாடகம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி கச்சாய் வீதி, புனித லிகோரியார் தேவாலய முன்றலில் நடைபெறவுள்ளது. (எ-207)

## முல்லைத்தீவில் இணைய வானொலி; 18ஆம் திகதி சேவை ஆரம்பம்

முல்லைத்தீவு நகரில் ''சஞ்சீவி ஒலி இணையத்தளம்'' எனும் பெயரில் புதிய இணைய வானொலி சேவை எதிர்வரும் 18ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வாக கடந்த ஏழாம் திகதி சனிக்கிழமை வானவில் வீடியோ றெட்வேக் தலைமையகமும், சஞ்சீவி இணையத்தள தலைமையகமும் திறந்து வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் ஏராளமான ஊடகவியலாளர்களும் கலை, இலக்கிய வாதிகளும் கலந்துகொண்டனர். புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள இந்த இணையத்தள சேவையில் செய்திகள், கலை, இலக்கியப் படைப்புக்கள் ஆகியன ஒலிபரப்புச் செய்யப்படும் என்று கூறப்பட்டது. (ம-313)




யாழ்ப்பாணம், மே 12

சங்கானை வெல்வில் இலுப்பைத் தாழ்வு ஸ்ரீ வள்ளிதேவ சேனா சமேத சிவசுப்பிரமணிய கதிர்வேலாயுத சுவாமி கோயிலின் வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 7ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 10 நாள்கள் நடைபெற்றுவரும் திருவிழாவில் எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பரத் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை 8.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் 9.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் இடம்பெறும்.

17ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 7 மணிக்கு தீர்த்த உற்சவமும் பி.ப.3.30 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறும்.

உற்சவ காலங்களில் தினமும் 'அர்த்தமுள்ள இந்துமதம்' எனும் தலைப்பில் ஆன்மீக அருளுரையை சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி கலாநிதி ஸ்ரீ ஐயப்ப தாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் நிகழ்த்துவார். (ற-311)

* * *

புங்குடுதீவு, பெருங்காடு கிராஞ்சியம்பதி ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந் திருவிழா கடந்த 7ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறும் இந்தத் திருவிழாவில் எதிர்வரும் 16ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ற-311)

* * *

வரணி, மே 12

வரணி வடக்கு, கும்பிட்டான் புலம் கற்பக விநாயகர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியது.

தொடர்ந்து 10 நாள்கள் இடம் பெறும் இந்தத் திருவிழாவில் எதிர்வரும் 16ஆம் திகதி தேர்த் திருவிழாவும் 17ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ற-122)

* * *

கோண்டாவில் மேற்கு ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் ஆலயத்தின் பெருந்திருவிழா கடந்த 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 11 தினங்கள் திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ற-311)

* * *

யாழ்ப்பாணம், மே 12

சித்தன்கேணி பெரியவளவு ஸ்ரீ மஹா கணபதிப்பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 7ஆம் திகதி சனிக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 11 தினங்கள் இடம் பெறும் இந்தத் திருவிழாவில் எதிர்வரும் 16ஆம் திகதி திங்கட் கிழமை காலை 9 மணிக்குத் தேர்த் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (ற-311)

## கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தேசிய மட்ட விருது வழங்கும் போட்டி

யாழ்ப்பாணம், மே 12

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச்சபை தேசிய விருதுக்குரியவர்களைத் தெரிவு செய்வதற்கு நாடளாவிய ரீதியில் நடத்தும் போட்டிக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இந்த விருதுக்கு சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் முயற்சியாளர்கள், கைத்தொழில் சார்ந்த கைத்தொழில் முயற்சியாளர்கள் விண்ணப்பிக்கலாம்.

தெரிவு செய்யப்படுபவர்களில் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்கள் துறையில் மிகச் சிறந்த முயற்சியாளருக்கு தேசிய தங்க விருதும் 50 ஆயிரம் ரூபா பணப்பரிசிலும் சுயதொழில் முயற்சிகள் துறையில் மிகச்சிறந்த தொழில் முயற்சியாளருக்குத் தேசிய தங்க விருதும் 50 ஆயிரம் ரூபா பணப் பரிசிலும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் 14 கைத்தொழில் பிரிவுகளில் தேசிய மட்டத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறுவோருக்கு முறையே 30 ஆயிரம் ரூபா, 20 ஆயிரம் ரூபா, 10ஆயிரம் ரூபா வீதம் பணப்பரிசில்களும் வெள்ளி விருதும் வழங்கப்படும்.

மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெறுபவருக்கு 10 ஆயிரம் ரூபா பணப்பரிசிலும் சான்றிதழும் வழங்கப்படும்.

இந்த விருதுக்கான தெரிவுகள் பாரம்பரிய மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 27ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த கண்காட்சி நிலையத்தில் இடம்பெறும்.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தலைமை அலுவலகத்திலும் சகல மாவட்ட அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ளமுடியும்.

அத்துடன், விண்ணப்பங்கள் எதிர்வரும் ஜூலை மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படவேண்டும் - எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிபியத் தலைநகர் திரிப்போலி மீது நேட்டோப் படைகள் குண்டுமழை!

திரிப்போலி, மே 12

லிபியத் தலைநகர் திரிபோலியில் நேட்டோ விமானப் படைகள் நேற்றுமுன்தினம் குண்டு மழை பொழிந்தன.

லிபியாவில் கடாபிக்கு எதிரான நேட்டோ தாக்குதல் மீண்டும் ஆக்ரோசம் அடைந்துள்ளது. மிஸ்ரட்டா, ஜின்டான் ஆகிய நகரங்களில் கடாபித் தரப்புக்கும் எதிர்த் தரப்புக்கும் இடையிலான மோதல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் திரிபோலியில் கடாபித் தரப்பு தகவல் தொடர்பு மையங்கள் என்று கருதப்பட்ட பல்வேறு இடங்கள் மீது நேட்டோ விமானப் படைகள் நேற்றுமுன்தினம் குண்டு வீசித் தாக்கின. கடாபி குடியிருக்கும் வளாகத்தினுள்ளும் சில குண்டுகள் வந்து விழுந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேட்டோ விமானப் படைகள் தாக்கிய இடங்களுக்கு செய்தியாளர்களை நேரில் அழைத்துச் சென்று குழந்தைகளுக்கான ஹை கமிஷன் கட்டடம் ஒன்று நேட்டோ தாக்குதலில் தரைமட்டமாகியுள்ளதை லிபிய அதிகாரிகள் காண்பித்தனர்.

திரிபோலியில் நேட்டோ தாக்குதலில் நான்கு குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களில் இருவர் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த திங்கட்கிழமை பேட்டியளித்த நேட்டோ அமைப்பின் தலைவர் பாக் ராஸ்முசன் கூறுகையில், ''கடாபி பதவியை விட்டு விலகும் காலம் கடந்து விட்டது. அவருக்கு அல்லது அவரது ஆட்சிக்கு இனி எதிர்காலமே இல்லை என்பதை விரைவில் அல்லது சற்று தாமதித்து அவர் உணர்வார்'' என்றார்.

அதன் பின்புதான் நேட்டோ தன் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கிடையில் கடாபி மற்றும் அவரது மகன் சயீப் அல் இஸ்லாம் இருவரையும் சர்வதேச போர்க் குற்ற விதிகளின்படி கைது செய்யும் நடவடிக்கையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இறங்கியுள்ளது.

## அமெரிக்காவை கண்டிக்கிறார் ஒசாமாவின் மகன் ஓமர்

யாருக்கும் தெரியாமல் சர்வதேச பயங்கரவாதி ஒசாமா பின்லேடனை பாகிஸ்தான் நாட்டுக்குள் படைகளுடன் சென்று சுட்டு வீழ்த்தியது அமெரிக்கா.

கடந்த 2001ஆம் ஆண்டு செப்டம்பர் 11ஆம் திகதி நியூயோர்க் இரட்டைக் கோபுரம் அல் குவைதா பயங்கரவாதிகளால் தாக்கப்பட்டது எவ்வளவு பரபரப்பை ஏற்படுத்தியதோ அதைவிட ஆச்சரியத்தை ஏற்படுத்தியது அமெரிக்காவின் இந்த நடவடிக்கை.

இருப்பினும் அமெரிக்கப் படைகள் நடத்திய தாக்குதல் அத்துமீறல் என மறைந்த ஒசாமாவின் மகன் ஓமர் பின்லேடன் அமெரிக்க பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஓமர் கூறியதாவது: அல் குவைதாத் தலைவர் ஒசாமாவை அமெரிக்கா கைது செய்து நீதியின் முன் நிறுத்தியிருக்க வேண்டும் . அப்படிச் செய்யாமல் சுட்டுக் கொன்றதுடன் அவரது உடலை கடலில் வீசியிருக்கிறது. இது கண்டனத்துக்கு உரியது - என்றார்.

## பாகிஸ்தான் 'சிவப்பு வலயப்' பகுதியில் பறந்த பெண் தூதரக அதிகாரி கைது

பாகிஸ்தானில் அந்நாட்டு நாடாளுமன்றம் மற்றும் ஜனாதிபதியின் மாளிகைக்கு மேலாக ஜேர்மன் தூதரகப் பெண் அதிகாரி ஒருவர் பாராகிளைடிங் விமானத்தில் பறந்ததற்காகக் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாகிஸ்தானின் நாடாளுமன்றம் அதிபர் மாளிகை உள்ளிட்ட முக்கியப் பகுதிகள் உயர்நிலைப் பாதுகாப்புப் பிரிவுக்குட்பட்ட ''சிவப்பு வலையத்துக்குள்'' வருபவை.

இந்தப்பகுதியின் மீது விமானங்கள் பறப்பது தடை செய்யப்பட்டுள்ளது. கடந்த திங்கட்கிழமை இந்தப் பகுதியின் மீது பாகிஸ்தானுக்கான ஜேர்மன் தூதரகத்தைச் சேர்ந்த பாதுகாப்பு ஆலோசகர் ஷாஷா உல்ப் பாராகிளைடிங்கில் பறந்துள்ளார்.

அவருடன் பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த விமானப் பயிற்சியாளர்கள் ராவ் அக்தர் ஹுசைன் மற்றும் ஹசீப் ஹுசைன் ஆகியோர் பறந்துள்ளனர். தடை செய்யப்பட்ட பகுதியின் மீது பறப்பதைக் கண்ட விமானப் படையினர் இவர்களைக் கைது செய்தனர். இவர்களிடம் விசாரணை மேற்கொண்டபின் தலைமைச் செயலக காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

அங்குதான் பறக்க முயற்சிக்கையில் தோல்வியடைந்து கீழே விழுந்து விட்டதாகவும், அதனால் காலில் அடிபட்டுள்ளதாகவும் பொலிஸாரிடம் உல்ப் தெரிவித்துள்ளார். மூவர் மீதும் வழக்குப் பதிவு செய்த பொலிஸார் தூதரக அதிகாரி போன்ற உயர் பதவியில் உள்ளதால் உல்பை விடுதலை செய்தனர்.

மற்ற இருவரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். அங்கு இவர்களுக்கு நீதிமன்றக் காவல் விதிக்கப்பட்டு அடியாலா சிறைக்கு அனுப்பப்பட்டனர். இந்த விடயம் குறித்து பாகிஸ்தான் உள்துறை அமைச்சகத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

தீவிரவாதிகள் ரிமோட் கண்ட்ரோல் மூலம் இயங்கும் விமானத்தைக் கொண்டு இஸ்லாமாபாத்தின் மீது தாக்குதல் நடத்தலாம் என்று பாதுகாப்பு அதிகாரிகள் சமீபத்தில் எச்சரிக்கை செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.



வளர்முக நாடுகளின் நான்காவது ஐ.நா. மாநாடு துருக்கி நாட்டின் இஸ்தான்புல் நகரில் நடைபெற்றது. இதில் ஐ.நா. பொதுச்செயலாளர் பான்-கீ மூன், துருக்கி நாட்டுப் பிரதமர் ரீசெப் தையாப் ஈர்டோகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சட்டத்துக்குப் புறம்பாகப் பணியாற்றிய 4 இந்தியர்கள் பிரிட்டனில் கைது

பிரிட்டனில் விசா காலம் முடிந்த பிறகும் ஆடை நிறுவனத்தில் சட்டத்திற்குப் புறம்பாகப் பணியாற்றி வந்த நான்கு இந்தியர்கள் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்தியாவைச் சேர்ந்த நான்கு பேர் சட்டத்திற்கு புறம்பாகப் பிரிட்டனில் உள்ள ஒரு ஆடை நிறுவனத்தில் பணியாற்றி வந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இவர்களில் 42 மற்றும் 48 வயது மதிக்கத்தக்க இரண்டு ஆண்கள் விசா காலம் முடிந்தவர்கள். மற்ற இருவரில் 46 வயது மதிக்கத்தக்க ஆண் அடைக்கலம் கேட்டு மறுக்கப்பட்டவர். 33 வயதுப் பெண் சட்டத்திற்குப் புறம்பாகப் பிரிட்டனுக்குள் நுழைந்தவர். இவர்கள் நான்கு பேரும் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்பட உள்ள இவர்கள் பிரிட்டனில் தங்கியிருக்கும் வரை அந்த நாட்டின் குடியுரிமை அலுவலகத்தில் கையெழுத்திட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டனர். இவர்களுடன் இலங்கையைச் சேர்ந்த ஒரு ஆணும், பாகிஸ்தானை சேர்ந்த ஒரு பெண்ணும் கைது செய்யப்பட்டனர்.

பிரிட்டன் பாதுகாப்புப் படையின் கிழக்கு மிட்லேண்ட்ஸ் உதவி இயக்குநர் பில் டயர் கூறுகையில், ''அனுமதி இல்லாமல் இதுபோன்று வெளிநாடுகளில் பணியாற்றுவது சட்டத்துக்கு விரோதமானது என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். நேர்மையான தொழிலதிபர்கள் இதுபோன்று சட்டத்துக்குப் புறம்பான செயல்களில் ஈடுபட்டால் தண்டிக்கப்படுவர்'' - என்றார்.

## அமெரிக்காவின் கோரிக்கை நிராகரிப்பு

பாகிஸ்தானின் அபோதாபாத்தில் பதுங்கியிருந்த ஒசாமா பின்லேடனைப் பிடிக்க அமெரிக்கப் படைகள் இரண்டு ஹெலிகொப்டர்களில் வந்தன.

அதில் ஒரு ஹெலிகொப்டர் அபோதாபாத் மாளிகையில் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக நொறுங்கி விழுந்தது.

பிளாக் ஹாக் ரக அந்த ஹெலிகொப்டரின் உடைந்த பாகங்களை அளிக்குமாறு அமெரிக்கா பாகிஸ்தானிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

அமெரிக்காவின் கோரிக்கையைப் பாகிஸ்தான் தொடர்ந்து புறக்கணித்து வரும் நிலையில் சீனா உடைந்துபோன அமெரிக்க ஹெலிகொப்டரை பார்வையிட அனுமதிக்குமாறு கோரியுள்ளது. பாகிஸ்தானும் அனுமதிகொடுக்கும் எனத் தெரிகிறது

SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்
A/L 2013
Econ:- V. ஞானவேல்
B.st:- B.S. பசில் B.B.A.
Acc:- S. தவா B. Com. (Hons) (Acc. spl)
Gen.Eng:- M. KINGSTAN BA.
Gr 6 to 11 Eng. Med
புலமைப்பரிசில் 5 ஸ்ரீ.றமணன்

விற்பனைக்கு
போட்டோக்கொப்பி இயந்திரம், T.phone booth, பாவித்த ரேடியோக்கள்,
[illegible]
பெட்டி மற்றும் பல இலத்திரனியல் பொருள்கள் விற்பனைக்குண்டு.
தொடர்பு:-0779059039.

## ஓராண்டு மறையாத நினைவலைகள்



மலர்வு
04.10.1928

உதிர்வு
23.04.2010

திதி: 12.05.2011

**திருமதி ருக்மணி சுப்பிரமணியம்**
(ஓய்வுபெற்ற தாதி, யாழ்.போதனா வைத்தியசாலை.)

ஓராண்டு சென்றாலும் - அம்மா
உங்கள் நினைவுகள்
ஓயாத அலைகளாக மோதுதம்மா
எம்மோடு இருந்த காலங்களில்
எமக்காக உங்களை அர்ப்பணித்தீர்கள்
மீண்டும் உங்கள் அன்பையும்
அரவணைப்பையும் அறிவுரைகளையும்
கேட்கும் காலம் கிடைத்திடுமா என்று
ஏங்குகின்றோம்; தவிக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

காளி கோயிலடி,
சுன்னாகம் கிழக்கு.

- குடும்பத்தினர்.

(40-20-50)(4089)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம

## 16ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

அமரர் சிற்பசோதிடர்
**பொன்னையா புட்பவனநாதர்**



தாயின் மடியில்
06.01.1932
தயாபரன் அடியில்
27.04.2011

நாளை (13.05.2011) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி முதல் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புக் கரம் கூப்பி அழைக்கின்றோம்.

குறிப்பு:- இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

பிரார்த்திக்கும்: மகேஸ்வரி-புட்பவனநாதர்,
அபிராமி- ஆனந்தன், காந்திமதி-ஸ்ரீக்காந்தன் (UK),
ஜெனனி-ஞானவழகன் (UK),
வாசுகி-சிறில் (அப்பன் Canada)

கனகரத்தினம் வீதி,
நாயன்மார்கட்டு சந்தி.
T.P: 0776660302.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் இராணுவத்தினர் குறுக்கிட்டால் சுட்டுக் கொல்லுமாறு உத்தரவிட்டிருந்தார் ஒபாமா

## நியூயோர்க் சஞ்சிகை வெளியிடும் தகவல் இது

வாஷிங்டன், மே 12

சர்வதேச தீவிரவாதி ஒசாமா பின்லேடனைப் பிடிக்கும் முயற்சியில் பாகிஸ்தான் இராணுவத்தினரோ அல்லது பொலிஸாரோ தடுத்தால், அவர்களை சுட்டுத் தள்ள அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா உத்தரவு பிறப்பித்திருந்தார்.

அதற்கேற்ப ஆயத்த நிலையில் எத்தகைய பிரச்சினையையும் எதிர்கொள்ளும் நிலையில் அமெரிக்கச் சிப்பாய்கள் புறப்பட்டுள்ளனர்.

கடந்த மே முதலாம் திகதி அபோதாபாத்திலுள்ள சொகுசு விடுதியில் தங்கியிருந்த ஒசாமா பின்லேடனை அமெரிக்கச் சிப்பாய்கள் அதிரடித் தாக்குதல் நடத்தி சுட்டுக்கொன்றனர்.

அமெரிக்கச் சிப்பாய்கள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதல் சம்பவம் தொடர்பான விவரம் இப்போது ஒவ்வொன்றாக வெளிவரத் தொடங்கியுள்ளது.

ஜனாதிபதி பராக் ஒபாமா அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள சில சிரேஷ்ட அமைச்சர்கள் தெரிவித்தனர் என 'நியூயோர்க் ரைம்ஸ்' பின்வரும் செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் தாக்குதல் நடத்த தேர்ந்தெடுக்கப்பட்ட கொமோண்டோக்களிடம் இந்த வேட்டையின்போது குறுக்கே பாகிஸ்தான் இராணுவச் சிப்பாய்கள் அல்லது உள்ளூர் பொலிஸார் யார் வந்தாலும் சுட்டுத் தள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.

இரண்டு பிரிவாக இராணுவத்தினர் பிரிக்கப்பட்டிருந்தனர். ஒரு பிரிவினர் தாக்குதல் நடத்தினாலும், மற்றொரு பிரிவினர் எதற்கும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.

ஒருவேளை பின்லேடன் கொல்லப்பட்டால், அவரை உடனடியாக அடக்கம் செய்வது என்றும், அவர் உயிருடன் பிடிபட்டால் அவர் மீதான குற்றச்சாட்டுகளை விசாரிக்க நீதிபதி, அவரது தரப்பு வாதத்தை விளக்குவதற்கு மொழி பெயர்ப்பாளர் ஆகியோர் விமானந்தாங்கிக் கப்பல் கார்ல் வின்சனில் தயாராக இருந்தனர்.

இந்தப் போர்க்கப்பல் அரபிக் கடல் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்தது. இதிலிருந்துதான் நான்கு ஹெலிக்கொப்டரில் கொமாண்டோக்கள் சென்றனர்.

இராணுவத்தினருடன் சண்டையிடுவதற்கு ஆயத்தமாக இருந்ததால் கூடுதல் சிப்பாய்கள் செல்ல வேண்டியதாயிற்று என்றும் 'நியூயோர்க் ரைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

# ஹோஸ்னி முபாரக்கின் காவல் மேலும் நீடிப்பு; சுற்றுலாத்துறை அமைச்சருக்கு 7 வருட சிறை

எகிப்தின் முன்னாள் அதிபர் முபாரக்கின் விசாரணைக் காவலை மேலும் 15 நாள்கள் நீள்டித்து அரசுத் தரப்பு உத்தரவிட்டுள்ளது.

இதற்கிடையில் முபாரக்கின் அமைச்சரவையில் சுற்றுலாத் துறை அமைச்சராக இருந்தவருக்கு ஐந்தாண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

எகிப்தின் முன்னாள் அதிபர் ஹோஸ்னி முபாரக் தற்போது விசாரணைக் காவலில் உள்ளார். அவரும், அவரது இரு மகன்களும் ஏப்ரல் 13ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

முபாரக் தற்போது சினாய் தீபகற்பத்தின் ஷரம் எல் ஷேக் நகரில் சிகிச்சை பெற்று வருகிறார். இந்த நிலையில் அவரது விசாரணைக் காவல் மேலும் 15 நாள்களுக்கு நீடித்து நேற்று அரசுத் தரப்பு உத்தரவிட்டுள்ளது.

இதற்கிடையில் முபாரக்கின் அமைச்சரவையில் சுற்றுலாத் துறை அமைச்சராக இருந்த ஜாகிர் கரானா என்பவர் பல்வேறு ஊழல்களின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

சுற்றுலாத் துறைக்கான உரிமங்களை சட்டவிரோதமாக பலருக்கு அவர் அளித்துள்ளது நிரூபிக்கப்பட்ட நிலையில், நேற்று அவருக்கு ஐந்தாண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

முபாரக்கின் அமைச்சரவையில் உள்துறை அமைச்சராக இருந்த ஹபீப் அல் அட்லி ஊழல் அடிப்படையில் 12 ஆண்டு சிறைத் தண்டனை அனுபவித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தான் பிரதமர் சீனா பயணம்

பாகிஸ்தான் - சீனா இடையே பல்வேறு பொருளாதார மற்றும் பண்பாட்டு ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதற்காக, பாகிஸ்தான் பிரதமர் கிலானி இம்மாதம் 17ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை சீன விஜயத்தை மேற்கொள்கிறார்.

பின்லேடன் கொலைக்குப் பின்னர் அமெரிக்கா உடனான உறவில் சிக்கல் ஏற்பட்டுள்ளதையடுத்து, உடனடியாக கிலானி சீன விஜயத்தை மேற்கொள்வது முக்கியமாகக் கருதப்படுகிறது.



பிரிட்டனின் தென்கிழக்கு லண்டன் நகரில் உள்ள கிங்ஸ்ட்லே நகரில் உள்ள பாடசாலை ஒன்றுக்கு வந்த பிரதமர் டேவிட் கெமரூனை மாணவர்கள் வரவேற்கின்றனர்.

# தாக்குதலின்போது லேடனின் இளைய மகன் தப்பி ஓட்டம்

இஸ்லாமாபாத், மே 12

ஒசாமா பின்லேடன் மீதான தாக்குதலின்போது, அவருடன் இருந்த இரு புதல்வர்களில் இளையவர் மாயமாகிவிட்டார் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

ஒசாமா பின்லேடன் கடந்த 2ஆம் திகதி பாகிஸ்தான் அபோதாபாத்தில் அமெரிக்க இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டார். அப்போது பின்லேடனுடன் அவரது ஒரு மகனும் கொல்லப்பட்டார்.

இதைத் தொடர்ந்து பின்லேடனுடன் அந்த பங்களாவில் தங்கியிருந்த அவரது 3 மனைவிகளையும் பாகிஸ்தான் கைது செய்தது.

அவர்களிடம் விசாரணை நடத்தியபோது, பின்லேடன் இளைய மகன் ஹம்சா பின்லேடன் திடீரென மாயமாகிவிட்டார் என அவர்கள் தெரிவித்தனர். இதை வைத்து பார்க்கும்போது, அமெரிக்க நேவிசீல் படைத் தாக்குதல் நடத்தியபோது அவர் தப்பி ஓடியிருக்கலாம் எனத் தெரிகிறது.

# வெளிநாட்டுச் சுற்றுலாக்கள் செல்ல கியூபா மக்களுக்கு விரைவில் அனுமதி

கியூபா மக்கள் வெளிநாடுகளுக்கு சுற்றுலாப் பயணிகளாக செல்ல, அனுமதிப்பது குறித்து, கியூபா அரசு ஆலோசனை செய்து வருகிறது.

கடந்த 50 ஆண்டுகளாக, கியூபா மக்கள் தங்கள் சொந்த மண்ணில் இருந்து இதரநாடுகளுக்கு சுற்றுலாப் பயணிகளாக சென்று வர முடியவில்லை. கியூபாவில் கொம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி நடைபெறுகிறது.

அங்கு 313 சீரமைப்பு மாற்றம் கொண்டு வர ஆலோசிக்கப்படுகிறது. இந்த சீரமைப்பு மாற்றங்களில் ஒன்றாக தங்கள் நாட்டு மக்கள், அயல்நாடுகளுக்கு சுற்றுலாப் பயணிகளாக சென்றுவரவும் அனுமதிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் அயல் நாடுகளுக்கு செல்ல விரும்பும் கியூபா மக்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கான வேண்டுகோள் மனுவை சமர்ப்பிக்க வேண்டும். இந்த வேண்டுகோள் மனு அரசால் நிராகரிக்கப்படும் நிலை உள்ளது.

1959ஆ ம் ஆண்டு கொம்யூனிஸ்ட் புரட்சி கியூபாவில் ஏற்பட்ட பின்னர், கியூபா அரசில் உயர் அதிகாரத்தில் உள்ளவர்களே அயல் நாடுகள் சென்று வர அனுமதிக்கப்படுகின்றன. கியூபா நாட்டு மக்களுக்காக வீடுகள் வாங்குவது மற்றும் விற்பது திட்டத்தையும் செயல்படுத்த அரசு ஆலாசித்துள்ளது. இந்த ஆண்டு தொடக்கத்தில், கியூபா மக்கள் சுய வேலை வாய்ப்பு நபராக உருவெடுக்க அரசு உரிமம் அளிக்கத் துவங்கியது.

2008ஆம் ஆண்டு பிடல் காஸ்ட்ரோவிடம் இருந்து, ஜனாதிபதி பொறுப்பேற்ற அவரது இளைய சகோதரர் ரவுல் காஸ்ட்ரோ புதிய கொள்கை மாற்றங்களை அறிவித்துள்ளார். ஹவானாவில் நபர் மாநாட்டில் பிடல் காஸ்ட்ரோ தனது சகோதரர் ரவுல் காஸ்ட்ரோ கொள்கைகளுக்கு ஒப்புதல் அளித்தார்.

# பின்லேடன் பதுங்கி இருந்தது எப்படி? பாகிஸ்தான் விசாரணை நடத்துகின்றது

அகமதாபாத், மே 12

பலத்த பாதுகாப்பு உள்ள அபோதாபாத் நகர் பகுதியில் அல்கொய்தா தீவிரவாதத் தலைவர் ஒசாமா பின்லேடன் பதுங்கி இருந்தது எப்படி என்பதை கண்டறியப் பாகிஸ்தான் அரசு விசாரணையை ஆரம்பித்துள்ளது. இந்த விசாரணை அறிவிப்பை பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானி நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அல் குவைதா தீவிரவாதத் தலைவர் ஒசாமா பின்லேடன் இந்த மே மாதம் 2 ஆம் திகதி, அபோதாபாத் நகரில், அமெரிக்கா சிறப்புக் கொமாண்டோக்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். பாகிஸ்தானின் ராணுவ முகாமுக்கு அருகிலேயே பின்லேடன் பதுங்கி இருந்தது அமெரிக்காவுக்கு அதிர்ச்சி ஏற்படுத்தியது.

தீவிரவாதிகளுக்கும் பாகிஸ்தான் அரசுக்கும் தொடர்பு உள்ளது என்றும், பாகிஸ்தான் பாதுகாப்புப் பிரிவு திறமையற்று உள்ளதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்தன. இந்தக் குற்றச்சாட்டுகள் பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானி முற்றிலும் நிராகரித்தார். இந்த புகார்கள் அர்த்தமற்றது என்றும் அவர் கூறினார்.

பின்லேடனுடன் தொடர்புடைய, தீவிரவாத வலைப் பின்னல் குறித்து விசாரணை நடத்துமாறு பாகிஸ்தான் அரசை அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வலியுறுத்தினார். பின்லேடன் நடமாட்டம் குறித்து, பாகிஸ்தான் ராணுவ அதிகாரிகளுக்கு ஏற்கனவே தெரியுமா என்பது குறித்தும் அமெரிக்கா ஆய்வு செய்கிறது.

பின்லேடன் பதுங்குமிடம் குறித்து பாகிஸ்தானுக்கு தெரியாதது குறித்து லெப்டினன்ட் ஜெனரல் ஜாவித் இக்பால் தலைமையில் விசாரணை நடைபெறும் என நாடாளுமன்றத்தில் கிலானி தெரிவித்தார்.

பின்லேடன் அபோதாபாத் நகரில் இருந்தது குறித்து முழு விடயங்களையும் பெறுவோம் என கிலானி நம்பிக்கை தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி
## நாகரத்தினம் நடராசா



அத்தியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி நாகரத்தினம் நடராசா 08.05.2011 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும் பத்மாவதி (கனடா), பத்மினி (பிரான்ஸ்), ரவீந்திரன் (லண்டன்), லலிதா, மீரா (பிரான்ஸ்), சுகுமார் (ஜேர்மனி), சந்திரா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற சற்குணராசா மற்றும் சண்முகராசா (பிரான்ஸ்), தர்மினி (லண்டன்), ஞானசேகரம் (C.T.B.), பாலேஸ்வரன் (பிரான்ஸ்), மாலா (ஜேர்மனி), வசந்தகுமார் (கனடா) ஆகியோரின் மாமியும் காலஞ் சென்றவர்களான பாக்கியம், ராசம்மா, ராசையா, நடராசா மற்றும் மகேஸ்வரி (மலேசியா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ராம் மோகன் (பிரான்ஸ்), ஹரிகரன், விஜயராணி (ஆஸ்திரேலியா), மேகலா (ஆஸ்திரேலியா), ஜானகி (கனடா), நிர்மலா (இந்தியா), நிஷாந்தி (பிரான்ஸ்), பிரியாந்தி (பிரான்ஸ்), கமல் (பிரான்ஸ்), அர்ச்சனா (லண்டன்), திலீப் (லண்டன்), சஞ்சீவன் (லண்டன்), விதுரா, சறா (பிரான்ஸ்), பமிலா (பிரான்ஸ்), மார்க் (பிரான்ஸ்), ரதீஸ் (ஜேர்மனி), ரிதூசன் (ஜேர்மனி), ருக்சன் (ஜேர்மனி), அபினா (கனடா), ராகவி (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் அபிராமி, சௌமியா, பிரியங்கா, பிருந்தன், ரம்மியா, கோபி, மயூரி, திவ்வியபாரதி, சாய்சுரேகா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 12.05.2011 வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 2 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மக்கள்,மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
சு.ஞானசேகரம்(மருமகன்-C.T.B.)
தொ.பே. :021 222 5926

*இல.104/5, அத்தியடி குறுக்கு வீதி,*
*யாழ்ப்பாணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(48,19,20)

# ஐ.நா. நிபுணர் குழுவின் விசாரணைக்கு மறுப்பதால் இலங்கை அரசு எதையோ மறைக்க முயல்கின்றது

**முன்னாள் தலைமை நீதிபதி சச்சர் குற்றச்சாட்டு குற்றச்சாட்டு**



ஐ.நா.குழு இலங்கைக்கு வந்து விசாரணை நடத்த இலங்கை அரசு அனுமதி மறுப்பதன் மூலம், அது எதையோ மறைக்க முயல்கிறது என்று ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி சச்சர் குற்றம் சாட்டியுள்ளார்.

டில்லி தமிழ் மாணவர் அமைப்புக்கள் சார்பில், இலங்கை யுத்தத்தின் இறுதி நிகழ்வுகள் குறித்து ஆராய்ந்த ஐ.நா. பொதுச் செயலருக்கு ஆலோசனை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை தொடர்பான கருத்தரங்கம் நேற்று முன்தினம் டில்லியில் நடைபெற்றது. இந்தக் கருத்தரங்கத்தில் பேசும் போதே அவர் மேற்கண்ட கருத்தை வலியுறுத்தினார்.

அந்தக் கருத்தரங்கில் பேசிய அதேகருத்துக்களைமையப்படுத்தி, பின்னர் பி.பி.ஸி. தமிழோசைக்கு பேட்டியளிக்கையில்:

இலங்கை யுத்தத்தின் இறுதி நிகழ்வுகள் குறித்து ஆராய்ந்த ஐ.நா. பொதுச் செயலருக்கு ஆலோசனை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் செயற்படுமாறு இலங்கை அரசை இந்தியா வலியுறுத்த வேண்டும்.

அதேநேரத்தில், ஐ.நா. உறுப்பினர் என்ற முறையில், ஐ.நா. மன்றத்தை நிராகரிக்கும் உரிமை யாருக்கும் இல்லை என்பதை இலங்கை அரசுக்குப் புரிய வைக்க வேண்டிய பொறுப்பு இந்தியாவுக்கு இருக்கிறது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் ஆயுத ரீதியிலான தலையீடுகளுக்கு, அமெரிக்காவின் நிர்ப்பந்தத்தால் இந்தியா ஆதரவு கொடுக்கும் நிலையில், இலங்கையில் மனித உரிமை மீறல்கள் நடைபெற்றிருப்பதாக ஐ.நா. குழு அறிக்கை கூறுவதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று அவர் மேலும் வலியுறுத்தினார்.

இந்த விடயத்தில் இந்தியா மென்மையாக நடந்துகொள்வதில் என்ன நியாயம் இருக்கிறது? இலங்கைக்குப் பாகிஸ்தான் ஆயுதம் கொடுக்கிறது என்பதற்காகவா? அப்படியே இருந்தாலும் கூட, அதைப்பற்றிக் கவலைப்படும் அளவுக்கு இந்தியா பலவீனமான நாடு அல்ல.

அதற்கு பலம் இருக்கிறது. இலங்கையை இந்தியா பொம்மையாகக் கருதவில்லை. நெருங்கிய அயல் நாடாக, பல விடயங்களில் ஒன்றுபட்ட கலாசாரங்களைக் கொண்ட நாடாகவே கருதுகிறோம் என்றார் சச்சர்.

இந்த விடயத்தில், தமிழக அரசியல் கட்சிகள், குறிப்பாக தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. ஆகிய இரு கட்சிகள், தேர்தல் நேரத்தில் மத்திய அரசை நிர்ப்பந்திக்கத் தவறிவிட்டன என்றும் அவர் கவலை தெரிவித்தார்.

அந்தக்கருத்தரங்கில், சென்னை பல்கலைக்கழகப் பேராசிரியர் மணிவண்ணன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலர் டி. ராஜா, லோக்ஜனசக்தி கட்சித் தலைவர் ராம்விலாஸ் பாஸ்வான், சிபிஐ எம்எல் சார்பில் ஸ்வபன் முகர்ஜி ஆகியோர் பங்கேற்றார்கள்.

(வ)

## இந்தியப் பத்திரிகையாளருக்கு அமெரிக்காவில் பாராட்டு

நியூயோர்க், மே 12

இந்தியாவைச் சேர்ந்த இரு பத்திரிகையாளர்களுக்கு அவர்களின் அர்ப்பணிப்பான சேவையைப் பாராட்டி அமெரிக்காவில் கௌரவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் உள்ள நியூயோர்க் நகரைச் சேர்ந்த இந்தியப் பத்திரிகையாளர்கள் சுமன் குஹா மஸம்தார், பிரகாஷ் எம்.சுவாமி. இந்த இருவர் உட்பட 7 பத்திரிகையாளர்களை நியூஜெர்சி சட்டசபை பாராட்டிக் கௌரவித்தது. இதற்கான தீர்மானத்தை சட்டசபை துணை சபாநாயகர் உபேந்திரசிவிகுலா கொண்டு வந்தார்.

சபாநாயகர் ஷீலா ஒய் ஆலிவர் மற்றும் உறுப்பினர்கள் பாராட்டிப் பேசினார்கள். பின்னர் அதற்கான தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

(வ)

# ஐ.நா. அறிக்கை நிரூபிக்கப்பட்டால் இந்தியா இலங்கை அரசுக்குக் கண்டனம் தெரிவிக்கும்



**மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி**

சென்னை, மே 12

ஐ.நா. செயலரால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கைப்படி இலங்கை அரசு தவறு செய்திருக்கிறது என்று நிரூபிக்கப்பட்டால் இந்தியா இலங்கை அரசுக்குக் கண்டனம் தெரிவிக்கும் - என்று மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறியவை வருமாறு -

இலங்கையில் ஈழத்தமிழர்கள் மீது, மனித உரிமை மீறல் நடந்துள்ளது என ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை தாக்கல் செய்துள்ளது. இது நிரூபிக்கப்பட்டால், மத்திய அரசு தனது கண்டனத்தை இலங்கை அரசுக்குத் தெரிவிக்கும்.

இந்தியாவைப் போல இலங்கையும் சுதந்திர நாடாகும். ஏனைய நாடுகளின் பிரச்சினையில் தலையிட முடியாது. இலங்கை அரசு தவறு செய்திருக்கிறது என்று நிரூபிக்கப்பட்டால் இந்தியா தனது கண்டனத்தைத் தெரிவிக்கும். தமிழக மீனவர்களைக் காப்பாற்ற மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது - என்றார். (வ)



டில்லியில், செஷ் ரிபப்ளிக்கின் செனட் தலைவர் மிலன், சபாநாயகர் மீரா குமாரை செஷ் ரிபப்ளிக்கின் செனட் தலைவர் மிலன், டில்லியில் சந்தித்துப் பேசிய போது...

# தூத்துக்குடி - கொழும்பு பயணிகள் கப்பல் நேற்று சேவையை ஆரம்பிக்கவில்லை

**இறுதிக் கட்டப் பணிகள் இன்னும் நிறைவடையவில்லையாம்**



இந்தியாவுக்கும் கொழும்பிற்கான கப்பல்சேவையை ஆரம்பிப்பதற்கான இறுதிக் கட்டப் பணிகள் இன்னமும் நிறைவடையாததால் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட இருந்த கப்பல் சேவை இடம் பெறவில்லை என்று தூத்துக்குடி துறைமுக நிதியத் தலைவர் ஏ.சுப்பையா பி.பி.ஸி. செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளார்.

யுத்த சூழ்நிலையால் தடைப்பட்ட குறித்த கப்பல் சேவை யுத்தம் முடிவடைந்த பின் ஆரம்பிப்பதாகத் தீர்மானிக்கப்பட்ட போதும் தீர்மானிக்கப்பட்ட திகதிகள் பின்தள்ளப்பட்டுச் சென்று கொண்டிருக்கிறன. இந்த நிலையில் கப்பல் சேவையின் இறுதிக் கட்டப் பணிகள் இன்னமும் நிறைவடையாத காரணத்தால் திட்டமிட்டபடி நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்படவில்லை.

அத்துடன், படகுச் சேவை இரண்டு வாரகாலத்துள் ஆரம்பிக்கப்படக்கூடிய சாத்தியக்கூறு இல்லை எனவும் கூறினார்.

மேலும் கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்கான பணிகள் நிறைவுற 15 தினங்கள் தேவைப்படுகின்றன என்று அவர் தெரிவித்துள்ளார்.

பயணிகள் மற்றும் பயணிகளின் பொதிகளை ஊடுகதிரினூடாகப் பரிசோதிக்கும் இயந்திரங்கள் பொருத்துவதற்குக் கால தாமதம் ஏற்படுவதாகவும், உட்கட்டமைப்பு வசதிகளும் தாமதமடைகின்றன எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து ரயில் நிலையத்துக்கானதும், பஸ் நிலையத்துக்கானதுமான பாதைகள் இன்னமும் திருத்தப்பட்டு வருகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார். (வ)

# போபால் வழக்கில் சி.பி.ஐ. மனு உச்ச நீதிமன்றத்தால் நிராகரிப்பு

டில்லி, மே 12

போபால் விஷவாயு தொடர்பான வழக்கில், குற்றவாளிகளுக்கு அதிக தண்டனை வழங்கக் கோரும் சி.பி.ஐ. மனுவை உச்ச நீதிமன்றம் நிராகரித்தது.

1984ஆம் ஆண்டு மத்தியப் பரதேச மாநிலம் போபாலில் யூனியன் கார்பைட் நிறுவனத்தில் ஏற்பட்ட விஷவாயுக் கசிவில் ஆயிரக்கணக்கில் பலர் உயிரிழந்தனர். பலருக்கு உடல் நல பாதிப்பு ஏற்பட்டது. இந்த விவகாரத்தில் யூனியன் கார்பைட் நிறுவனம் பாதுகாப்புத் தொடர்பான விடயத்தில் அலட்சியம் காட்டியதால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று கூறி வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்கு விசாரணை முடிவில் ஏறத்தாழ 12 ஆண்டுகளுக்குப் பின்னர் 1996ஆம் ஆண்டு தீர்ப்பு வழங்கப்பட்டது. அதில் 8 பேர் முக்கிய குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டது.

இந்தநிலையில், அதில் குறிப்பிடப்பட்ட குற்றவாளிகள் 7 பேருக்குக் கடுமையான தண்டனை வழங்க வேண்டும் எனவும், இந்த வழக்கை மீண்டும் எடுத்து நடத்த வேண்டும் எனவும் கேட்டு, உச்ச நீதிமன்றத்தில் மத்தியப் பிரதேச அரசு மற்றும் சி.பி.ஐ., தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது. ஆனால், இந்த மனுவை உச்சநீதிமன்றம் நேற்று நிராகரித்து விட்டது.

(வ)

# அ.தி.மு.கவுக்கே வெற்றி வாய்ப்பு; கருத்துக் கணிப்பில் தகவல்

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் அ.தி.மு..க கூட்டணிக்கு வெற்றிவாய்ப்பு அதிகம் இருப்பதாக கருத்துக்கணிப்புக்கள் மூலம் அறிவிக்ஜகப்பட்டுள்ளது.

சி.என்.என்.-ஐ.பி.என். கணிப்பின்படி அ.தி.மு.க. கூட்டணிக்கு 120 முதல் 132 இடங்களும், தி.மு.க. கூட்டணிக்கு 102 முதல் 114 இடங்களும் கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அ.தி.மு.க. கூட்டணிக்கு 46 சதவீத வாக்குகளும், தி.மு.க. கூட்டணிக்கு 44 சதவீத வாக்குகளும் கிடைக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

தமிழகம், புதுச்சேரி, கேரளம், மேற்கு வங்கம், அசாம் ஆகிய 5 மாநிலங்களின் பேரவைத் தேர்தல் முடிவுகள் நாளை வெள்ளிக்கிழமை வெளியாக [illegible] தொலைக் [illegible] வாக்குப்பதிவுக்குப் பின்னர் நடத்திய கணிப்பு முடிவுகள் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு வெளியிடப்பட்டன.

கடந்த தேர்தலை ஒப்பிடும்போது தி.மு.க. கூட்டணி ஒரு சதவீத வாக்கை இழந்திருப்பதாகவும், அ.தி.மு.க. கூட்டணிக்கு 6 சதவீத வாக்குகள் அதிகரித்திருப்பதாகவும் சி.என்.என். - ஐ.பி.என். தெரிவித்துள்ளது.

ஹெட்லைன்ஸ் டுடே- ஓ.ஆர்.ஜி. நிறுவனங்கள் இணைந்து நடத்திய கணிப்பில், தி.மு.க. கூட்டணி 115- 130 தொகுதிகளிலும், அ.தி.மு.க. கூட்டணி 105- 120 தொகுதிகளிலும் வெற்றி பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சி.வி.ஜி. நியூஸ்- சி வோட்டர் இணைந்து நடத்திய கணிப்பில், தமிழகத்தில் 234 பேரவைத் தொகுதிகளில் அ.தி.மு.க. கூட்டணிக்கு 168 முதல் 176 இடங்களும், தி.மு.க. கூட்டணிக்கு 54 முதல் 62 இடங்களும் கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்பதை எளிதில் நிராகரித்து விட முடியாது

## உண்மைத் தகவல்களை வெளியிட்ட வைத்தியர்களுக்கும் வாய்ப்பூட்டு

126. பின்னர் பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட எண்ணிக்கைகள் மாறுபட்டதாக இருந்தபோதிலும், வேண்டுமென்றே அவை குறைவாகவே வைக்கப்பட்டிருந்ததோடு, வலயத்தில் தொழில்புரிந்த சில அரச ஊழியர்கள் வேறு கணக்குகளை அல்லது தேவைக்கான வேறு மதிப்பீடுகளை வழங்கிய போது அவர்கள் கண்டிக்கப்பட்டனர். உதாரணமாக, 2009 பெப்ரவரி 2 ஆம் திகதி, இரண்டாவது யுத்த சூன்ய வலயத்தில் இருந்து உதவி அரச அதிபர், முல்லைத்தீவு மாவட்டத்தில் அச்சந்தர்ப்பத்தில் சுமார் 81 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த மொத்தம் சுமார் 3 லட்சத்து முப்பது ஆயிரம் பேர் இருக்கின்றனர் என்று பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு நிலைமை பற்றிய அறிக்கை ஒன்றை அனுப்பியிருந்தார். ஆயினும் மார்ச் 18 ஆம் திகதி 3 லட்சத்து 30 ஆயிரம் என்ற அந்தக் கணக்கு 'விதிகளுக்குக் கட்டுப்படாததும் அடிப்படையற்றதும்' எனவும். 'குறிப்பாக உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் கணக்குகள் தொடர்பாக எந்தவொரு மூலத்துக்கும் தவறான தகவலை வழங்கியதற்காக' அவருக்கு எதிராக ஒழுக் காற்று நடவடிக்கை எடுக்க அரசு 'விருப்பத்துக்கெதிராக நிர்ப்பந்திக்கப்படும்' எனவும் உதவி அதிபருக்கான பதிலில் தேசத்தைக் கட்டியெழுப்பல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டிருந்தார்.

(48)

127. 2009 பெப்ரவரி இறுதியில், இடம்பெயர்ந்தோரின் குடிசைகளைக் கணக்கெடுத்து மற்றும் வேர்ல்ட்வியூ செய்மதிப் படங்களை ஒரு பகுதியாக வைத்து மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின்படி, தமிழீழ விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டுப் பகுதியில் 267,618 பொதுமக்கள் இருகின்றனர் எனக் கருதுவதாக ஐ.நா. நாட்டுக்கான குழு அரசுக்கு அறிவித்தது. ஏப்ரல் கடைசியில், ஐ.நா.வின் மதிப்பீடுகளின்படி தொடர்ந்தும் 127,177 பொதுமக்கள் சிக்குண்டிருந்தனர் என்ற போதிலும், அக்காலப் பகுதியில் 10,000 பேர்கள் மாத்திரமே எஞ்சியிருந்தனர் என அரசு கூறியது. இறுதியாக அப்பிரதேசத்தில் இருந்து வெளியேறிய மற்றும் மெனிக்பாம் அத்துடன் வேறு முகாம்களில் குடியமர்த்தப்பட்ட இடம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை சுமார் 290,000 ஆக இருந்தது. இவ்வெண்ணிக்கைகளுக்கு இடையிலான வேறுபாட்டினைப் போதியளவு அரசு விளக்கவில்லை.

128. அரசின் குறைவான மதிப்பீட்டின் விளைவாக, வன்னிக்கு உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்பட்ட உணவுப் பொருள்கள் நிஜத்தேவையை விட மிகக் குறைவாக இருந்ததால், பட்டினிச் சாவு மற்றும் போசாக்கின்மை அங்கு பரவலாகக் காணப்பட்டன. அதே போன்று, வன்னிப் பிரதேசத்துக்கு அனுமதிக்கப்பட்ட மருந்துவகைகள் ஷெல் வீச்சுக் காரணமாக ஏற்பட்ட காயங்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்கு கொஞ்சம் கூடப் போதியதாக இருக்கவில்லை. மார்ச் 2010 இல் காயமடைந்த தோர் எண்ணிக்கை அதி கரித்தபோது, தேவைப்படும் மருந்து வகைகள் இல்லாதது பெரும் கஷ்டங்களுக்கும் தேவையற்ற உயிரிழப்பு களுக்கும் வழிகோலியது. பிராந்திய வைத்திய சேவை தொடர்ந்து மருந்து பற்றாக்குறை பற்றி கடிதங்கள் மற்றும் தொலைக்காட்சியினூடாகவும் தெரிவித்தபோது, ஊடகங்களுடன் பேசுவதைப் புகார்செய்வதை நிறுத்துமாறும் அல்லது அவர்கள் தண்டிக்கப்படுவார்கள் எனவும் அவர்களைச் சுகாதார அமைச்சு எச்சரிக்கை செய்தது.

129. 2009 மார்ச் 19 ஆம் திகதி, முள்ளிவாய்க்கால் ஆஸ்பத்திரியில் தேர்ச்சி பெற்ற மயக்க மருந்து கொடுக்கும் வைத்தியர் இல்லாததால், கடுமையான வலி தடுப்பு மருந்துகளும் நரம்புக்குள் செலுத்தும் திரவங்களையும் மாத்திரமே அனுப்பமுடியும் எனச் சுகாதார பராமரிப்பு மற்றும் போசாக்கு அமைச்சின் செயலாளர் வைத்தியர்களுக்கான பதிலில் தெரிவித்தார். இந்திய உயர் ஸ்தானிகருக்கு அல்லது தமிழ்நாடு முதலமைச்சருக்குக் கடிதங்களை அனுப்பி இராஜதந்திர மரபு முறைகளை மீற வேண்டாமென்றும் அப்படி மீறினால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அந்தக் கடிதத்தில் வைத்தியர்கள் எச்சரிக்கப்பட்டார்கள்.

**ஐ.நா. செயலாளரிடம் நிபுணர் குழு வழங்கிய அறிக்கை**
**பகுதி - 12**

130. மே 16 ஆம் திகதி வைத்தியர்கள் யுத்த வலயத்தில் இருந்து வெளியேறியதும் அவர்கள் தடுத்துவைக்கப்பட்டு பல மாதங்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். 2009 ஜூலை ஆரம்பத்தில் வைத்தியர்கள், பத்திரிகையாளர் மாநாடொன்றை நடத்தி, யுத்தத்தில் உண்மையிலேயே சிலரே மரணித்ததாகவும் காயமடைந்ததாகவும் அதுபற்றி பொய்சொல்ல தமிழீழ விடுதலைப் புலிகள் தம்மை நிர்ப்பந்தப்படுத்தினர் எனவும் அங்கு அவர்கள் கூறினர். இந்த மறுப்புரை தாம் தொடர்ந்து வன்னியில் இருந்த போது வழங்கிய நேர்காணல்கள், இலத்திரனியல் தபால் மற்றும் விடுத்த பகிரங்க அறிக்கைகளுடன் மாறுபட்டதாக இருந்தது. அரசு அவர்களை அழுத்தத்துக்குள்ளாக்கியதாகவும் இந்த மறுப்புரைகள் அவர்கள் முன்னர் வழங்கிய அறிக்கைகளின் உண்மையைப் பாதிக்காது எனவும் இந்தக் குழு நம்புகிறது.

(49)

பொதுமக்கள் எண்ணிக்கை மற்றும் அவர்கள் தேவைகள் பற்றிய 1 ஆம் நிலைத் தகவலைக் கைவசம் வைத்திருந்த போதிலும், இலங்கை அரசு பொதுமக்கள்மீது மேலும் அழுத்தத்தை ஏற்படுத்துவதற்காக வன்னிக்கான பொருள்களின் விநியோகத்தைக் குறைப்பதற்கான வியூகத்தின் ஓர் அங்கமாக மிகவும் குறைவான எண்ணிக்கை பற்றிய மதிப்பீட்டையே பிரயோகித்தது. இதற்காக மதிப்பீடுகள் குறைக்கப்பட்டன என்பதை பின்னர் சிரேஷ்ட அரசு அதிகாரியொருவர் ஒப்புக்கொண்டார். யுத்தத்தின் இறுதிக்கட்டங்களின் போது அரசு பொதுமக்களை தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைத்துக் காட்டியதையும் குறைவான எண்ணிக்கைகள் குறிக்கிறது.

### உ. இறந்த பொதுமக்களின் எண்ணிக்கை

132. யுத்தத்தின் இறுதிக் கட்டத்தின் போது வன்னியில் இறந்த அல்லது காயமடைந்த பொதுமக்கள் பற்றிய உறுதியானதொரு கணிப்பு இல்லை. உண்மையானதொரு கணிப்பை மேற்கொள்வதைப் பல காரணிகள் சிரமமாக்கியுள்ளன: (அ) யுத்தப் பிரதேசத்தில் இருந்த பொதுமக்கள் எண்ணிக்கை 330.000 ஆக இருந்திருக்கலாம் என்ற போதிலும் அந்த எண்ணிக்கை நிச்சயமற்றதாகும், (ஆ) பிரிக்கும் செயற்பாட்டில் வெளி[illegible] காரணமாக வன்னியில் இருந்து வெளியே வந்தவர்களின் சரியானதொரு கணிப்பு இல்லாதமை, (இ) இறுதிக்கட்டத்தின் போது கட்டாயமாக ஆள்சேர்த்தல் காரணமாக சிக்கலாகிய நிலைமையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள் பற்றிய எண்ணிக்கை பற்றிய நிச்சயமற்ற தன்மை மற்றும் பல பொதுமக்கள் தாம் விழுந்த இடத்திலேயே அவர்கள் மரணம் பற்றிய எந்தவித அவதானிப்பும் பதிவும் இன்றி அவர்கள் புதைக்கப்பட்டமை.

133. வைத்தியர்களால் சேகரிக்கப்பட்ட காயமடைந்த மற்றும் மரணமாகியவர்கள் பற்றிய, ஆஸ்பத்திரிகளால் மற்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலகுகளினால் ஒத்துப்பார்க்கப்பட்ட புள்ளிவிவரங்களின் அடிப்படையில் சில மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இறுதிக்கட்டத்தின்போது சுமார் 40,000 சத்திரசிகிச்சை நடவடிக்கைகளையும் 5,000 அறுவைச் சிகிச்சை மூலம் உறுப்புகள் அகற்றப்பட்டதையும் ஒரு மதிப்பீடு கொண்டுள்ளது. காயம் மற்றும் மரணங்களுக்கிடையிலான 1:2 அல்லது 1:3 என்ற விகிதாசாரத்தின்படி பார்த்தால் மிக அதிகளவிலான பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை அது குறிக்கக்கூடியதாகவுள்ளது. ஏனையவர்கள் இந்த மதிப்பீட்டை 75,000 எனக் குறிப்பிடுகிறார்கள், அதாவது யுத்தப் பிரதேசத்தில் இருந்து வெளியாகியவர்களின் எண்ணிக்கை (சுமார் 290,000) மற்றும் யுத்த வலயத்தில் இருந்ததாக மதிப்பீடு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை (யுத்த சூன்ய வலயத்தில் ஜனவரி முதல் இருந்த 330,000 அத்துடன் அதற்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதேசங்களில் இருந்து வெளியேறிய சுமார் 35,000).

134. ஐக்கிய நாடுகள் சபையின் நாடு சார்ந்த குழுவே தகவலின் ஒரே மூலமாக இருந் தது பகிரங்கப்படுத்தப்படாத ஆவணமொன்றில், கணிப்பு நடவடிக்கைகள் கஷ்டமாகும் வரை ஓகஸ்ட் 2008 முதல் 2009 மே 13 ஆம் திகதிவரை மொத்தம் 7,721 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் 18,479 பேர் காயமடைந்துள்ளதாகவும் அது மதிப்பீடு செய்துள்ளது. 2009 பெப்ரவரி ஆரம்பத்தில், தகவலுக் கான பிரவேசம் கஷ்டமாக இருந்த போதிலும், காயமடைந்த மற்றும் இறந்தவர்கள் எண்ணிக்கையைத் தொகுக்கும் செயற்பாடொன்றை ஐ.நா. ஆரம்பித்தது. இந்தச் செயற்பாட்டின்போது ஆர். டி.எச்.எஸ். இடம் கிடைக்கும் கணக்கு விவரங்களை அது அடிமட்டக் கோடாக எடுத்துக்கொண்டதோடு, உறுதிப்படுத்த முடியாத அல்லது தமிழ்நெட் மற்றும் வன்னிக்கு வெளியேயிருந்து வந்த அரசின் கணிப்புக்கள் போன்ற பக்கச்சார்பான மூலங்களில் இருந்து கிடைத்த தகவல்கள் நிராகரிக்கப்பட்டன.

(50)

135. ஐ.நா. சபையின் நாடுசார்ந்த குழுவினால் கணிக்கப்பட்ட எண் ஓர் ஆரம்பத்தை வழங்குகிறது என்ற போதிலும் பல காரணங்களுக்காக அது மிகக்குறைவாக இருந்தது. முதலாவதாக, தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுபாட்டுப் பிரதேசங்களில் செயற்பட்ட அவதானிப்பாளர்கள் வலைப்பின்னல் ஊடாக நிஜமாகவே அவதானிக்கப்பட்ட காயமடைந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பற்றிய விவரத்தில் மாத்திரம் அது தங்கியிருக்கிறது. இப்படிப்பட்ட பலர் அவதானிக்கப்படாதிருக்கலாம். இரண்டாவது, ஐ.நா. மே 13 ஆம் திகதி கணக்கெடுப்பதை நிறுத்திய பின்னர், காயமடைந்த மற்றும் இறந்த பொது மக்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்திருக்கலாம். ஷெல் வீச்சின் தீவிரத்தன்மை காரணமாக பல பொதுமக்கள் அவர்கள் இறந்த இடத்திலேயே விட்டு விடப்பட்டதோடு அவை பதியப்படவோ, ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்படவோ அல்லது புதைக்கப் படவோ இல்லை. இதனால், உண்மையிலேயே மொத்த எண்ணிக்கை ஐ.நா. வின் கணிப்பை விட மிகஅதிகமாயிருக்கும்.

136. அரசிடம் பரிந்து கேட்டுக் கொள்ளும்போது ஐ.நா. காயமடைந்த மற்றும் இறந்தவர்களின் கூடிய எண்ணிக்கையைக் குறிப்பிட்டதோடு, அதன் குறிப்பான மதிப்பீடுகளை என்றுமே பகிரங்கப்படுத்தவில்லை. ஐ.நா. வழங்கிய கணக்குகளை, அவை கற்பனை செய்யப்பட்டவை எனவும் அது ஐ.நா.வின் காரியமல்லவென்றும் அரச அதிகாரிகள் கடுமையாக அக்கணிப்புக்களைச் சர்ச்சைக்குட்படுத்தினர். பகிரங்கமாக யுத்தத்தினால் பொதுமக்களுக்கு ஏற்பட்ட 'பலத்தசேதம்' பற்றி அல்லது காயமடைந்தவர்கள் மற்றும் இறந்தவர்களின் எண்ணிக்கை 'ஏற்றுக்கொள்ள முடியாத அளவுக்கு' அதிகமாக இருந்தது என ஐ.நா. குறிப்பிட்ட போதிலும் உண்மையான எண்ணிக்கையை சரி பிழை பார்க்க முடியவில்லை. குறிப்பான கணிப்புக்களை வழங்குவதில்லை என்ற முடிவு பொதுமக்கள் காயமடைந்தது மற்றும் மரணித்தது பற்றிய செய்தி அறிக்கை விடுப்பதை முக்கியத்துவமற்றதாக்கி விட்டது.

ஆயினும், ஜனவரி 20 ஆம் திகதி முதல் அநேகமாக யுத்த சூன்ய வலயங்களினுள் 2,800 பொதுமக்கள் கொல்லப்பட்டும் 7,000 க்கும் அதிகமானோர் காயமடைந்துமிருக்கலாம் என மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் பகிரங்கமாக அறிவித்த 2009 மார்ச் 13 ஆம் திகதி வரை இந்த நிலைப்பாடு பேணப்பட்டு வந்தது.

137. யுத்தத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட ஆய்வுகளின்படி, தம் சொந்தங்களின் மரணம் பற்றி அறிவிப்பவர்களின் எண்ணிக்கை அதிகமாவுள்ளது. பல நம்பகமான மூலங்களின் மதிப்பீட்டின்படி 40,000 வரையிலான பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாம். யுத்தம் முடிவடைந்து இரண்டு வருடங்கள் கழிந்த பின்பும், பொதுமக்கள் மரணம் பற்றிய ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய கணிப்பு இல்லை என்ற போதிலும், இத்தருணத்தில் 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்பதை நிராகரிக்க முடியாது எனப் பல மூலங்களின் தகவல் குறிப்பிடுகிறது. பாதிக்கப்பட்ட அனைவர் பற்றி இனங்காண்பதற்கும் கொல்லப்பட்ட பொதுமக்கள் பற்றிய சரியானதொரு கணக்கைப் பெறுவதற்கும் உரியதொரு புலனாய்வு மாத்திரமே வழிவகுக்கும்.

(51)

### (ஊ) யுத்த வலயத்துக்கு வெளியே மற்றும் பின்னர் நடந்தேறிய சம்பவங்கள் தொடர்பான நம்பத்தகு குற்றச்சாட்டுக்கள்

138. வன்னி யுத்தத்தில் பிழைத்த பொதுமக்களின் இக்கட்டுநிலை அரச கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசங்களுக்குச் சென்றதும் முடிவுக்கு வரவில்லை. வன்னியிலிருந்து வெளியேறும் பெருந்திரளான மக்களை வர வேற்கத் தான் தயார் என அரசு 2009 ஜனவரியில் இருந்தே அறிவித்திருந்த போதிலும், பெருந்திரளான மக்கள் வெளியே வந்தபோது அதற்கான போதிய வசதியினை அரசு ஏற்படுத்தியிருக்கவில்லை என்பதோடு, அதனைச் சமாளிப்பதற்கும் கஷ்டப்பட்டது. பொதுவாக மனிதாபிமான தேவைகள் மற்றும் இடம்பெயர்ந்தவர்களின் நலனைவிட பாதுகாப்பு விடயங்களுக்கே அரசு முன்னுரிமை வழங்கியது.

*(வளரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19 வயதினருக்கான உதைபந்தாட்டம்; மானிப்பாய் இந்து அணி சம்பியன்

யாழ்ப்பாணம், மே 12

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான பெரு விளையாட்டுக்களில் 19 வயதுப் பிரிவின் கீழ் ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி சம்பியன் ஆனது.

நேற்றுக் காலை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

முதல்பாதி ஆட்டம் ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாத நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இடைவேளை முடிவடைந்து இரண்டாம்பாதி ஆட்டம் ஆரம்பமானபோது இரு அணியினரும் தத்தமது அணி வெற்றிபெற வேண்டும் என்ற நோக்கோடு உற்சாகமாகக் களம் இறங்கினர்.

இதனால் ஆட்டம் சூடு பிடித்தது.இரு அணிகளும் தமது அணிக்காகக் கோல்கள் அடிக்க வேண்டும் என்ற நோக்கோடு எதிர் அணியினரில் கோல் பரப்பினுள் நுழைந்து கோல் அடிக்க முயற்சிகள் மேற்கொண்ட போதும்கோல் காப்பாளர்களால் தடுக்கப்பட்டது.இதன்போது மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியினருக்கு தண்டனை உதை ஒன்று கிடைக்கப் பெற்றது. அதனைக் கோல் அடித்ததன் மூலம் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது.



இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணி வீரர்கள் தங்களது அணிக்காக கோல்கள் பெற எடுத்த முயற்சிகள் அனைத்தும் வீணானது.

இதனால் ஆட்ட முடிவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரியை வெற்றிகொண்டது.(ம-23)

## யாழ். இந்து மகளிரிர் கல்லூரியில் சதுரங்கப் போட்டி

யாழ்ப்பாணம், மே 12

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகளில் 19 வயதுப் பிரிவு ஆண், பெண்களுக்கான சதுரங்கப்போட்டி எதிர்வரும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

(ம-23)

## இன்றைய அரையிறுதி

யாழ்ப்பாணம், மே 12

பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவையொட்டி மாவட்ட மட்டத்தில் நடத்திவந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இரண்டாவது அரையிறுதி ஆட்டம் இன்று வியாழக்கிழமை பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் பி.ப.4.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதில் ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

(ம-23)

## வடமராட்சி வலயத்தில் மரதன் ஓட்டத்தில் வெற்றிபெற்றோர்

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான 21 கிலோ மீற்றர் மரதன் ஓட்டப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தப் போட்டியில் ஆண்கள் பிரிவில் வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி மாணவன் ம.மாதவன் முதலாமிடத்தையும் தொண்டமனாறு வீ.பி.ம.வி. மாணவன் ஜெ.யோகராஜ் இரண்டாமிடத்தையும் வெற்றிலைக்கேணி ம.வி.மாணவன் சு.நாகேஸ்வரன் மூன்றாமிடத்தையும் அல்வாய் வடக்கு றோ.க.த.க.பா. மாணவன் யோ. ஸ்ரான்லி நான்காமிடத்தையும் தொண்டமனாறு வீ.பி.ம.வி. மாணவன் ச.சுதர்சன் ஐந்தாமிடத்தையும் பெற்றுள்ளனர்.

பெண்கள் பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவி இ.நளாயினி முதலாமிடத்தையும் அதேபாடசாலை மாணவி ப.லிப்பின்ஜெரீனா இரண்டாமிடத்தையும் பருத்தித்துறை சென்.தோமஸ் றோ.க.பெண்கள் பாடசாலை மாணவி எம். மேரி கனிஸ்ரலா நான்காமிடத்தையும் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி மாணவி சி.டிலேசனா நான்காமிடத்தையும் அல்வாய் சிறீலங்கா வித்தியாலய மாணவி ஏ.அருந்ததி ஐந்தாமிடத்தையும் பெற்றுள்ளனர்.

இந்தப் போட்டியில் முதல் ஐந்து இடங்களைப் பெற்ற வீரர்களும் வீராங்கனைகளும் மாகாண மட்ட மரதன் ஓட்டப் போட்டியில் கலந்து கொள்வதற்கான தகுதியைப் பெற்றுள்ளனர். (எ-190)

## குருநகர் பாடும்மீன், ஞானமுருகன் இருவேறு ஆட்டங்களில் வெற்றி

யாழ்ப்பாணம், மே 12

பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவையொட்டி மாவட்ட மட்டத்தில் நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் ஆட்டம் ஒன்றில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்றது.

கடந்த வியாழக்கிழமை பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை யங் ஹென்றீசியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி மோதியது.

ஆட்டம் முடிவில் இரு அணியினரும் தலா இரண்டு கோல்களைப் பெற்றமையால் ஆட்டம்சமநிலையில் முடிவுற்றது.

வெற்றிதோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள்வழங்கப்பட்டன.

இதில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகம் தன்னை எதிர்த்து விளையாடிய யங் ஹென்றீசியன் விளையாட்டுக் கழக அணியை 4:2 என்ற கோல் கணக்கில் வென்றது.

இதேவேளை, கடந்த திங்கட்கிழமை பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் ஞான முருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி எதிர்த்து விளையாடிய ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணியை 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது.(த-23)

## பிரதேச செயலகங்களுக்கிடையிலான கபடிப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மே 12

பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மாவட்ட மட்ட ஆண், பெண் இருபாலாருக்குமான கபடிப் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை சாவகச்சேரி வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (ம-23)

# கொக்குவிலில் மென்பந்தாட்டம்; ஊரெழு றோயல் கிண்ணம் சுவீகரித்தது

யாழ்ப்பாணம், மே 12

கொக்குவில் ஐக்கிய விளையாட்டுக்கழகம் அமரர் ப.சச்சிநாதன் ஞாபகார்த்தமாக இ.ச.பே. நாகரத்தினம் சக நிறுவனத்தின் அனுசரணையோடு 6 பேர் கொண்ட 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்துச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் சம்பியன் ஆனது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் திருநெல்வேலி முத்துத்தம்பி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் மோதியது.



நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற திருநெல்வேலி முத்துத் தம்பி விளையாட்டுக்கழகம் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

திருநெல்வேலி முத்துத் தம்பி விளையாட்டுக்கழகம் 5 பந்துப் பரிமாற்றம் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 54 ஓட்டங்களைப் பெற்றது.

லவன் 20 ஓட்டங்களையும் அசோக் 12 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

55 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்குக் களம் இறங்கிய ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் 5 பந்துப் பரிமாற்றம் நிறைவில் மூன்று இலக்குகளை இழந்து 56 ஓட்டங்களைப் பெற்றது.

பிரதாப் ஆட்டமிழக்காமல் 30 ஓட்டங்களையும் மதன் ஆட்டமிழக்காமல் 18 ஓட்டங்களையும் தமது அணிசார்பாகப் பெற்றுக் கொடுத்தனர்.

ஆட்டநாயகனாக ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணித் தலைவர் பிரதாப் தெரிவு செய்யப்பட்டார்.ஆட்டத் தொடர் நாயகனாக ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக வீரன் சுந்தர் தெரிவு செய்யப்பட்டார்.

பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில் நந்தனும் சிறப்பு விருந்தினர்களாக சண்வாமதேவன், எஸ். வி. ஆறுமுகசாமி, அ.ஆனந்தராசா, நா.விக்கினேஸ்வரன், வே. உருத்திரேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(ஐ-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
12 மே 2011 வியாழக்கிழமை

## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை (வ-து)
### 89 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழா போட்டிகளுக்கான நேர அட்டவணை

| தொ. இல | நிகழ்வுகள் | காலம் |
|---|---|---|
| 01 | சைக்கிள் ஓட்டம் ஆண் | 14/05/2011 சனிக்கிழமை காலை 06.00 மணி |
| 02 | சைக்கிள் ஓட்டம் பெண் | 14/05/2011 சனிக்கிழமை காலை 06.15 மணி |
| 03 | 1500M ஓட்டம் ஆண்/பெண் | 14/05/2011 சனிக்கிழமை காலை 09.00 மணி |
| 04 | 100M ஓட்டம் ஆண்/பெண் | 14/05/2011 சனிக்கிழமை காலை 09.30 மணி |
| 05 | 200M ஓட்டம் ஆண்/பெண் | 14/05/2011 சனிக்கிழமை காலை 09.45 மணி |
| 06 | வேக நடை ஆண்/பெண் | 14/05/2011 சனிக்கிழமை மு.ப 10.00 மணி |
| 07 | 400M ஓட்டம் ஆண்/பெண் | 14/05/2011 சனிக்கிழமை மு.ப 10.30 மணி |
| 08 | தலையணை சமர் - ஆண் | 14/05/2011 சனிக்கிழமை மு.ப 11.00 மணி |
| 09 | 100M x 4 அஞ்சல் ஆண்/பெண் | 14/05/2011 சனிக்கிழமை மு.ப 11.30 மணி |
| 10 | 200M x 4 அஞ்சல் ஆண்/பெண் | 14/05/2011 சனிக்கிழமை மு.ப 11.45 மணி |
| 11 | 400M x 4 அஞ்சல் ஆண்/பெண் | 14/05/2011 சனிக்கிழமை மதியம் 12.00 மணி |
| 12 | Balloon உடைத்தல் | 14/05/2011 சனிக்கிழமை பி.ப 02.30 மணி |
| 13 | Balloon Dance | 14/05/2011 சனிக்கிழமை பி.ப 03.00 மணி |
| 14 | 800M ஓட்டம் ஆண்/பெண் | 14/05/2011 சனிக்கிழமை பி.ப 03.30 மணி |
| 15 | பப்பாசி விதை எண்ணல் | 14/05/2011 சனிக்கிழமை பி.ப 03.45 மணி |
| 16 | கயிறு இழுத்தல் | 14/05/2011 சனிக்கிழமை பி.ப 04.00 மணி |
| 17 | கூட்டுறவு குமரிகள் | 14/05/2011 சனிக்கிழமை பி.ப 05.00 மணி |
| 18 | மரதன் ஓட்டம் 10 Km ஆண் | 15/05/2011 ஞாயிறு காலை 06.30 மணி |
| 19 | மரதன் ஓட்டம் 05 KM பெண் | 15/05/2011 ஞாயிறு காலை 06.45 மணி |
| 20 | கரப்பந்தாட்டம் | 15/05/2011 ஞாயிறு காலை 08.30மணி |
| 21 | வலைப்பந்தாட்டம் | 15/05/2011 ஞாயிறு காலை 09.00மணி |

**இடம்:-**
01. சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டப் போட்டிகள் வீரசிங்கம் மண்டப முன்றிலில் இருந்து ஆரம்பிக்கப்படும்.
02. ஏனைய போட்டிகள் யாவும் யா/ மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.
போட்டியாளர்கள் உரிய நேரத்துக்கு சமுகமளிக்கவும்.
தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை.

(சி/575973)

**செயலாளர்.**




## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

தொல்புரம் மத்தியைச் சேர்ந்த திரு. திருமதி சதீர்சன் — ராதிகா
தம்பதியரின் செல்வப் புதல்வி

**ச. சேதுஜா**

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (12.05.2011) வியாழக்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அத்தை, மாமா அனைவரும் தொல்புரம் ஆதிமுத்துமாரி அம்மனின் அருள்பெற்று, சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

தொல்புரம் மத்தி, சுழிபுரம்.

அப்பா - க. சதீர்சன்
அம்மா - ச. ராதிகா

## கூட்டம்

நவாலி சென். பீற்றர்ஸ் றோ.க. த.க பாடசாலையின்பழையமாணவர் சங்கக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 7.15 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் அ.ஜெகதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**
கலைப்பீட மற்றும் அதனோடமைந்த இராமநாதன் நுண்கலைக் கழக
முதலாம், இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் வருட
முதலாம் இரண்டாம் அரையாண்டுகளுக்கான
**மீள் பரீட்சைகள் - 2011**

* பழைய பாடத்திட்டத்தின் கீழ் (Semester System) கலைமாணி மற்றும் நுண்கலைமாணிப் பட்டநெறியைப் பயின்று பாட அலகுகளில் சித்தியடையத் தவறியதால் தமது பட்டப் படிப்பை இதுவரை பூர்த்திசெய்யாத மாணவர்கள் தமது பரீட்சைகளைப் பூர்த்தி செய்ய இறுதிச் சந்தர்ப்பம் ஒன்று வழங்கப்படவுள்ளது. எனவே அவ்வாறான மாணவர்களது பரீட்சை விண்ணப்பங்கள் 13.05.2011ஆம் திகதியிலிருந்து 31.05.2011ஆம்திகதி வரை கலைப் பீடாதிபதி அலுவலகத்தினால் ஏற்றுக் கொள்ளப்படும்.
* விண்ணப்பப் படிவங்களைக் கலைப்பீடாதிபதி அலுவலகத்திலிருந்து பெற்று, ஒரு பாட அலகுக்கான மீள் பரீட்சைக் கட்டணமாக ரூபா 50/= வீதம் பல்கலைக்கழகக் காசாளரிடமோ அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்திப் பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.
* வெளிமாவட்ட மாணவர்கள் பின்வரும் விவரங்களை 021 222 3091 எனும் தொலைநகலுக்கோ அல்லது deanarts@sltnet.lk எனும் மின்னஞ்சலுக்கோ அனுப்பி வைக்கவும்.

1. மாணவர் பெயர்
2. பதிவிலக்கம்
3. சுட்டெண்
4. பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் வருடம் 1ஆம்/2ஆம்/3ஆம்/4ஆம்
5. அரையாண்டு முதலாம்/ இரண்டாம்
6. பாட அலகுகளின் குறியீட்டு எண்

*பதிவாளர்,*
*11.05.2011*

(சி/575972)

புலோப்பளை-
*அறத்தி அம்பாள் ஆலயம்*

**வைகாசி விசாக பொங்கல் விழா**

**வைகாசி மாதம் 3ஆம் நாள் (17.05.2011) செவ்வாய்க்கிழமை வழமை போல சிறப்பாக நடைபெறவுள்ளது என்பதை அடியார்களுக்கு அறியத் தருகின்றோம்**

பரிபாலனசபை
நிர்வாகம்.

(சி/575970)

## காணவில்லை

5 குட்டிகள் ஈன்ற நிலையில் கறுப்பு நிற பொமெறியன் தாய் நாய் முத்திரைச் சந்திப் பகுதியில் கடந்த 10ஆம் திகதி இரவு காணாமற்போய்விட்டது. தயவுசெய்து கண்டவர்கள் அல்லது அது பற்றிய தகவல் தெரிந்தவர்கள் அறியத்தரவும். சன்மானமாக ஒரு குட்டி வழங்கப்படும்.
தொடர்பு: ப.புவனேஸ்வரி,
*இல. 5, குமார வீதி, நல்லூர். 0214920063*

## மணல், சல்லி விற்பனைக்கு

நாகர் கோவில் மண்-7,500/-, கண்டாவளை மண்- 6,250/-, கருங்கல் சல்லி (¾) -9,250/-, கருங்கல் சல்லி (5நூல்)- 10,000/

தொடர்பு-0777780882

## வீடு வாடகைக்கு

பிறவுன் வீதியில் யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்கு முன்பாக முதலாம் மாடியில் சகல வசதிகளையும் கொண்ட வீடு வாடகைக்கு உள்ளது. நிறுவனங்களும் அலுவலகங்களும் மட்டும் விரும்பத்தக்கது.
தொடர்பு-0772336238, 0771751024

## விழிநீர் சொரிகின்றோம்



எமது நிறுவனத்தின் முன்னாள் கணக்காளராகிய

**S.P.அருளானந்தம்**

அவர்கள் 10.05.2011 அன்று இறைபதமடைந்ததையறிந்து ஆறாத்துயரில் மூழ்கியிருக்கின்றோம். ஆற்ற முடியாத அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

JSAC

பணியாளர்கள்,
யாழ். சமூக செயற்பாட்டு மையம்.

## விற்பனைக்கு

கொங்கிறீற் கற்கள் அறுக்கும் இயந்திரத்தில் பாவிக்கும் பலகைகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு-0772336238

## காணி,வீடு விற்பனைக்கு

மானிப்பாயில் 4 அறை, 2 வரவேற்பறை, 3 மலசல கூடத்துடன் கூடிய வீடும், மண்டை தீவு, வானொலி நிலையத்துக்கு அருகில் 29 பரப்பு வயற்காணியும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு
0750427501, 0718818460

## கைதவறிவிட்டது

ஏழாலையைச் சேர்ந்த வி. கணேசலிங்கம் ஆகிய நான் சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கியிலிருந்து மீளப்பெற்று வந்த நகைப் பொதியை 09.05.2011 திங்கட்கிழமை சுன்னாகத்துக்கும் உரும்பிராய்க்கும் இடையே கைதவறவிட்டுவிட்டேன். கண்டடெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும்.

சி. அருணகிரிநாதன், பிரதீபா மரக்காலை, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.

THE HALO TRUST

**பதவிநிலை கோரல் - மிதிவெடி அகற்றுனர்**

**HALO Trust** ஆனது உலகில் 10 நாடுகளில் பணிபுரியும் ஒரு பிரித்தானிய கண்ணிவெடி அகற்றும் அரச சார்பற்ற அமைப்பாகும். இலங்கையில் 2002ல் இருந்து கண்ணிவெடிகளையும் ஏனைய யுத்த வெடிபொருட்களையும் அகற்றி வருகின்றது.

இப்பணியானது உடலியல் ரீதியாக கடுமையானதென்பதை தெரிந்துகொள்வதுடன் இப்பணி பற்றிய முழுமையான உணர்வும் பொறுப்பும் உள்ளவர்கள் மீது கவனம் செலுத்தப்படும். இப்பணி சம்பந்தமான முழுமையான பயிற்சியையும் பாதுகாப்பையும் **HALO** வழங்கும்.

**இதற்காக பளை, மருதங்கேணி மற்றும் செம்பியன்பற்று ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் ஆர்வமுடைய ஆண், பெண் இருபாலாரும் தங்களது சுயவிவரக்கோவை மற்றும் ஆள் அடையாள ஆவணங்களுடன்**

**பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு**

**இம்மாதம் 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 09 மணிக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.**

(48)

## வீடு விற்பனைக்கு

திருநெல்வேலி, இல.46, வளாக வீதியில் தென்னை வருமானமும் கடை கட்டடமும், இரண்டு வீடுகளும் உள்ள நான்கு பரப்புக் காணி உடனடி விற்பனைக்கு உண்டு . தரகர்கள் தேவையில்லை.
தொடர்பு- நா.வாகீஸ்வரன்,
46, வளாக வீதி, திருநெல்வேலி.

## THE ROYAL COLLEGE OF JAFFNA

சரளமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயிலும் வரையிலான கட்டணம் 5000/= By:- ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி 423, (302) கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். Tel:- 0776751649.

## வேலை ஆள்தேவை

யாழ். நகரில் இயங்கும் தேநீர்க் கடைக்கு றொட்டி போடக் கூடிய வேலையாள் தேவை. தொடர்பு- 0771041880

## காணி தேவை

திருநெல்வேலிக்கும் பருத்தித்துறைச் சந்திக்கும் இடையில் 1½ பரப்புக்கும் 4½ பரப்புக்கும் இடைப்பட்ட வீடு கட்டக் கூடிய பொருத்தமான காணி விலைக்குத் தேவை.
தொடர்பு- 0714534717

## மரண அறிவித்தல்

*வடிவேலு நாகலிங்கம்*



அத்தியடி, பருத்தித்துறையினைப் பிறப்பிடமாகக் கொண்ட வடிவேலு நாகலிங்கம் கடந்த (11.05.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.05.2011) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப 10 மணியளவில் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆத்தியடி,
பருத்தித்துறை.

(108)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிச் சந்தேக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையளிக்கும் என்று ஏற்கனவே தகவல்கள் வெளியாகி இருந்தன.

இது தொடர்பாக சுமந்திரன் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள புலிச் சந்தேக நபர்கள் தொடர்பான தகவல் அடங்கிய அறிக்கையை நாம் அரசுடனான பேச்சுகளின்போது கையளிக்கத் தீர்மானித்துள்ளோம்.

அது தொடர்பான தகவல்களை நாம் திரட்டி வருகின்றோம். முழுமையான தகவல்கள் திரட்டப்படும் பட்சத்தில் இன்றைய பேச்சின்போது கையளிப்போம். இல்லையேல் அடுத்த கட்ட பேச்சுகளின் போது அறிக்கையைக் கையளிப்போம்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை, அவர்கள் எந்தெந்த முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர், அவர்கள் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் போன்ற தகவல்கள் உள்ளடங்கிய அறிக்கையே கையளிக்கப்பட உள்ளது - என்றார்.

அதேவேளை, அரசு - கூட்டமைப்புக்கு இடையிலான இன்றைய பேச்சின் போது, அரசு சார்பில் அமைச்சர்களான ஜி.எல்.பீரிஸ், நிமல் சிறிபால டி சில்வா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான சஜீன் வாஸ் குணவர்தன, பேராசிரியர் ரஜீவ விஜயசிங்க ஆகியோரும், கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன், செயலாளர் மாவை சேனாதிராஜா, பேச்சாளர் சுரேஷ் பிரேமச் சந்திரன், தேசியப் பட்டியல் உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

இன்றைய பேச்சுகளின்போது முக்கியமாக அதிகாரப் பகிர்வு தொடர்பில் ஆராயப்படவுள்ள அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பிலும் பேச்சு நடத்தும் என கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஒ-சி)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி வேலன் வள்ளியம்மை



துர்க்காபுரம் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலன் வள்ளியம்மை நேற்று (11.05.2011) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னவன்- மற்றும் மாதிதம்பதியரின் அன்பு மகளும், வேலனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னவன்- தெய்வி தம்பதியரின் அன்பு மருமகளும் குமாரவேல், விசயகுமார், இராசகுமார் (தெல்லிப்பழை, பிரதேச செயலக உத்தியோகத்தர்), காலஞ்சென்ற வினோதகுமார் மற்றும் சிறிதேவி, காலஞ்சென்ற நந்தகுமார் மற்றும் உதயகுமார் ஆகியோரின் பாச மிகு தாயாரும், சகுந்தலா, வேணுகுமாரி, ஜெயந்தினி, சாந்த குமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் பூபதி, சரஸ்வதி, இராசம்மா, செல்லம்மா, கிருஷ்ணகுமார், ராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், யர்சிகா, சர்மிகா, கவிராச், சங்கீர்த்தன், பவிசனா, பிரணவன், சிவாஞ்சன், லம்சனா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.05.2011) வியாழக்கிழமை பி.ப ஒரு மணியளவில் மல்லாகம் கட்டுப்பிட்டி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துர்க்காபுரம்,தெல்லிப்பழை.

தகவல்:
குடும்பத்தினர்.

### நாகலிங்கம் நடராஜா தில்லையம்பலம்



யாழ். புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், இங்கிலாந்தையும், நோர்வே (பேர்கன்) ஐயும் தனது தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட யாழ். கொழும்பு சுகாதாரத்திணைக்களத்தில் தலைமை எழுதுவினைஞராகவும் பின் மட்டக்களப்பு பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தில் நிர்வாக உத்தியோகத்தராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்ற நாகலிங்கம் நடராஜா தில்லையம்பலம் நேற்று (11.05.2011) புதன்கிழமை அதிகாலை நோர்வேயில் சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் நாகலிங்கம், நாகலிங்கம்- பொன்னம்மா தம்பதியரின் அருமை மகனும், திருமதி லீலாவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, அன்னம்மா,கந்தப்பு, கந்தையா, தெய்வானை, சோமசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், Dr.கதிர்காமநாதன் (இங்கிலாந்து), ராதா(இங்கிலாந்து), பல்வைத்தியர் Dr.சிவகணேசன்(பேர்கன் - நோர்வே), சிவானந்தி (பேர்கன் - நோர்வே), சிவகுமாரி(துரொம்சோ நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும் , விக்னேஸ்வரன், மீரா, கவிதா, பேராசிரியர் தயாளன், முருகசிம்மன் ஆகியோரின் அன்பு மாமனும், Dr.குகஜீவன், சட்டவாளர் கார்த்திகா, கோகுலன், தனுஷன், மயூரன், சேயோன் , மாளவி, சாரங்கன், சேந்தன், சாமளி, சாயகி, சீரோன், வர்ணவி, நாவலன், தேவகி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(12.05.2011) வியாழக்கிழமை நோர்வேயில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கதிர்காமநாதன்
(+440798438091б)

## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழோசைக்குக் கருத்து தெரிவிக்கையில்,

ஐ.நா. குழு இலங்கைக்குச் இலங்கை சிறிலங்கா அரசு அனுமதி மறுப்பதன் மூலம், அது எதையோ மறைக்க முனைகிறது.

அதேநேரத்தில், ஐ.நா. உறுப்பினர் என்ற முறையில், ஐ.நா. சபையை நிராகரிக்கும் உரிமை யாருக்கும் இல்லை என்பதை இலங்கை அரசுக்குப் புரிய வைக்க வேண்டிய பொறுப்பு இந்தியாவுக்கு இருக்கிறது.

ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் ஆயுத ரீதியான தலையீடுகளுக்கு, அமெரிக்காவின் நிர்ப்பந்தத்தால் இந்தியா ஆதரவு கொடுக்கும் நிலையில், இலங்கையில் மனிதஉரிமை மீறல்கள் நடைபெற்றிருப்பதாக ஐ.நா. குழு அறிக்கை கூறுவதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த விடயத்தில் இந்தியா மென்மையாக நடந்து கொள்வதில் என்ன நியாயம் இருக்கிறது? இலங்கைக்கு பாகிஸ்தான் ஆயுதம் கொடுக்கிறது என்பதற்காகவா?

அப்படியே இருந்தாலும் கூட, அதைப் பற்றிக் கவலைப்படும் அளவுக்கு இந்தியா பலவீனமான நாடு அல்ல. அதற்கு பலம் இருக்கிறது.

இலங்கையை இந்தியா பொம்மையாகக் கருதவில்லை. நெருங்கிய அண்டை நாடாக, பல விடயங்களில் ஒன்றுபட்ட கலாசாரங்களைக் கொண்ட நாடாகவே கருதுகிறோம்.

இந்த விடயத்தில், தமிழக அரசியல் கட்சிகள், குறிப்பாக தி.மு.க மற்றும் அ.தி.மு.க ஆகிய கட்சிகள், தேர்தல் நேரத்தில் மத்திய அரசை நிர்பந்திக்கத் தவறிவிட்டன. என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

இந்தக் கருத்தரங்கில், சென்னை பல்கலைக்கழக பேராசிரியர் மணிவண்ணன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலர் டி.ராஜா, லோக்ஜன சக்தி கட்சித் தலைவர் ராம்விலாஸ் பாஸ்வான், மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் சார்பில் ஸ்வபன் முகர்ஜி ஆகியோர் பங்கேற்றனர். (த)

## ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குணரட்ன நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்தார்.

இது தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்போதே நீதிமன்றம் பிரஸ்தாப உத்தரவைப் பிறப்பித்தது.

குறித்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதா அல்லது இல்லையா என்பது தொடர்பில் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிப்பது குறித்து பரிசீலனை செய்வதற்கு தேசிய அமைப்பாளர் நியமனம் தொடர்பில் தெளிவுபடுத்துமாறு கோரியே ரணில் விக்கிரமசிங்க உட்பட 75 பேருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

ஐ.தே.கட்சியின் தேசிய அமைப்பாளராக கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க அண்மையில் நியமிக்கப்பட்டமை தெரிந்ததே. (ஒ-சி)

ஆசிரியர்கள் தேவை

தரம் 4 முதல் G.C.E (O/L)வரையுள்ள வகுப்புகளுக்கு அனைத்துப் பாடங்களுக்கும் கற்பிப்பதற்கு அனுபவமும், ஆற்றலுமுடைய ஆசிரியர்கள் தேவை. இருபாலரும் விண்ணப்பிக்கலாம். நேரில்

"NEW WAY ACADEMY"
St.Patrics Road,
Jaffna.
T.P.0777033304

தவறிவிட்டது

இல.32, நக்கா வீதி, கண்டுக்குழி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடைய இ.கனகரத்தினம் (521802898X) இலக்கமுடைய தே.அ.அ. மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் என்பன தவறிவிட்டன. இவற்றைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் T.P இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

0779599227

தவறிவிட்டது

4 பவுண் கல் பதித்த தங்க அட்டியலொன்று சுன்னாகம் மயிலணி அம்மன் கோயிலுக்கும் புகையிரதக் கடவைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

[illegible]
[illegible]
கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
T.P.0776992051,
0212240654

## பங்குச்சந்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் ஜூலை மாதம் 29ஆம் திகதி வெளியிடப்படும் என்று அமெரிக்க மன்ஹட்டன் நீதிமன்ற மாவட்ட நீதிபதி ரிச்சட் ஹொல்வெல் தெரிவித்துள்ளார்.

அவரது குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில், அவருக்கு 15½ தொடக்கம் 19½ வருடங்கள் வரையில் சிறை தண்டனை விதிக்கப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது.

அவர் 60 மில்லியன் டொலர்கள் நட்டத்தைத் தவிர்ப்பதற்காக உட்சந்தை மோசடியில் ஈடுபட்டு இலாபம் உழைத்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கையைப் பூர்வீகமாக கொண்ட ராஜ்ராஜரட்ணம், அமெரிக்காவில் பங்குச் சந்தையில் பிரபல வர்த்தகராக விளங்கியதுடன், உலகின் செல்வந்தர்களின் பட்டியலில் 236ஆம் இடத்தில் இருந்தார்.

1957ஆம் ஆண்டு கொழும்பில் பிறந்த அவர், இங்கிலாந்தில் தமது பட்டப் படிப்பை பெற்றதுடன், அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் வசித்து வருகிறார். அவருக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர்.

2009ஆம் ஆண்டில் அவரது சொத்து மதிப்பு 180 கோடி அமெரிக்க டொலர் களாக இருந்தது.

அவர் பங்குச்சந்தையில் உட்சந்தை மோசடியில் ஈடுபட்டார் என கூறப்பட்டு, கடந்த 2009ஆம் ஆண்டு, ஒக்ரோபர் மாதம் 16ஆம் திகதி எப்.பி.ஐ எனப்படும் அமெரிக்க மத்திய புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டார்.

அவர் தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் ஊடாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிதி வழங்கினார் என முன்னதாகக் குற்றம் சுமத்தப்பட்டது.

எனினும் இலங்கை ஆழிப்பேரலை ஏற்பட்ட காலப்பகுதியில், அமெரிக்காவிலும் கனடாவிலும் தமிழர் புனர்வாழ்வு கழகம் தடைசெய்யப்பட்டிருந்த நிலையில், அதற்கு நிதி வழங்கியமை குற்றமில்லை என குறித்த குற்றச்சாட்டு நிராகரிக்கப்பட்டது.

எனினும் பங்கு சந்தை மோசடி தொடர்பில் 14 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

அவை தொடர்பில், ராஜ் ராஜரட்ணத்தின் தொலைபேசி உரையாடல்கள் உள்ளிட்ட பல்வேறு ஆதாரங்கள் முன் வைக்கப்பட்டு, நேற்றுமுன்தினம் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டன.

அவர் சுமார் 63.8 மில்லியன் அமெரிக்க டொலர்கள் உட்சந்தை மோசடி செய்தாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே அவர் கைது செய்யப் பட்ட 2009ஈம் ஆண்டில், இலங்கை உள்ளிட்ட உலக நாடுகள் சிலவற்றின் பங்குச் சந்தையில் வீழ்ச்சி போக்கு ஏற்பட்டமையும் சுட்டிக்காட்டத் தக்கது.

இதேவேளை தமக்கு எதிரான தீர்ப்பை ஆட்சேபித்து ராஜ் ராஜரட்ணம் மேன் முறையீடு செய்யலாம் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. (த-10)

## ஒன்றுபட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழக அரசு மீதான அழுத்தத்தை அதிகரிக்கும். எமது ஒன்றுபட்ட குரல்மட்டுமே இந்திய அரசு மீதான தமிழக மக்களின அழுத்தத்தையும் அதிகரிக்கும். ஒன்று பட்ட மக்கள் திரளின் குரல் மட்டுமே ஐக்கிய நாடுகள் சபையின் மீதும் சர்வதேச நாடுகள் மீதும் எமது செல்வாக்கினை நிலைநாட்டும். இதன் மூலமே ஈழத்துச் சொந்தங்களைப் படுகொலை செய்த கொடுங்கோலர்களைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்த முடியும் - என்றுள்ளது. (எ)

## கண்ணீர் அஞ்சலி



### அமரர் N. தில்லையம்பலம்

(ஓய்வுபெற்ற யாழ். கொழும்பு சுகாதாரத் திணைக்கள தலைமை எழுதுவினைஞரும், மட்டக்களப்பு பிராந்திய சுகாதாரத் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர்)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கிராமிய பெண்கள் அமைப்பு
(RWF, வவுனியா) சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம்(CFCD-யாழ்ப்பாணம்)

## மரண அறிவித்தல்

### பொன்னப்பா காசிப்பிள்ளை



திருநெல்வேலி முடமாவடியைப் பிறப்பிடமாகவும், இணுவில் மேற்கு, வட்டுவினியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னப்பா காசிப்பிள்ளை நேற்று(11.05.2011)புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்புக் கணவரும், சுப்பிரமணியம், யோகேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் மகேஸ்வரி, இராசேந்திரம் (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும், சிவனேசன் (கனடா), வரதராசா,சுசீலாதேவி, காந்தகுமார்(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அனுலா(கனடா), சறோஜினிதேவி சிவலிங்கம்(ஆசிரியை, யாழ். இந்துக் கல்லூரி), கலையரசி(லண்டன்) ஆகியோரின் மாமனும், கஜன், அருண (கனடா), சசிதரன், புவிகரன், பிரியங்கா, அம்பதீசன், அபிநயா, கதிசன், கஜித்தன்(லண்டன்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


"பொன்னப்பா பதி"
வட்டுவினி, அம்மன் கோயிலடி,
இணுவில் மேற்கு, இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு

ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் தெளிவான வானிலை நிலவுவதற்கான சாத்தியம் உள்ளது.

### அப்பாவிப் போராளிகள் வருடக்கணக்கில் தடுப்பில் வாடுகிறார்கள்

# மாவீரர் துயிலும் இல்லங்களைக் கிளறியெறிந்து துவம்சம் செய்வதால் எப்படி நல்லிணக்கம் மலரும்?

## கேள்வி எழுப்புகிறார் சரவணபவன் எம்.பி.

யாழ்ப்பாணம், மே 11

லட்சக்கணக்கான மக்களை முட்கம்பி வேலிகளுக்குள் அடைத்து வைத்தார்கள்; தங்களுக்கு ஆமாம் சாமி போடும் புலித் தலைவர்கள் எல்லோரையும் சுகபோகம் அனுபவிக்க விட்டுவிட்டு, ஒன்றுமறியாத அப்பாவிப் போராளிகளை வருடக்கணக்கில் தடுப்பில் வாட்டுகிறார்கள், மாவீரர்களின் துயிலும் இல்லங்களை கிளறி துவம்சம் செய்துவிட்டார்கள். இவையெல்லாமா நல்லெண்ண நடவடிக்கைகள்? இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்ந்தால் நல்லெண்ணம் எவ்வாறு மலரும்? இத்தகைய செயல்களால் தமிழர்களின் மனங்கள் வேதனையடைகின்றன.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

மூளாய் இந்து இளைஞர் மன்றத்தில் வருடாந்த விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கி வைத்தார் நாடாளுமன்ற உறுப்பினர்.

அங்கு உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையை முற்றாக நிராகரித்ததன் மூலம் அதில் உள்ள தமிழர்களுக்கான ஒட்டுமொத்த தீர்ப்பையும் நிராகரித்துள்ளார் அமைச்சர் டக்ளஸ்.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை தமிழருக்கும் சிங்களவருக்கும் இடையிலான நல்லெண்ண நடவடிக்கைகளைக் குழப்புவதாக அரசு நீலிக் கண்ணீர் வடிக்கிறது.

இரு இனங்களுக்கும் இடையில் நல்லெண்ணத்தை ஏற்படுத்த இந்த அரசு அப்படி என்னதான் செய்தது?

ஆங்கிலேயர்களுக்கு எதிராகச் சுதந்திரம் கேட்டுப் போராடிய இரு சிங்களவர்களான கெப்பிட்டிகொலவையும் வீரபுரன் அப்புவையும் அன்றைய ஆங்கிலேய ஆட்சியாளர்கள் பயங்கரவாதிகள் என்று அறிவித்தனர். இன்று, அவர்கள் இருவரும் தேசிய வீரர்கள் என்று ஜனாதிபதி பிரகடனப்படுத்தி இருக்கிறார்.

ஆனால், அதே காலப்பகுதியில் வடக்கில் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போராடிய சங்கிலியனுக்கும் பண்டார வன்னியனுக்கும் சிங்கள வரலாற்றில் இடமில்லை. அதையாவது விட்டுவிடலாம், வன்னியில் பண்டார வன்னியனின் சிலையைக் கூட விட்டு வைக்காமல் உடைத்துச் சிதைத்திருக்கிறார்கள்.

ஆங்கிலேயர்களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்த சிங்களவர்கள் தேசிய வீரர்கள், தமிழர்கள் பயங்கரவாதிகளா? இதுதானா உங்கள் இன நல்லிணக்கம்?

இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தவே முடியாத வகையில் இத்தகைய காரியங்களை எல்லாம் தொடர்ந்து செய்து கொண்டிருக்கும் இந்த அரசுதான், நிபுணர் குழுவின் அறிக்கை நல்லிணக்கத்தைக் குழப்புகிறது என்று நீலிக் கண்ணீர் வடிக்கிறது.

அபிவிருத்தியைப் பெறுங்கள் உரிமையை விட்டுவிடாதீர்கள்

தென்னிலங்கையில் இருந்து அமைச்சர்கள், அதிகாரிகள் இங்குப் படையெடுக்கின்றனர். விரைவில் ஜனாதிபதியும் இங்கு வரவுள்ளார். யார் உங்களைத் தேடி வந்தாலும் அவர்களிடம் இருந்து அபிவிருத்திக்கான அனைத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

கடந்த 30 வருடங்களாக எங்களுக்குக் கிடைக்க வேண்டியதையும் சேர்த்துச் சுரண்டியவர்கள் அவர்கள். இதுவரை காலமும் தங்கள் பகுதிகளை மட்டுமே அபிவிருத்தி செய்திருக்கிறார்கள். இங்கே ஒரு தொழிற்சாலை, உற்பத்தி நிறுவனம் என்று எதையும் அவர்கள் உருவாக்கவில்லை. இருந்த ஒரு சிலதையும் குண்டு போட்டு அழித்தார்கள். எனவே இப்போது அபிவிருத்தி என்ற பேரில் அவர்கள் கொடுப்பவற்றையெல்லாம் நீங்கள் பெறுவதற்கு முழு உரிமையும் உடையவர்கள்.

அதற்காக அவர்களுக்கு நன்றிக்கடன் செலுத்த வேண்டும் என்று நினைக்காதீர்கள். ஏனெனில் உங்களைச் சுரண்டியவர்கள் அதில் ஒரு சதவீதத்தைக் கூட இப்போது உங்களுக்குத் திருப்பித் தரவில்லை. எனவே தருபவற்றை ஒருபோதும் நிராகரிக்காதீர்கள். வாங்கிக் கொள்ளுங்கள்.



அதற்காக உரிமைகளை விட்டுக் கொடுக்காதீர்கள். உங்கள் உரிமைக்காகக் குரல் கொடுக்க வேண்டிய நேரம் வரும் போதும், உரிமைக்காக குரல் கொடுப்பவர்களை ஆதரிக்க வேண்டிய வேளை வரும்போதும் உங்களின் வரலாற்றுப் பொறுப்புக்களை நிறைவேற்றத் தவறிவிடாதீர்கள்.

தமிழர்கள் ஒருபோதும் தன் மானத்தை விட்டுக்கொடுத்ததில்லை; நீங்களும் விட்டுக் கொடுக்கமாட்டீர்கள். ஆனால் இங்கே சில அடிவருடிகள், செஞ்சோற்றுக் கடன் என்ற மாயைக்குள் உங்களை வீழ்த்தி தங்கள் அரசியல் நலன்களை நிறைவேற்றிக் கொள்ளப் பார்ப்பார்கள் அதற்கு இடம்கொடாதீர்கள் - என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன். (உ-14)

## ஆசிரியர்களின் கலந்துரையாடல்

இலங்கை ஆசிரியர் சங்க யாழ். மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் ஆசிரியர்களின் இடமாற்றங்கள், இடமாற்ற மேன்முறையீடு, நிராகரிக்கப்பட்ட மேன்முறையீடு, இதர பிரச்சினைகள், சம்பந்தமாக ஆசிரியர்களுடனான கலந்துரையாடல் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யபபட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டச் செயலாளர் இ.ஜெ. லெஸ்லி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியில் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கை பற்றிய விளக்கத்தை ஆசிரியர்களுக்கு வழங்க இருப்ப துடன் இந்நிகழ்வில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் யோசப்ஸ்ராலின் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஒ-8)

# கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க ஏற்பாடு

## விவரம் திரட்ட அமைச்சுக் குழு யாழ். வருகை

கடமை நிறைவேற்று அதிபர்களின் நிரந்தர நியமனம் வழங்குவதற்கான முன்னேற்பாடாக கல்வி அமைச்சின் அதிபர் சேவைப் பிரிவிலிருந்து குழுவொன்று யாழ்ப்பாணம் நேற்று வருகை தந்துள்ளது.

இக்குழுவுக்கு கல்வி அமைச்சரின் அதிபர் சேவைப் பிரிவின் உதவிச் செயலாளர் திருமதி ஜி. அத்துக்கோறள தலைமை வகித்து வந்துள்ளார்.

கடந்த பல வருடங்களாக வட மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் கடமை நிறைவேற்று அதிபர்களாகச் சேவையாற்றுபவர்களை அதிபர் தரத்துக்கு தரம் உயர்த்தும் நோக்கில் அவர்களின் ஆவணங்களை வலயங்கள் ரீதியாக சேகரிக்கும் நடவடிக்கையில் இந்தக் குழுவினர் ஈடுபடவுள்ளனர்.

கடமை நிறைவேற்று நியமனக் கடிதம், பிரதிக்கடமை ஏற்றல் பிரதி, சம்பள திரட்டின் பிரதி, சேவை விவரப் பட்டியல் போன்ற விவரங்களை வலயரீதியாகபெற்று அவற்றைகல்வி அமைச்சில் இக் குழுவினர் சமர்ப்பிக்கவுள்ளனர்.

நாளைமுதல் இந்தச்செயற்பாடு யாழ்ப்பாணம், வன்னி வலயங்களில்இடம்பெறும் என்று வடமாகாணக் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-8)

# மரத்துடன் மோதியது பஸ் பயணிகள் இருவர் காயம்

## காக்கைதீவில் சம்பவம்

யாழ்ப்பாணம், மே 12

பயணிகளுடன் வேகமாகச் சென்ற தனியார் போக்குவரத்து பஸ் ஒன்று வீதியில் சைக்கிளுடன் நின்றவரை விலத்திச் செல்ல முற்பட்டவேளை வீதியருகே நின்ற மரத்துடன் மோதியதனால் அதில் பயணித்த இரண்டு பயணிகள் காயடைந்து தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

சம்பவத்தில் சங்கரத்தை, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சாந்தகுமார் (வயது - 47) பழைய பூங்காவீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எஸ். அருந்ததி (வயது - 65) ஆகியோரே காயமடைந்தனர். பஸ்ஸில் முன்பக்கமும் சேதத்திற்குள்ளானது.

இந்த விபத்துச் சம்பவம் காக்கைதீவுப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் இடம் பெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து அராலி நோக்கிச் சென்று கொண்டிருந்த 789ஆம் இலக்க தனியார் பஸ்ஸே இவ்வாறு விபத்துக்குள்ளாகியது. (த-4-78)

# நிகழ்வுகள்

### பொதுக்கூட்டம்

நவாலி, மே.12

நவாலி இந்து சமய விருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளைமறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நவாலியில் நடைபெறவுள்ளது. சங்கத்தலைவர் சு.மோகனமுரளி தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் கல்வி, சமூக, சமய அபிவிருத்தி பற்றிய முக்கிய தீர்மானம் எடுப்பதுடன் புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறும். (ற-302)

### கிளிநொச்சியில் திறப்பு விழா

கிளிநொச்சி, மே.12

கிளிநொச்சி மகாசக்தி மகளிர் சம்மேளனத்தின் தலைமைக்காரியாலயத் திறப்பு விழா எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளதாகச் சம்மேளனத்தின் தலைவி திருமதி கி.சாந்தினி தெரிவித்துள்ளார்.

பெண்கள் மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் செயற்பட்டு வரும் இந்த அமைப்புக்கு நிரந்தரக் கட்டடம் ஒன்று இல்லாத நிலையில் தற்போது விவேகானந்த நகரில் கட்டடம் கட்டப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

### பயிற்சி கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே.12

யாழ். மறைமாவட்டக் கத்தோலிக்க இளையோர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு கலைக் குழுவுக் கான பயிற்சிக் கருத்தமர்வு யாழ். மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை என்.வி.ஆர். ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

எனவே கலைத்துறையில் ஆர்வமுள்ளோர் இந்தப் பயிற்சிக் கருத்தமர்வில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் புலிகள் சரணடைவதை கோத்தபாய விரும்பவில்லை

இறுதிப் போரின் போது தமிழீழ விடுதலைப்புலிகள் சரணடைவதை இலங்கை அரசு நிராகரித்ததாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது. அமெரிக்க தலையீட்டின் கீழ் இந்தச் சரணடைதலை பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஏற்றுக்கொள்ளவில்லை என்று விக்கிலீக்ஸ் குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்கா அழுத்தம் கொடுத்தபோதும் அதனை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை.

அதேநேரம் போர் இடம் பெற்ற பகுதிகளுக்கு செஞ்சிலுவை சர்வதேச குழுவினரை அனுமதிக்க இலங்கை அரசின் அமைச்சர் பசில் ராஜபக்ஷ அனுமதி மறுத்ததாகவும் விக்கிலீக்ஸ் குறிப்பிட்டுள்ளது.

நோர்வேக்கான இலங்கை தூதர், இலங்கையில் உள்ள அமெரிக்காவின் இலங்கைக்கான தூதருக்கு தகவல் ஒன்றை அனுப்பினார்.

அதில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச பொறுப்பாளர் கே.பி எனப்படும் செல்வராசா பத்மநாதன், தம்முடன் தொடர்புக் கொண்டு எவ்வித நிபந்தனையும் இன்றி சுயாதீனமான மூன்றாம் தரப்பின் ஊடாக தமிழீழ விடுதலைப் புலிகள் சரணடையத் தயாராக உள்ளதாக தெரிவித்துள்ளதாக நோர்வே தூதர் குறிப்பிட்டிருந்தார்.

செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் இலங்கைக்கான தலைமையாளர் போல் கெஸ்டேலா புலிகளின் தலைவர்கள் சரணடைவது தொடர்பில் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ விடம் தகவல் அனுப்பினார். அதற்கு கோத்தபாயவும் இணக்கம் வெளியிட்டார்.

சரணடைவதற்கு முன்னர் குறித்த புலித்தலைவர்களின் பெயர்களை தருமாறு அவர் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவிடம் கேட்டிருந்தார்.

எனினும் குறித்த பெயர் பட்டியலை நோர்வே தரப்புக்கு புலிகளின் தரப்பு வழங்கவில்லை.

இதேவேளை காயமடைந்த பொதுமக்களை காப்பாற்ற செஞ்சிலுவை சர்வதேசக் குழு போர் இடம்பெறும் பகுதிகளுக்கு அனுமதிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்ட போதும் அதற்கு அமைச்சர் பசில் ராஜபக்ச மூன்று நாள்களாக அனுமதி வழங்கவில்லை என்று அமெரிக்க தகவல் பரிமாற்றத்தில் தெரிவிக்கப்பட்டதாக விக்கிலீக்ஸ் குறிப்பிட்டுள்ளது. (தமிழ்வின்) (த-10)

# ரணில் விக்கிரமசிங்கவினால் தான் இலங்கை அரசு காப்பாற்றப்பட்டது

சர்வதேச யுத்தக் குற்றம் தொடர்பிலான சாசனத்தில் ரணில் விக்கிரமசிங்க 2002 ஆம் ஆண்டு கைச்சாத்திடாததினால் தான் இலங்கை காப்பாற்றப்பட்டுள்ளது என்று ஐக்கியத் தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

2002 ஆம் ஆண்டு ரோம் நகரில் சர்வதேச யுத்தக் குற்றம் தொடர்பிலான சாசனத்தில் அப்போதைய பிரதமரான ரணில் விக்கிரமசிங்க கைச்சாத்திடாததினால் தான் இலங்கையில் இருந்து எவரையும் யுத்தக்குற்ற நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு சர்வதேசத்திற்கு எந்தவொரு அதிகாரமுமில்லை.

ரணில் விக்ரமசிங்க 2002 ஆம் கைச்சாத்திட்டிருந்தால் சர்வதேசம் இன்று எமது முப்படையினரையோ, பாதுகாப்புச் செயலாளரையோ, ஏன் ஜனாதிபதியையோ யுத்தக் குற்ற நீதிமன்றத்தில் நிறுத்தியிருக்கும்.

எனவே ரணில் விக்ரமசிங்கவுக்கு அரசாங்கம் நன்றிக் கடன்பட்டுள்ளது என்று ஜயலத் ஜயவர்தன மேலும் தெரிவித்தார்.

(தமிழ் சி.என்.என்) (த-10)

# தமிழீழம் இருப்பதை ஒத்துக்கொள்ளும் அரசு


ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு, தமிழர்களுக்கு தாயகம் தேவையில்லை. இலங்கை அனைத்தையும் ஒன்றாக இணைத்துவிட்டோம். இதுவே சமீபகாலமாக இலங்கையில் இருக்கும் அரசுத் தலைவர்களும் அரசியல்வாதிகளும் அடிக்கடி பிரயோகிக்கும் வார்த்தைகள்.

ஆனால் வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு வெளிநாட்டவர் செல்லப் பாஸ் அனுமதியை வைத்துள்ளது இலங்கை அரசு. வடக்குக்குச் செல்வதாயின் கிட்டத்தட்ட வேறு ஒரு நாட்டுக்குச் செல்வதற்காக பெறப்படும் விசா போன்ற நடைமுறையே இன்று காணப்படுகிறது. விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்து தான் வடக்குக்குச் செல்ல வேண்டிய சூழ் நிலை காணப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சின் இணையத்தில் இத் தகவல்கள் போடப்பட்டுள்ளது.

அதில் இது குறித்து விளக்கங்கள் போடப்பட்டுள்ளபோதும் தமிழைக் கொலைசெய்து பல எழுத்துப் பிழைகளோடு வெளியிடப்பட்டுள்ளது. இங்கே காணப்படும் தகவல்களைக் கூடச் சரியான தமிழில் எழுத முடியாத நிலை காணப்படுவது பெரும் வெக்கக்கேடான விடயமாகும். ஐக்கிய இலங்கை என்று வாய் கிளியக் கத்தும் சிங்கள அரசு, வடக்குக்குச் செல்லும் மக்களுக்கு விசா வழங்கும் நடவடிக்கை மூலம், இலங்கையில் தனியான தமிழர் தாயக் பிரதேசம் ஒன்று இருப்பதை ஒத்துக்கொள்கிறது.

தமிழர்கள் வாழும் பிரதேசம் தனித்துவமானது என்பதனை இந் நடைமுறை மூலம் இலங்கை அரசு வெளிப்படுத்திவருவதாக வெளிநாட்டு வாசிகள் தெரிவித்துள்ளனர். (அதிர்வு) (த-10)



இணையச் செய்திகள்

## வெசாக் கோலாகலம்...



2600ஆவது புத்த ஜெயந்தியை முன்னிட்டு கல்கிஸ்சையிலுள்ள மன வளர்ச்சி குன்றியோருக்கான சுமகா பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறுபவர்கள் வெசாக் கூடுகளை அமைப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம். (தமிழ்மிரர்)

## கருணாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புளியந்தீவு வாவிக்கரை வீதியில் உள்ள அவரது வீட்டுக்கு சென்ற இனந்தெரியாத ஆயுததாரிகள் இந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளனர்.

இவரது வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் இவர் உணவருந்திக் கொண்டிருந்தபோது பிஸ்டல் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இவரது சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான விசாரணையை மட்டக்களப்புப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இராணுவ புலனாய்வுப் பிரிவில் இருந்து செயற்பட்டுவந்த இவர், கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற துப்பாக்கிசூட்டில் கால்கள் மற்றும் முள்ளந்தண்டு செயலிழந்தமையால் சக்கர நாற்காலியிலேயே தனது கடமையினை செய்துவந்துள்ளார்.

அண்மையில் ஆனைப்பந்தி பிள்ளையார் ஆலய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்ட போது அங்கு சென்ற இவர் தன்னையே செயலாளராகத் தெரிவு செய்ய வேண்டும் என நிர்வாகிகளை வற்புறுத்தியதையடுத்து இவர் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது.

தற்போது இவர் அமைச்சர் கருணாவின் மட்டக்களப்பு மாவட்ட இணைப் பதிகாரியாகவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மட்டக்களப்பு நகரப் பொறுப் பாளராகவும் செயற்பட்டு வந்துள்ளார்.

கடந்த சில வருடங்களுக்கு முதல் மட்டக்களப்பு மாமாங்கேஸ்வர ஆலய தீர்த்தோற்சவத்தில் வைத்து இவர் மீது ஆயுததாரிகள் துப்பாக்கி பிரயோகம் செய்த வேளை காயங்களுடன் தப்பி இருந்தார். (த-10)

## மீள்குடியேற்றக் காரியாலயம் திறப்பு

மீள்குடியமர்த்தப்பட்டுள்ள மக்களின் நலன் கருதி முல்லைத்தீவு மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட மீள்குடியேற்ற மாவட்ட காரியாலயத்தை மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். மீள்குடியமர்த்தப்பட்டுள்ள மக்கள் இந்த அலுவலகத்தினூடாக தாங்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தனக்கு அறியத்தரலாம் என நிகழ்வில் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனின் மக்களிடம் உறுதியளித்துள்ளார்.

## மேல் நடவடிக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.நாவின் சிறுவர் மற்றும் ஆயுத முரண்பாடுகள் தொடர்பான ஆலோசகர் ராதிகா குமாரசுவாமியிடம் 'இன்னர் சிற்றி பிரஸ்' கேட்டதற்கு, "இந்த விவகாரத்தை உறுப்பு நாடுகளில் ஒன்று கையில் எடுத்தால் அதனடிப்படையில் பொதுச் செயலாளர் நடவடிக்கை எடுப்பார்" என்று தெரிவித்தார். அதேவேளை, எந்த ஒரு சபையிலும் இலங்கைப் பிரச்சினைபற்றிய விவகாரம் விவாதத்துக்கு வந்தால், தான் ஒரு இலங்கையர் என்ற வகையில் அதிலிருந்து தள்ளியே இருப்பார் என்றும் ராதிகா கூறினார். (உ)

## ஐ.நா.பாதுகாப்புச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனித உரிமைகள் சபைத் தலைவர் நவி பிள்ளை, சிரியா, இலங்கை, லிபியாவில் உள்ள அரசுகள் மனிதஉரிமை மீறல்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டிய நிலையில் இருப்பதாகக் கூறினார்.

இந்த மூன்று நாடுகளிலும் ஐ.நா. அமைதிகாப்புப் படையின் நடவடிக்கைகள் இல்லை என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

இங்கு உரையாற்றிய ஐ.நாவின் அவசர நிவாரணப் பணிகளுக்கான இணைப்பாளர் வலேரி ஆமோஸ், ஐ.நாவின் போர்க்குற்ற அறிக்கையில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளைச் சுட்டிக்காட்டி, இலங்கை அரசு ஐ.நாவுடன் ஒத்துழைக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

### ஹோகன்ன உரை

பாதுகாப்புச்சபையின் இந்த அமர்வில் ஐ.நாவுக்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி பாலித கோஹன்னவும் உரையாற்றினார். தமது சொந்த மக்களைப் பாதுகாப்பதற்கான அடிப்படைப் பொறுப்பைக் கொண்டுள்ள நாடுகளின் அரசுகளின் விருப்பங்களை ஐ.நாவும் மனிதாபிமான நிறுவனங்களும் மதித்து நடக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

"தமது மக்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையே நாடுகளின் அடிப்படையான பொறுப்பு. அரசுகளின் இந்தப் பங்கை மதிக்க வேண்டும். ஏனென்றால் பொது மக்களைப் பாதுகாக்கக் வேண்டியது அவற்றின் அடிப்படைப் பொறுப்பு. ஐ.நாவும் மனிதாபிமான நிறுவனங்களும் அதற்கு உதவ வேண்டும், அதனை மதித்து நடக்க வேண்டும்.

அந்த நாடுகளின் இறைமையைக் ... உள்ள நாடுகளில் தீவிரவாதம் சவாலாக உள்ளது. இந்த நிலையில் இராணுவ நடவடிக்கைகள் தொடர்பான சட்டங்களை ஒரு முறை மீள் மதிப்பீடு செய்ய வேண்டியது இன்றியமையாதது.

இந்தச் சட்டங்கள் பலவும் அனுமானத்தின் அடிப்படையில் மோதல்களில் சம்பந்தப்படும் அரசுகளின் மரபுவழிப் படைகளையே பொறுப்புள்ள தாக்குகின்றன. ஆனால் அந்தச் சட்டங்களை தீவிரவாதிகள் ஏற்றுக் கொள்வதில்லை. இந்தப் போர்முறை சமச்சீரற்றுள்ளது.

போரின்போது, தீவிரவாதிகளையும் பொதுமக்களையும் சரியான முறையில் கண்டறிவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு" என்று ஹோகன்ன தனது உரையில் தெரிவித்தார்.

அவர் இவ்வாறு உரையாற்றிய போதும், ஐ.நா. அதிகாரிகள் தொடர்ந்தும் இலங்கை அரசு மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியதால் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் இருந்து வெளிநடப்புச் செய்தார். எனினும் அவர் வெளி நடப்புச் செய்ததற்கான காரணம் குறித்து உத்தியோகபூர்வத் தகவல்கள் ஏதும் வெளியாக வில்லை. (உ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பே தமிழர்களின் ஏக பிரதிநிதி உள்ளூராட்சித் தேர்தல் நிரூபித்துவிட்டது

## அரியநேத்திரன் எம்.பி. கூறுகிறார்

கொழும்பு,மே 12

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் கூட்டமைப்பினர்தான் என்பதை நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நாம் நிரூபித்துக் காட்டியுள்ளோம். இதனை நன்கு அறியாதவர்களே தமிழ் மக்களின் பிரதிநிதிகள் கூட்டமைப்பினர் இல்லை என்று கருத்துத் தெரிவிக்கின்றனர்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் நேற்று 'உதயனு' க்குத் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அலரிமாளிகையில் பத்திரிகை மற்றும் அச்சு ஊடகங்களின் ஆசிரியர்களைச் சந்தித்துப் பேசுகையில், ''தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் கூட்டமைப்பினர் அல்ல எனக்கூறிய கருத்து தொடர்பாகக் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த நாடாளுமன்றத் தேர்தல்களிலும் சரி, உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களிலும் சரி கூட்டமைப்பினர்கள்தான் தமது பிரதிநிதிகள் என்பதை தமது ஏகோபித்த வாக்குகள் மூலம் தமிழ்மக்கள் அரசுக்கும், உலகத்திற்கும் உணர்வு பூர்வமாக வெளிப்படுத்தியுள்ளனர்.

மிகவும் பலம் பொருந்திய எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியைப் பின்தள்ளி நாம் உள்ளூராட்சித் தேர்தலில் இரண்டாம் இடத்தைக் கைப்பற்றினோம்.

ஏனைய கட்சிகளைத் திருப்திப்படுத்துவதற்காகவும் தமிழ் மக்களுக்கு விரைவில் அரசியல் தீர்வு ஒன்று கிடைக்கக் கூடாது என்ற நோக்கில் காலத்தை இழுத்தடிப்பதற்காகவுமே ஏனைய கட்சிகளுடன் பேச்சுகளை நடத்தத் தீர்மானித்துள்ளனர்

தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்றுமே நாம் தான் என்பதில் எந்தவித மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. நாம் அதனை இரண்டு தடவைகள் நிரூபித்துக் காட்டியுள்ளோம். எதிர்வரும் தேர்தலிலும் நாம் அதனை நிரூபித்துக் காட்டுவோம். - என்றார் அவர். (த-சி)

## புனர்வாழ்வு ஆணையாளர் பதவி உயர்வு

புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க நேற்று முதல் மேஜர் ஜெனரலாகப் பதவியுயர்த்தப்பட்டுள்ளார். முப்பது வருடகால இராணுவ சேவை அனுபவத்தைக் கொண்டுள்ள மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க, வன்னி இறுதிக்கட்ட யுத்தத்தின் போது வவுனியா கூட்டுப் படைத்தலைமையகத்தின் முக்கிய பொறுப்பொன்றை வகித்திருந்தார்.

அதன் பின் கடந்த வருடம் இராணுவ தடுப்புக் காவலில் இருக்கும் முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களை புனர்வாழ்வுக்குட்படுத்தும் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகமாக நியமிக்கப்பட்டிருந்தார்.

அதன் போது முன்னாள் போராளிகள் மற்றும் இராணுவத்தினருக்கிடையில் நல்லுறவைக் கட்டியெழுப்புவதில் வெற்றி கண்டதன் காரணமாகவே அவர் நேற்று முதல் மேஜர் ஜெனரலாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (த-10)

# புதிய பிரதம நீதியரசர், ஆணைக்குழுத் தலைவர் பரிந்துரைக்கு நாடாளுமன்றப் பேரவை கூடுகிறது

கொழும்பு, மே 12

புதிய பிரதம நீதியரசராக உச்ச நீதிமன்ற நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்காவை நியமிப்பதற்கும், இலஞ்ச ஊழல் மோசடி விசாரணை ஆணைக்குழு மற்றும் அரச சேவைகள் ஆணைக்குழு ஆகிய இரண்டுக்கும் தலைவர்களையும் உறுப்பினர்களையும் பரிந்துரை செய்வதற்கும் நாடாளுமன்றப் பேரவை இன்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்குக் கூடவுள்ளது.

அடுத்த பிரதம நீதியரசராக திருமதி ஷிராணி பண்டாரநாயக்காவின் பெயர் ஜனாதிபதியால் பரிந்துரை செய்யப்பட்டு நாடாளுமன்ற பேரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், இலஞ்ச ஊழல் மோசடி விசாரணை ஆணைக்குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதியரசர் ஜகத் பாலபட்ட பெந்தியின் பெயரும் அரச சேவைகள் ஆணைக் குழுவின் தலைவராக பேராசிரியர் தயாசிரி பர்ணாந்துவின் பெயரும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

இந்த இரு ஆணைக்குழுக்களுக்கும் நியமிக்கப்படவுள்ள உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியல் ஏற்கனவே நாடாளுமன்றப் பேரவைக்கு அனுப்பப்பட்டுள்ளது எனவும், நாடாளுமன்றப் பேரவையின் இன்றைய கூட்டத்தின் பின் அவர்களின் பெயர்கள் வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சபாநாயகர் சமல் ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெறும் இன்றைய நாடாளுமன்ற பேரவைக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் டி.எம். ஜயவர்தன, நியமன எம்.பிக்களான ஏ.எச்.எம். அஸ்வர், டீ.எம். சுவாமிநாதன் ஆகியோர் பிரசன்னமாயிருப்பர். (த-சி)

# யாழ். தளபதி ஹத்துருசிங்கவை சந்தித்தது ஐ.நாவின் தூதுக்குழு



ஐக்கிய நாடுகள் சபையின் தூதுக்குழு ஒன்று யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவை சந்தித்துப் பேசியது.

இச்சந்திப்பு பலாலியிலுள்ள தளபதியின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இந்தக் குழு யாழ். குடாநாட்டில் நடைபெறும் கண்ணிவெடி மற்றும் மனிதாபிமான பணி பற்றிய பிந்திய நிலைவரத்தை அறிந்து கொள்வதற்காகவே யாழ்ப்பாணம் சென்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்திப்பின்போது யாழ். யூ.என்.எச்.சி.ஆர். கள அலுவலகத்தின் தலைமை அதிகாரியான இந்துமதி மோகனதாஸ், சிறுவர் பாதுகாப்பு நிபுணரான அல்பிறட் முட்டிட்டி, ஐ.நா. அலுவலகத்தின் யாழ்ப்பாணத்துக்கான பாதுகாப்பு இணைப்பாளர் டமஸகஸ் மாச்சரி ஆகியோருக்கு தளபதி ஹத்துருசிங்க யாழில் கண்ணிவெடி அகற்றும் பணியின் முன்னேற்றம் குறித்து விளக்கமளித்தார்.

# குற்றவாளிக்கு மரணதண்டனை

தந்தையும் மகனையும் கொலை செய்த குற்றச் சாட்டில் ஒருவருக்கு புத்தளம் மேல் நீதிமன்றம் நேற்று மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

1999 ஆம் ஆண்டு புத்தளத்தில் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றது. இது தொடர்பில் அப் பகுதியைச் சேர்ந்த அனுரா (வயது 40) என்பவர் கைது செய்யப்பட்டார். இவருக்கு எதிராகப் புத்தளம் மேல் நீதிமன்றத்தில் வழங்குத் தொடரப்பட்டது.

இந்தக் கொலை வழக்கில் சந்தேகநபர் குற்றவாளி என இனங் காணப்பட்டதையடுத்துப் புத்தளம் நீதிமன்றம் நேற்று அவருக்கு மரண தண்டனை விதித்தது.

மகனைக் கொலை செய்தார் என்பதற்கான சரியான ஆதாரங்கள் இல்லாத போதும் தந்தையின் கொலைக்கு இவருக்கு மரண தண்டனை வழங்கப் பட்டது.

தனிப்பட்ட தகராறு காரணமாகவே இந்தக் கொலை இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படா விட்டால் ஆயுள் தண்டனை வழங்கப்பட வேண்டும் என நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்திருந்தார். (த-140)

BEACON - யாழ். நகர்
(வெலிங்டன் சந்தி அருகில்)
மீண்டும் யாழ். நகரில்...
நாடகமும் அரங்கியலும் T.J. சுதன் B.A(Hons)
A/L 2012, A/L 2013
ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்.
A/L 2011 எதிர்பார்க்கை வினாக்களை உள்ளடக்கிய paper class
ஆரம்பம்:- 14.05.2011 சனி காலை 9 மணி
(சனி, ஞாயிறு வகுப்புகள்)

ஆர்க் என்ரப்பிறைசஸ்
நம்பமுடியாத விலையில்...


ஒரு வருட உத்தரவாதம்
850 W இலிருந்து 150 KW வரையான மின்சாரத் தேவைகளைப் பூர்த்திசெய்கிறது.
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

A/L கிறிஸ்தவ நாகரீகம்
கிறிஸ்தவம் M. ஜோன்சன்
கற்பிக்கும் இடங்கள்
* D.M.I - யாழ்ப்பாணம்
* Bitsmans - மானிப்பாய்
* ஐடியல் - சண்டிலிப்பாய்.

உடனடி வேலைவாய்ப்பு
1. Office Assistant (male)
தகைமை:
க.பொ.த. சாதாரண பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்
2. Graphic Designer (male) & Video Editor

தகைமை:
Ms Office, Photoshop, CorolDrow, Video Editing மற்றும் Graphic Desining Software களை கையாளத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
நிரந்தர வேலை வாய்ப்பு (EPF, ETF) உள்ளடங்கலாகக் கவர்ச்சிகரமான சம்பளம்
தகைமையுடையோர் தமது விண்ணப்பங்களை 7 நாள்களுக்குள் கீழ்க்குறிப்பிட்டுள்ள முகவரியில் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும்.
NALIN Information Technologies Pvt Ltd.
Nalin information Technologies
195/ 4, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.
[illegible]
(48,20,50)

NETWORK WORKSHOP Free Course Fee (20 Person Only) DATE 17 & 18
Module : Cisco-CCNA, MTA
Wired /wireless network, Router configuration, Monitoring & Security,
MCS Become Cisco, Network Engineer!
Supported By UNDP/JRRP For Details 0772395895
324,Palaly Road,Parameswara Junction

கணினித் துறையில் மாபெரும் புரட்சி
கணினி Hardware மற்றும் Network கல்விக்கு பதிவினை மேற்கொண்டு P4 கணினி ஒன்றினை எடுத்துச்செல்லுங்கள்
சுயமாகக் கணினியைப் பொருத்துதல், Install செய்தல், Assemble செய்தல், பிரச்சினைகளை இனங்கண்டு தீர்வை மேற்கொள்ளல் மற்றும் வைரஸ் பிரச்சினைகளை தீர்த்து வைத்தல் போன்ற நூற்றுக்கும் மேற்பட்ட நுணுக்கங்களை கற்றுக் கொள்ளுங்கள். 25.05.2011 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்பவர்களுக்கு 4GB Pendrive இலவசமாக வழங்கப்படும்.
பதிவுகளுக்கு முந்துங்கள்.
ELITE Computer & Business College
இல:1/5, மடம் வீதி, (குழந்தையேசு பின் வீதி)
யாழ்ப்பாணம். 021 4922396

IT DEGREE
University of Colombo

மிகக் குறைந்த கட்டணம், சிறந்த பெறுபேறு, பரீட்சைகள் யாழ் பல்கலைக்கழகத்தில்,
மேலதிக கட்டணம் இன்றி
BCS, Computer Engineer(USA), IELTS /TOEFL
புலமைப்பரிசில், பதிவுகளுக்கு நேரில் Closing Date - 15.05.2011
கொழும்பு பல்கலைக்கழகத்திடமிருந்து சிறப்பு விருது பெற்ற நிறுவனம்
MCS SMS your name & course to 0772 395 895 & get Schol.
324,Palaly Road,Parameswara Junction www.mcsitcampus.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில்12.05.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.